169567

# நவசக்தி

ஆகஸ்ட்

194

JL
m211,N06
N 36 11
169567



ஆகஸ்டு 1944

விலை அணா 8

R. 210

★

# 1936 ஜனவரியில்
## வெளிப்படும் விசேஷமான
# "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"
## ரிகார்டுகள்!

★

# "தொண்டரடிப்பொடி ஆழ்வார்"
## நாடக ஸெட்டும்

## கோலாட்டம் பாட்டுகளும்
(ஷைனிங் ஸ்டார்ஸ் ஸொஸைடியாரால்)

தஞ்சை டாக்டர் ஆ. ஜோதிபாண்டியன்,
ஸ்ரீமதி திருகோகர்ணம் மாணிக்கம்,
ஸ்ரீமான் மணியும், அவரின் ஆர்செஸ்ட்ரு,
மைசூர் பாலெஸ் ரீட் பாண்ட்

★

முதலியவர்களின் தனி ரிகார்டுகளும்
இவ்வெளியீட்டி லிருக்கின்றன

இம்மாதத்திய புதிய கேட்லாகில் மற்ற
விவரங்களை காணலாகும். இந்த
கேட்லாகை இப்போதே பெறுவீர்!

**தி கிராமபோன் கம்பெனி**
**லிமிடெட்**

45, ஸௌத் பெரேட், பெங்களூர்.

## சிறந்த போட்டோக்கள் எடுப்பதற்கு—




# "வெரிக்ரோம்"

**—நீங்கள் பிசகி விட்டாலும் அதைத் திருத்தி சரியான போட்டோவையே எடுக்கக்கூடிய பிலிம்!**

நீங்கள் போட்டோ எடுப்பதில் கைதேர்ந்தவராக இராவிட்டாலும் "வெரிக்ரோம்" பிலிமை உபயோகித்தால் சரியான போட்டோக்களே எடுப்பது நிச்சயம் - உங்களுக்கு உதவி செய்வதற்கென்றே விசேஷ முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இது இன்னும் உயர்ந்ததாகவே கிடைக்கிறது. கண்ணாடிபோல் தெளிவாகவிருக்கும். அதிக காப்பிகள் எடுக்கலாம். இரண்டு பூச்சுடன் கூடியதால், நல்ல வெளிச்சத்திலும் மந்தாரமாயுள்ள சமயங்களிலும் சரியான படமெடுக்கும். வெளிச்சம், நிழல் இவைகளைச் சரியானபடி சித்தரிக்கும். எக்ஸ்போஷர் கொடுப்பதில் சில சமயங்களில் பிசகி விடுவது யாவருக்கும் சகஜம். ஆனால் "வெரிக்ரோம்" உபயோகித்தால் அநேகமாக எல்லா போட்டோக்களும் வெற்றி தான். காரணம், இது போன்ற விசேஷ முறையில் தயாரிக்கப்படும் படம் வேறொன்றில்லை.

உங்கள் கோடாக் வியாபாரியிடம் கேளுங்கள்

**கோடாக் லிமிடெட்**

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

பம்பாய் - கல்கத்தா - லாகூர் - மதராஸ்

---

## ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ்

இன்ஷியூரன்ஸ் சொஸைடி லிமிடெடில்

இன்ஷியூர் செய்து கொள்ளுங்கள்

1943 டிசம்பர் 31 முடிய

ஒரு வருஷத்திய வியாபாரம் 5 கோடிக்கு மேல்.

லைப் அஷ்யூரன்ஸ் நிதி 5 கோடி 39 லட்சம்.

நடப்பு முதலில் மொத்தத் தொகை

24 கோடி 82 லட்சம்.

ஏஜன்ஸிக்கு விண்ணப்பம் செய்க

—விபரங்களுக்கு—

பிராஞ்சு மானேஜர்

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ்

இன்ஷியூரன்ஸ் சொஸைடி லிமிடெட்.,

107 அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.



## 3 வருட நோய்

**3 நாளில் குணப்பட்டது**

சென்ற 3 வருடங்களாக என் மனைவிக்கு மாதா மாதம் வீட்டுக்கு விலக்கமான பொழுது ஏற்பட்ட வயிற்றுவலி பல மருந்துகள் கொடுத்தும் குணமாகாமல் **"லோத்ரா"**வை 3 நாள், 6 வேளை கொடுத்தவுடன் குணப்பட்டது.

**எம். என். ஷெரீப்,**
பெரிச்சிபாளையம்.

# 'லோத்ரா'

கர்ப்பாசய ரோக நிவாரணி

**கேஸரி குடீரம் லிமிடெட் ராயப்பேட்டை, மதராஸ்.**

தமிழ்நாடு பிராஞ்சு: **மேல கோபுரவாசல், மதுரை.**

---

## சக்திதாசன் சுப்பிரமணியன்

### எழுதிய புத்தகங்கள்

| | |
|---|---|
| பாரதி லீலை | 0 - 5 - 0 |
| சிற்பியின் கனவு | 0 - 4 - 0 |
| ஒன்றுமில்லை சும்மா | 0 - 5 - 0 |

### கிடைக்குமிடம்

# நவசக்தி காரியாலயம்

மயிலாப்பூர் சென்னை

---

# இண்டோ கமர்ஷியல் பாங்கி, லிமிடெட்.

ஆபீஸ்கள்:— சென்னையிலும், மற்ற முக்ய நகரங்களிலும்.

**1944 ஞு ஜுன் மாதம் 30ந் தேதி யன்றுள்ள கணக்கு விபரம்**

### பொறுப்புகள்

| | | | | |
|---|---|---|---|---|
| கோரப்பட்டு செலுத்தப் பட்டது | ... ரூ. | 18,75,000 | 0 | 0 |
| ரிஸர்வ் நிதி | ... ,, | 2,50,000 | 0 | 0 |
| வருமான வரிசூபர்வரிக்கு ஏற்பாடு | ... ,, | 1,00,000 | 0 | 0 |
| டிபாசிட்டுகள் | ... ,, | 204,98,403 | 2 | 5 |
| பாங்கு பற்று | ... | இல்லை. | | |
| வசூலாக வேண்டிய பில்லுகள் | ... ரூ. | 10,66,178 | 9 | 6 |
| டிராப்ட்டுகள், T,Tகள் கொடுபட வேண்டியது | ... ,, | 2,52,597 | 0 | 10 |
| கிளைஸ்தாபன பற்று வரவு தீர்வும், சில்லரை இனங்களும் | ... ,, | 4,04,502 | 0 | 8 |
| (லாப நஷ்டக் கணக்கு) | | | | |
| சென்ற வருஷக் கணக்கிலிருந்து கொண்டு வரப்பட்டது | ... ,, | 5,111 | 3 | 1 |
| பிரஸ்தாப அரை வருஷத்திய நிகர லாபம் | ... ,, | 22,1,292 | 8 | 1 |
| மொத்தம் | ரூ. | 246,73,084 | 8 | 7 |

### ஐவேஜுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| கட்டன்பற்று உண்டியல் கொடுக்கல் வாங்கல் | ... ரூ. | 1,12,35,?94 | 8 | 4 |
| பாங்கியின் கட்டட பெறுமானம் | ... ,, | 20,179 | 3 | 5 |
| கஜானா பெட்டி நாற்காலி மேஜை பெறுமானம் | ... ,, | 66,601 | 15 | 4 |
| கணக்குப் புத்தகங்கள் கடுதாசி முதலிய இருப்பு வகையரா | ... ,, | 45,020 | 5 | 4 |
| வசூலிக்கப்படவேண்டிய பில்கள் | ... ,, | 10,66,178 | 9 | 6 |
| சில்லரை இனங்கள் | ... ,, | 4,05,310 | 8 | 0 |
| முதலீடுகள் | ... ,, | 49,16,288 | 5 | 4 |
| கையிருப்பிலும், பாங்கிலும் உள்ள ரொக்கம் | ... ,, | 69,18,211 | 1 | 4 |
| மொத்தம் | ரூ. | 246,73,084 | 8 | 7 |

டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி - சேர்மன்
S. N. N. சங்கரலிங்க அய்யர், - மானேஜிங் டைரக்டர்.

P. S. சுப்பிரமண்ய அய்யர் B A, G.D. A, R. A.
ரெஜிஸ்டர்ட் அக்கவுண்டண்ட் ஆடிட்டர்

**டைரக்டர்கள்**

R S A சங்கர அய்யர்
R. விச்வநாதன்
V. வெங்கடராமன்
K. சிவஸ்வாமி

உங்களுக்கு உவகை ஊட்ட

**விரைவில் வருகிறது**

லியோ பிலிம்ஸாரின்

தமிழ் புராணப் படம்

# பூம்பாவை

டைரெக்ஷன்

டி. பாலாஜி சிங்

ஸ்டுடியோ

நியூடோன்

| | | |
|---|---|---|
| யு. ஆர். ஜீவரத்தினம் | ... | கே. ஆர். ராமசாமி |
| கே. ஆர். செல்லம் | ... | கே. சாரங்கபாணி |
| ஏ. ஆர். சகுந்தலா | ... | டி. ஆர். ராமச்சந்திரன் |
| டி. ஏ. மதுரம் | ... | என். எஸ். கிருஷ்ணன் |

முதலியவர்கள் நடிப்பது

| வசனம் : | பாட்டு : | நடனங்கள் |
|---|---|---|
| ஏ. ஏ. சோமயாஜுலு | மாரியப்ப ஸ்வாமிகள் | நடராஜ் & பார்டி |

விநியோகஸ்தர்கள்

**கந்தன் & கம்பெனி**

கோயமுத்தூர், மதுரை, கோட்டயம்

சென்னை நகர உரிமையாளர்கள்

**ஸ்ரீ சாயா & கம்பெனி**

டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் & எக்ஸிபிடர்ஸ்

145, பிராட்வே, சென்னை.

மைசூர் சமஸ்தானம் (பங்களூர் தண்டு உள்பட) & வட தென் கன்னடம் ஆகிய இடங்களுக்கு

மைசூர் பிலிம் கார்பொரேஷன்

காந்திநகர். பெங்களூர்.



சிலம்பு 24 | நவசக்தி | பரல் 2

ஆசிரியர் சக்திதாசன் சுப்பிரமணியன்


## பொருள் அடக்கம்

### ஆகஸ்ட்

### 1944


| | | | பக்கம் |
|---|---|---|---|
| மணிக்கூண்டு | | ... | 7 |
| பாகீரதி | " மாலினி " | ... | 12 |
| மதிப்புரை | | ... | 14 |
| இந்தியப் பொருள் முன்னேற்ற திட்டம் | அ. முத்தையா, எம். ஏ. | ... | 17 |
| வருங்காலத்தில தமிழ் இலக்கியம் | சக்திதாசன் சுப்பிரமணியன் | ... | 24 |
| யுத்தம் எபபோது முடியும் | கே. அருணசலம் | ... | 29 |
| திரும்பி வருமா ? | " கிச்சு " | ... | 33 |
| வாசகர் மனங்கவர்வது எப்படி | எஸ். சுப்பிரமணியம் எம்.ஏ. | | 38 |
| ராயா என் சகோதரி | பிரோடோபோபோவா | ... | 44 |
| கோபம் ஏன் ? | ஸி. வி. ராஜகோபாலாச்சாரி | ... | 49 |
| எழுத்தாளர் எழுச்சி | " கந்தருவா " | ... | 51 |
| கடைசி இதழ் | சு. ரா. | ... | 53 |
| புகசெவ்புரட்சி | புஷ்கின் | ... | 57 |
| சானகி | ராஜாராவ் | ... | 65 |


'நவசக்தி'யிலுள்ள கதைகளில்வரும் பெயர்கள் யாவும் கற்பனையே

புதியசாமான்கள்!

கண்ணைக் கவரும் ரிப்பன்கள், விளையாட்டு சாமான்கள், சிலேட்டுகள் முதலிய எல்லாம் எங்களிடம் கிடைக்கும்!

SOVEREIGN BRAND

ஒரு விஷயத்தில் ஜாக்கிரதை! சாவரின் பிராண்டை கவனித்து வாங்குங்கள்!

**MIDDLETON & Co.,**
**Sole Agents for Premier Traders,**
**11/12 First Line Beach,**
**MADRAS.**

# மணிக்கூண்டு

மகாத்மா காந்தி சிறையிலேயே இருந்தது சில பேர்வழிகளுக்கு அனுகூலமாயிருந்தது. ஆனால் பாருங்கள், சனியன் அவர்கள் பங்கில் இருக்கிறான். மகாத்மா விடுதலை பெற்றார். விடுதலையான மனிதர் சும்மா இருக்கக்கூடாதா? சிறிது சிறிதாகப் பத்திரிகைகளுக்கு அறிக்கை விட ஆரம்பித்தார். அரசியல் நிலைமைகளைத் தெளிவு செய்யத் தொடங்கினார். ஆகஸ்டு கலவரங்களை எல்லாம் கண்டித்தார். அரசியல் முட்டுக்கட்டையை நீக்கத் தாம் விரும்புவதாகத் தெரிவித்தார். அதற்கான சில யோசனைகளையுங் கூறினார். காங்கிரஸ்-லீக் ஒற்றுமைக்கு முன் வந்தார். முஸ்லீம்களுக்குச் சுய நிர்ணய உரிமை உண்டு எனத் தெரிவித்தார். தேசிய சர்க்கார் அவசியம் என்றார். தேசிய சர்க்கார் அமைத்தால் யுத்தத்தில் ஒத்துழைப்பதாக வாக்களித்தார். இவ்வளவு தூரம் நிலைமையைத் தெளிவாக்கினார். உலக நீதி மன்றத்தில் இந்தியாவின் மானத்தைக் காத்தார்.

இந்த மாதிரி மகாத்மா செய்தது கண்டு சிலருக்கு மூளை கலங்கிவிட்டது. ஜன்னிகண்டுவிட்டது. முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவர் இருவர். ஒன்று அமெரி கம்பெனி. மற்றொன்று ஆகஸ்டு வாலாக்கள்.

மகாத்மாவின் ஆணை என்றும், காங்கிரஸின் கட்டளை என்றும், தேசத்தின் கௌரவம் என்றும் சொல்லி மக்களை நாச வேலைக்குத் தூண்டினார்கள். யார்? ஆகஸ்டு வாலாக்கள்! ஏராளமான இளைஞர்கள் தீயிலே குதித்தார்கள். தாங்கள் எதிலே குதிக்கிறோம் என்பது தெரியாமல் கொதிக்கும் எண்ணெய்க் கொப்பறையில் குதித்தார்கள். தேசத்தின் அரசியல் நிலைமை பிறபோக்கிட்டது. இந்த நிலை யாருக்குப் பயனளித்தது? யுத்த நிலையை சாதகமாக உபயோகித்துத் தங்கள் "கரன்ஸி தாள்களை"ப் பெருக்கிய தேசியப் பணத் தொப்பைகளுக்கு!

மகாத்மாவின் விடுதலையினால் இன்று அரசியல்விமோசனம் அரும்புகிறது. அது கண்டு மேற்படி பேர்வழிகளுக்கு மயக்கம்!

மகாத்மா ஒரு பாஸிஸ்டு என்றும், ஜப்பானின் நண்பன் என்றும் பிரசாரம் செய்த அமெரி கம்பெனியின் 'குட்டு'

அம்பலமாகி விட்டதல்லவா! ஆதலினாலே அவர்களுக்கு மயக்கம்.

### நாடக ஒத்திகை

இந்த மாதிரியான சுப முகூர்த்தத்திலே 'அமெரி பார்ய்ஸ் கம்பெனி'யின் நாடக ஒத்திகை நடந்தது. எங்கே? லண்டன் காமன்ஸ் தியேட்ரில்!

நாடகம் நடத்தியவர்கள் உலகத்தின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டதாக நினைத்துக்கொண்டு தங்கள் தலையில் மண்ணைப் போட்டுக்கொண்டார்கள்.

### ராஜாஜி திட்டம்

ராஜாஜியின் திட்டத்துக்கு மகாத்மா ஆதரவு தந்திருக்கிறார். மகாத்மாவும் ராஜாஜியும் சேர்ந்து நீட்டியுள்ள இந்த ஒற்றுமைக் கையை பிடிப்பதா விடுவதா என்று ஜின்னா தவிக்கிறார்!

ஜின்னாவின் தவிப்பு ஒருபுறம் இருக்கட்டும். அவரைவிட அதிகம் தவித்து ஐஸ் கட்டியாய் உருகும் பிரகிருதிகள் நிறைய நம் தேசத்தில் இருக்கிறார்கள்.

'ஐயையோ! தேசத்தைப் பிரிப்பதா? முஸ்லிம்களுக்கு விட்டுக்கொடுப்பதா? என்ன! காந்தி கூட இப்படிப் பண்ணிவிட்டாரே! ஹிந்துக்களே!' என்று ஓலமிடுகிறார்கள். இவர்களுக்கு மேலே ஒரு குரல் ஓங்கி ஒப்பாரி வைக்கும் பிரமுகர்கள் இங்கிலாந்தில் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் உள்ள பீதி என்ன தெரியுமா? எங்கே, காங்கிரஸும் லீகும் ஒன்றாய் விடுமோ என்பதுதான். அப்படி ஒன்றாகி விட்டால் அப்புறம் சாக்குப் போக்குச் சொல்லி உலகத்தை ஏமாற்ற முடியாதல்லவா!

### அப்படி என்ன?

அம்படி என்ன ராஜாஜியின் திட்டம் சொல்கிறது?

இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையை முஸ்லிம் லீக் ஆதரிக்க வேண்டும். தற்காலிகமாக தேசிய சர்க்கார் அமைக்கும் விஷயத்தில் காங்கரஸுடன் ஒத்துழைக்க வேண்டும்.

யுத்தம் முடிந்த பிறகு ஒரு கமிஷன் நியமிக்கப்படும். அந்தக் கமிஷனின் வேலை என்ன என்றால்? இந்தியாவின் வடமேற்கிலும் கிழக்கிலும் சேர்ந்தாற்போல முழுதும் பெரும்பான்மையாக முஸ்லீம்கள் வசிக்கும் ஜில்லாக்களின் எல்லையை நிர்ணயிப்பது.

அந்த வேலைக்குட்பட்ட மக்கள் ஹிந்துஸ்தானத்துடன் சேர்ந்திருப்பதா, பிரிந்து போவதா என்ற விஷயத்தை சர்வஜன ஓட்டுமூலம் தீர்மானிப்பது.

ஓட்டு எடுக்குமுன் அது சம்பந்தமாகத் தங்கள் அபிப்பிராயத்தை எடுத்துப் பிரசாரம் செய்ய எல்லாக் கட்சியினருக்கும் உரிமையுண்டு.

பிரிந்து போவதானால் இராணுவம், வர்த்தகம், போக்குவரவு இவை சம்பந்தமாகப் பரஸ்பர ஒப்பந்தம் செய்து கொள்வது.

ஒரு பிரதேசத்திலுள்ள ஜனங்கள் தாங்களாகவே விரும்பினால் தான் வேறு பிரதேசத்துக்கு மாற்றலாம்.

இந்தியாவின் பூரண ஆட்சி, அதிகாரம் இவற்றைப் பிரிட்டன் இந்தியாவிடம் ஒப்புவிக்கும் போது இந்த ஒப்பந்தம் இரு சாராரையும் கட்டுப்படுத்தும். இதுதான் ராஜாஜியின் திட்டம்.

### ஜின்னாவின் ஆட்சேபம்

இந்தத் திட்டத்தை ஆட்சேபித்து ஜின்னா கிளப்பியுள்ள வாதங்களையும் நாம் கவனிக்கத்தான் வேண்டும்.

இந்தத் திட்டத்தை முதன் முதல் சமர்ப்பித்தவர்கள் என்ன சொன்னார்கள்? இதை அப்படியே முழுதும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அல்லது அப்படியே நிராகரிக்க வேண்டும் என்றார்கள். கிரிப்சும் அப்படித்தானே சொன்னார்! அதுகண்டு 'ரோசம்' உண்டாகித்தானே நாம் கிரிப்சு திட்டத்தை நிராகரித்தோம். அதே தோரணையில் நாமும் ஜின்னாவுக்குச் சொன்னால் ஜின்னாவுக்கு மாத்திரம் 'ரோசம்' வராதா? அப்புறம் வெள்ளை ஏகாதிபத்திய வாதிகளுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம். சிறுபான்மையோர் விஷயத்திலே ஹிந்து சமூகமோ காங்கரஸோ தாராளமாக பெரிய மனசுடன் நடந்து கொள்ளும் என்பதற்கு என்ன அத்தாட்சி?

சுய நிர்ணய உரிமை இருக்கிறதே, அது என்ன கேட்கத் தகாத ஒன்றா? கொடுக்க முடியாத ஒன்றா?

ஆறு ஷரத்துகள் கொண்ட ராஜாஜி திட்டத்தை நன்கு ஆராய்ந்து பார்த்தால் அதிலே ஒன்றுமேயில்லை. ஆகாகா! முஸ்லிம்களுக்கு அள்ளிக் கொடுத்து விட்டார் ராஜாஜி என்று குதிக்கிறார்களே ஹிந்து மகாசபைக்காரர்கள்! கொஞ்சம் கவனியுங்கள்.

யுத்தம் முடிந்ததும் ஒரு கமிஷன் நியமிக்கப்படும். அந்தக் கமிஷன் பாகிஸ்தானத்தின் எல்லையை நிர்ணயிக்கும். அதன் பிறகு பாகிஸ்தானம், ஹிந்துஸ்தானத்துடன் ஒன்றாயிருப்பதா, பிரிந்து போவதா என்பதை 'பிளிபிஸைட்' எடுப்பது, அப்படி பிளிபிஸைட் எடுக்கும்போது பாகிஸ்தான் வாலாக்களும், அகண்ட ஹிந்துஸ்தான் வாலாக்களும் தங்கள் தங்கள் கொள்கையைப் பிரசாரம் செய்ய உரிமையுண்டு.

முஸ்லிம் லீகின் லக்ஷியத்தையே ராஜாஜி 'டார்பீடோ' செய்து விட்டார் என்றாரே ஜின்னா? அது இந்த இடத்திலே தான்.

முஸ்லிம்கள் தனியாகப் பிரிந்துபோக உரிமை உண்டா இல்லையா? உண்டு என்றால்

இந்தப் பிளிபிரைட் ஏன்? அதன் பிறகு பிளிபிரைட் தேர்தலில் இரண்டு விதக் கட்சிப் பிரசாரத்துக்கு உரிமை எதற்கு?

பிளிபிரைட் என்றாலே பித்தலாட்டம்தான். ஹிட்லர் 'பிளிபிரைட்' எடுத்து எடுத்துத்தான் பல பாகங்களை ஆக்கிரமித்து ஒன்று சேர்த்தார். ஆஸ்திரியா நார்வே, ஸ்விடன் முதலிய நாட்டு ஜெர்மன் மக்கள் எல்லாம் ஹிட்லர் ஆட்சியில் ஐக்கியப்பட்டு இருக்க வாங்கிடந்தார்களோ!

ஆகையினாலே இந்த பிளிபிரைட் பித்தலாட்டம் நமக்கு வேண்டாம். மகாத்மாகாந்தி சத்தியமே தமது வாழ்க்கை லக்ஷியமாகக் கொண்டவர்.

மாகாண சுயஆட்சி கொடுப்பது போல் கொடுத்து விட்டு விசேஷாதிகாரத்தின் மூலம் எப்படித் தடை செய்ததோ அதே மாதிரிதான் இருக்கிறது இதுவும்.

“நீ பிரிந்து போவதானால் போ அப்பா” என்று நேரடியாகச் சொல்லிவிட்டால் அது நேர்மை.

“நீ பிரிந்து போவதானால் போ அப்பா எனக்கு ஆட்சேபமில்லை. ஆனால் அதற்குமுன் சர்வஜன ஓட்டு எடுத்து விடுவோம். என் கட்சியை நான் சொல்கிறேன். உன் கட்சியை நீ சொல்லு” என்றால் இதன் பொருள் என்ன ஐயா?

பிரிவதில் உனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் அப்புறம் கட்சிப் பிரசாரம் எங்கிருந்து வரும்?

ஆகவே, ராஜாஜியின் திட்டத்திலே மிக உன்னதமான சாம்ராஜ்ய வாதிகளின் ராஜதந்திரம் இருக்கிறது; சத்தியமில்லை.

அவநம்பிக்கை கொண்டுள்ள சிறுபான்மை சமூகங்களைத் தந்திரமாக ஏமாற்றி ஒன்றுபடுத்துவதா சிறப்பு? அல்ல. அவநம்பிக்கையைப் போக்கவேண்டும். நம்பிக்கை அளிக்கவேண்டும். அதற்கு வழி எது? சோவியத் யூனியன் காட்டிய வழியே வழி.

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் ஒன்றாக வாழ்ந்து ஒரே மொழி, ஒரே கலாசாரத்துடன் உள்ள மக்கள் கூட்டம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தேசிய இனம் ஆகும். இதற்கு ஆங்கிலத்தில் 'நேஷனாலிடி' என்று பெயர். இத்தகைய தேசிய இனம் ஒவ்வொன்றும் தனக்கு தனக்கு இஷ்டமான விதத்தில் அரசாங்கத்தை அமைத்துக்கொள்ள உரிமை உண்டு. அப்படி அமைக்கப்பட்ட அரசாங்கம் இஷ்டப்பட்டால் சோவியத் குடியரசிலிருந்து பிரிந்துபோகலாம்; இஷ்டப்பட்டால் சேர்ந்து கொள்ளலாம்.

இதுதான் இன்று சோவியத் யூனியன் காட்டும் வழி. இதே வழியை நாமும் பின்பற்றுவதால் தவறில்லை.



“முஸ்லிம் மக்கள் ஆயினும் சரியே! அல்லது வேறு எந்த சமூகமானாலும் சரி, இந்தியாவில் உள்ள தேசிய இனம் ஒவ்வொன்றும் தனக்கிஷ்டமான அரசைத் தெரிந்து அமைத்துக்கொள்ள உரிமையுண்டு. அந்த அரசு விரும்பினால் சுதந்திர இந்தியக் குடியரசு யூனியனில் இருக்கலாம். விரும்பாவிடில் விலகலாம்” என்று காங்கிரஸ் மாத்திரம் பிரகடனம் செய்யட்டும். மக்களிடையே எத்தகைய எழுச்சியும் ஒற்றுமையும் உண்டாகும்! அதுதான் ஒற்றுமை வழி! மற்றவை எல்லாம் வேற்றுமை வழிதான்!

## பொன்மலை மகாநாடு

பொன்மலையில் தெ. இ. ரயில்வேத் தொழிலாளர் மகாநாடு ஜூலை 14, 15, 16 தேதிகளில் நடைபெற்றது. திரு. வி. க. மகாநாட்டைத் திறந்து வைத்தார். சுமார் 20,000 ஜனங்கள் கூடினர். கலா நிகழ்ச்சிகளும் அற்புதமான பிரசங்கங்களும் நடைபெற்றன. 15-ந் தேதி மாலை கூடிய மாதர் மகாநாட்டை ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் திறந்து வைத்தார். மகாநாடு வெற்றிகரமாக நடந்து முடிந்தது.

## புதிய பிரஸ் அட்வைஸர்

காலஞ்சென்ற ஸ்ரீ வி. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியாரின் பத்திரிகை ஆலோசனையாளர் பதவி ஸ்ரீ ராவ் சாகிப் டி. ஏ. வி. நாதன், பி.ஏ.,பி.எல். அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

ஸ்ரீ டி. ஏ. வி. நாதன் ஓர் சிறந்த எழுத்தாளர்; தமிழிலும் ஆங்கிலத்திலும் திறம்பட எழுதும் வன்மை உடையவர்; தமது இளமையிலிருந்தே பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டவர். மிக்க அனுபவமுடையவர் என்பதை அறிந்து மகிழ்கிறோம்.

## “நவசக்தி”

நவசக்தியின் விலையும் சந்தாவும் எப்பொழுதும் போலத்தான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். சர்க்கார் இன்ன விலைக்கு இத்தனை பக்கங்கள் தான் போடலாம் என்ற நிபந்தனையை ரத்து செய்து விட்டதால் அடுத்த இதழ் அதாவது செப்டம்பர் இதழ் அதிகப் பக்கங்களுடன் வெளியிடத் தீர்மானித்துள்ளோமென்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்ளுகிறோம்.

# பாகீரதி

"மாலினி"

"பாகி, மணி மூன்றாகப்போகிறதே. அவர்களெல்லாம் உன்னைப் பார்க்க வருகிற நேரமாகவில்லையா? தலைவாரிப் பின்னிக்கொள்ளம்மா.

"ஏனம்மா அசடுபோல அழுகிறாய், அழுவானா, ஏன் சொல்லு. நான் இருக்கும்போது உனக்கென்ன குறைவந்தது"?

"இல்லை. அண்ணா எனக்கோர் வயசாயுடுத்து. என்னை வைத்துக்கொண்டு நீ அவஸ்தைப் படுவது எனக்குத்தான் கஷ்டமாயிருக்கு"

"நீ எப்படியாவது கண்ணைப் பிசையாமல் சௌக்கியமாய் இனி குடியும் குடித்தனமுமாய் இருக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை. உன்னை நல்ல இடத்தில் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தானே அப்பா வைத்துவிட்டுப் போன நிலத்தையும் விற்றேன். உன்னைக் கண்கசக்கும்படி விடுவேனா? எழுந்திரு, போ காரியத்தைப்பார்."

மணி நான்கு இருக்கும். கூடத்தில் சபேசன் பெண் பார்க்க வந்தவர்களுடன் பேசிக்கொண்டிருந்தான். பாகீரதி எல்லோருக்கும் டிபனும், டீயும் கொண்டுவந்து வைத்துவிட்டு நமஸ்காரம் செய்தாள். அப்போது சபேசன் பாகீரதியை பாடச்சொன்னான். பாகீ பாடினாள். அவளது குயிலினுமினிய குரலில் மெய்ம்மறந்து பக்திப் பரவசமாக உருகிப் பாடும்போது கல்லும் உருகுமென்றால் மனிதர் உருகக் கேட்பானேன்.

ஒரு வழியாகப் பெண் பார்க்கும் படலம் முடிந்தது. வந்தவர்கள் விபரம் பிறகு தெரிவிப்பதாகச் சொல்லிப் போனார்கள்.

பாவம் சபேசன் என்ன செய்வான்? அவன் தகப்பனார் சாகும்போது அவனுக்கு ஒரு தங்கையையும் தாயாரையும், விதவைத் தமக்கையையும், குடியிருக்க ஒரு வீடும் ஏதோ கிராமத்தில் இரண்டரைக் காணி நிலமும் வைத்துவிட்டுப் போனார். பாகிக்கு விவாக வயதும் போய் இருபதும் ஆகிவிட்டது. ஆறு வருஷங்களாக வலை போட்டு அலசியும் வரன் அகப்படவில்லை. இந்த வருஷம் எப்படியாவது முடித்துவிட வேண்டுமென்று பிடிவாதமாக இருந்தான் சபேசன். ஆனால் பிராப்தம் என்ற ஒன்று விலகாமல் குறுக்கிட்டு நின்றது.

தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, என்று மாதங்கள் காற்றாய்ப் பறந்து விட்டன. ஆனியும் பிறந்து விட்டது.

பாகி உள்ளூரப் புழுங்கிக் கொண்டிருந்தாள். புருஷன் என்று ஒருவன் வந்து கல்யாணமும் ஆகுமா? என்று பொருமுவாள். தாயாரின் வசவு ஒரு புறம். சகோதரனின் பரிதாப நிலைமை மற்றொரு புறம். தனக்காக அவர்கள் படும்பாடு. எல்லாம் சேர்ந்து அவளை மேலும் சஞ்சலப் படுத்தியது. துயரத்தால் தேம்பிக்கொண்டே படுத்திருந்தாள். அவள் மனது ஓடத் தொடங்கியது.

"அப்பப்பா. என்ன தொல்லை. உலகில் பிறப்பதே துன்பம். அதுவும் பெண்ணாய்ப் பிறப்பது துன்பத்திலும் துன்பம். போதாததற்கு பிராமண சமூகத்தில் பெண்ணாய் பிறந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். அக்காவின் கதியொன்றே இதற்கெல்லாம் சாட்சியாயிருக்கப் போதாதா.

"அது சரி. நான் என்ன அழகாயில்லையா? பாடவில்லையா? படிக்கவில்லையா? வீட்டுக் காரியம் செய்யவில்லையா? தையல் வேலை தெரியாதா? எனக்கு ஏன் கல்யாணம் தட்டிக் கொண்டே போகிறது" என்றெல்லாம் நினைத்து ஏங்கி அவள் உள்ளம் குமுறியது,

"பாகி"

"ஏன் அண்ணா"

"அவர்களுக்கு உன்னை ரொம்பவும்தான் பிடித்திருக்கிறதாம், நீ ரொம்ப அழகாம். அதனால் அவனை லட்சியம் செய்யமாட்டாயாம். இப்படியெல்லாம் சொல்லுகிறார்கள். இனிமேல் வேறுவரன் பார்த்து முடிப்பதற்கும் நாளில்லையே என்ன செய்வது பாகி."

பாகீரதி மௌனமாகக் கண்ணீர் உகுத்தாள். சிறிது நேரம் அவ்வறையில் நிசப்தம் நிலவியது.

"அண்ணா"

"என்னம்மா"

"இதோபார் அண்ணா. இனிமேல் நீ பிள்ளை ஒன்றும் பார்க்க வேண்டாம். ஜாதகம். ஜோஸியம் எல்லாவற்றையும் மூட்டைகட்டி தூர வைத்துவிடு. நான் என் மனதைத் திடம் செய்துகொண்டு விட்டேன். எனக்கு கல்யாணமே வேண்டாம். தெய்வச்செயலால் ஏதாவது தானே நமக்கு ஒத்தாற்போல் வந்தால் அப்போது பார்த்துக்கொள்வோம். நீ உனக்குப் பிடித்த பெண்ணை மணம் செய்துகொண்டு என்னைப்பற்றிய ஏக்கத்தையே விட்டுவிடு அண்ணா"

"பாகீ"

"தீர்மானம் செய்து விட்டேன். அண்ணா. நீ ஒன்றும் தடுக்காதே. எத்தனையோபேர் இல்லையா-

முடிவானதொரு தீர்மானத்திற்கு வந்து, மனதிலிருந்த ஆசாபாசங்களும் அடங்கிவிட்டதால் பாகியின் முகத்தில் துன்பத்தின் சாயலோ, ஏக்கத்தின் அறிகுறியோ இல்லாமல் பொலிவுற்று விளங்கியது. அவள் என்றோ கேட்டறிந்த கார்கி, மணிமேகலை, இவர்களது ஞாபகமே அவள் கண்முன் காட்சியளித்தது.

கார்கி கன்னிப் பெண்ணாய் வாழவில்லையா? மணிமேகலை துறவு பூணவில்லையா? இவைகள் தான் பாகியின் தீர்மானத்திற்கு எல்லைக் கோடாக நின்றன.

# மதிப்புரை

நடிக நக்ஷத்திரங்களைப் பற்றி சினிமா விசிறிகளின் விசித்திரமான கேள்விகளுக்கு, அலுக்காமல் சலிக்காமல் விசித்திரமாகவே பதிலெழுதுவதில் 'குண்டூசி' ஓரளவு தமிழ் நாட்டில் பிரசித்தி பெற்றிருக்கிறார் எனவே சொல்லலாம். அன்னார் தமிழ் நாட்டு நடிக நடிகைகளைப்பற்றி அவர்களது அந்தரங்க வாழ்வு—உறவுகளைப் பற்றிக்கூட நன்றாக அறிந்தவர் தான். இந்த ஒரு குறை அவருக்கு இருப்பதால் தான் சினிமா விசிறிகளும் விடேன் தொடேன் என்று கேள்விமேல் கேள்வி கேட்கிறார்கள். அதை ஒரே யடியாகத் தீர்த்துக்கட்டவே **ஸ்ரீமான் குண்டூசியார்** கூடியமட்டும் அழகிய முறையில் **நட்சத்திர மாலையைத்** தொடுத்திருக்கிறார். சினிமா வானில் மின்னும் நக்ஷத்திரங்களில் முக்கியமானவர்களைப் பற்றிய குறிப்புகள் இதில் இருக்கிறது. பொறுக்கி எடுத்த எட்டு அழகிய ஆர்ட் சித்திரங்கள் திருப்தி யளிக்கக்கூடிய வகையிலேயே அமைந்திருக்கிறது. 128 பக்கங்கள் கொண்ட இதன் விலை ரூபாய் இரண்டு. இதைப் படித்த பின்பும் குண்டூசியாரிடம் ஏதாவது கேட்கக்கூடிய கேள்வியும் ஒன்று இருக்கிறதென்றால் அது இதுவே.

**குறிப்பிட்ட ஒரு நடிகைக்கு விவாகமாகிவிட்டதா? விவாகமாகவிட்டால் குழந்தைகள் எத்தனை?**

இந்த விசித்திரமான கேள்விகள் குண்டூசியைத் தேடிவந்தால் அவர்படும் கொஞ்சம் தர்ம சங்கடம் தானே!

● ● ●

"காந்தியடிகளின் நோக்கால் வீரரானவருள் ஒருவர் **திருமதி அம்புஜம்மாள்**. இவ்வம்மையாரின் வீரம் அஹிம்சா தர்மப்போரில் அவரை ஈடுபடுத்தி, வாகைமாலை அணிவித்தது நாட்டுக்குத் தெரியும்.

"காந்தியால் தாம் பெற்ற பேற்றை அம்மையார் இந்நூல் வாயிலாக வெளியிட்டுள்ளார்.

"இந்நூல் மென்மைக்கு ஒரு உறையுள். வீரத்திற்கு ஒரு வைப்பு. காந்தீயத்திற்கு ஒரு ஊற்று" என்கிறார் திரு. வி. க. **மகாத்மா காந்தி நினைவுமாலையைக்** குறிப்பிட்டு. இது தினமணியின் முதல் வெளியீடு. இதன் விலை எட்டணா தான்.



மீனம்பாக்கம் மீனாட்சி, அதிருஷ்டம், புலியும் கிளியும் என்ற மூன்று ஓரங்க நாடகங்கள் சேர்ந்ததே **மீனம்பாக்கம் மீனாட்சி** என்ற ஒரு சிறு பிரசுரம். அரிய பெரிய நாடகங்கள் பல தற்போது வேண்டிய மட்டும் இருப்பதால் இது போன்ற சிறு சிறு நாடகங்கள் அவசியம் விரும்பப்படும் என்ற நம்பிக்கையின் பலத்தைக் கொண்டு இதை எழுதி வெளியிட்டிருக்கிறார் ராஜ ஹம்ஸா. நடிப்புக் கலையைப் பயன்படுத்திக் கொள்ள சினிமா போன்ற சாதனங்கள் எல்லோருக்கும் இடமளிப்பதில்லையாம். இருந்தாலும் சிறுசிறு நாடகங்கள் இதை ஈடு செய்யுமென்று ஆசிரியர் கூறுகிறார்.

விலை விபரம் தெரியவில்லை. தெரிந்துகொள்ள வேண்டுவோர் ஹம்ஸா பிரசுராலயம், மனோஹரவிலாஸ், உறையூர், திருச்சி என்ற விலாசத்திற்கு எழுதவும்.

● ● ●



வழக்கமில்லாத வழக்கத்தை இன்றைய நவசக்தி மேலட்டையில் காண்கிறீர்களல்லவா? வழக்கமில்லாத வழியில் தமிழில் புதியதொரு நவீனம் வெளிவந்திருப்பது தான் அதற்குக் காரணம்.

தமிழ் இலக்கியம் மறுமலர்ச்சி ரூபத்தில் இன்று எவ்வளவோ முன்னேறி இருக்கிறது என்பது ஒருபுறம் உண்மையேயாயினும், அது பிறபாஷை நவீனங்களையே மூலாதாரமாகக் கொண்டுவிட்டதே தவிர, சுயமாக எழுதப்பட்ட கதைகள் ஓரளவு மதிப்பற்றே இருக்கிறது எனலாம். ஒரு வங்காளிக் கதையின் மொழி பெயர்ப்போ, அல்லது ஆங்கிலக் கதையின் தழுவலோ விற்பனையாகும் அளவு இவை விற்பதில்லை. இது ரஸிகர்களது குற்றமாகாது. தமிழில் சுயமாக எழுதும் ஆற்றல் கொண்டவர்கள் தமிழ் நாட்டில் இல்லை என்று வாசகர்கள் நினைக்கும் அளவு பிரசுரகர்த்தர்கள் சாயம் பூசி இருப்பதுதான் காரணமாகும்.

சுயமாக, புரட்சிகரமான போக்கில் நவநவமான கருத்துக்களையும், அன்றாட வாழ்க்கையில் நாம் காணும் காட்சிகளையும் அழகாக எழுதிச் சித்தரித்துவிடக் கூடியவர்கள் தமிழ் நாட்டில் ஒருவரல்ல, இருவரல்ல, எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒருநாள் சமயமும், சந்தர்ப்பமும் வந்தால் தங்கள் திறமைகளைக் காட்டத்தான் போகிறார்கள். தமிழ் நாடும் அப்போது அறியும். அதற்குப் பிரத்யக்ஷப் பிரமாணமாக இப்போதே ஒன்றைக் காண்கிறோம். நான் சொல்லவேண்டியதில்லை. நீங்களே மின்னும் நக்ஷத்திரம் என்ற நவினத்தைப் படித்துப் பாருங்கள். நான் கூறுவது மிகையாக இருக்காது.

இதை எழுதிய 'சிரஞ்சீவி' வாசகர்களுக்கு அதிகம் அறிமுகமற்றவராகவே இருக்கலாம். ஆனால் பத்திரிகையுலகிற்கு இவர் புதியவரல்ல. வாலிபர். ஆனால் முதுமைபெற்ற திறமை கொண்டவர். எல்லோரையும் போல ஒரே வழியில் ஒரே தோரணையில் கதை எழுதுவதை விரும்பாதவர். நவநவமான போக்கில் புதிய வழியில் எழுதிக்கொண் டிருக்கவேண்டும் என்பதே இவரது அவா. ஆற்றல் உண்டு. திறமையும் கொண்டவர். அந்த முயற்சியில் எழுந்ததுதான் **மின்னும் நக்ஷத்திரம்.**

மின்னும் நக்ஷத்திரம் ஒரு எழுத்தாளனின் வாழ்வை சித்திரிக்கிறது. புதுமாதிரியான கற்பனை. தமிழிலே புரட்சிகரமான புதுமை. கதையும் புதுமாதிரியாக இருக்கிறது. நடைகூட அலாதிதான்.

கதை, கற்பனைக்கு மீறிய கட்டுக்கதை யல்ல. சர்வசாதாரணமானதுதான்.

இதில் வரும் முக்கிய நாயகன் நவீனன் அவன் ஓர் எழுத்தாளன். அவனை அடைந்தவள் நளினி. இவ்விருவரையும் வறுமைவாரி அணைக்கிறது. துயரவாழ்வின் துன்பம் தாங்குவது எத்தனை நாள். அவன் இருந்தவரை புகழில்லை; பொருள் இல்லை. கண்கெட்ட பிறகோ பொருள் புகழ் எல்லாம் வந்தன. வாழ்விலும் தாழ்விலும் நிழல்போலிருந்து கதைக்கு விறுவிறுப்பைக் கொடுக்கிறார்கள் நளினியும் சரணனும்.

உயர்ந்த அழகிய இந்தப் பதிப்பின் விலை ரூபாய் இரண்டுதான், இதை வெளியிட்டவர்கள் கமலா பிரசுராலயம் பிராட்வே, சென்னை.

# இந்தியப் பொருள் முன்னேற்ற திட்டம்

(அ. முத்தையா, எம். ஏ., பொருளாதார உதவிப் பேராசிரியர், பச்சையப்பன், கல்லூரி.)

பொருள் துறையிலே நம் தாய் நாடு பின்னணியில் இன்றும் நிற்கிறது. சுமார் 150 வருஷங்களுக்கு முன்பு கூட இந்தியாவானது நல்ல பொருள் நிலையைப் பெற்றிருந்தது. இந் நாட்டில் கைத்தொழில்களும் விவசாயமும் சிறப்புற்றிருந்தன. மக்களின் பிழைப்புக்கான தொழில்கள் பல இருந்தன. நம் தேசத்திலிருந்து சிறந்த கைத்தொழிற் பொருள்கள் பல வெளி நாடுகட்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இந் நாட்டினரின் வாழ்க்கைக்கு வேண்டிய பல பொருள்கள் இங்கேயே உற்பத்தி செய்யப் பட்டன. வெளி நாடுகளிலிருந்து மிகச் சில பொருள்களே கொள்ளப்பட்டன. இந் நாட்டில் தொழில், வாணிபம், விவசாயம் முதலியவை சிறந்து இருந்தமையால் மக்கள் சுகமாக வாழ்ந்தனர். பலவகை பிழைப்புக்கான வழிகள் இருந்தபடியால் மக்களின் வாழ்க்கை நலங்கள் பெருகி இருந்தன.

ஆனால் கடந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இந்தியப் பொருள் நிலைமாறிக்கொண்டே வந்தது. அன்னியர் ஆட்சி இந்தியக் கைத் தொழில்களை வளர்க்கவில்லை; வளர்க்காதது மாத்திரமல்ல; அவை அழியத் தொடங்கியபோது அவைகளைக் காக்கக்கூட முன் வரவில்லை. நம் அடிமை நிலை கைத்தொழில்களின் நாசத்திற்குக் காரணமாக இருந்தது. இங்கிலாந்திலே தொழில் முறைப் புரட்சி (Industrial Revolution) உண்டானதன் பின் இந் நாட்டிற்கு ஏராளமான பொருள்கள் அனுப்பப்பட்டன. அவை இந்நாட்டுப் பொருள்களுடன் போட்டியிட்டன; காப்பாரற்ற, கேட்பாரற்ற இந்தியத் தொழில்கள் அழிந்தன. அல்லது குற்றுயிருடன் இருந்து வந்தன.

இந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து சில ஆலைத் தொழில்கள் இந் நாட்டிலும் தோன்றி வளரத் தொடங்கின. பருத்தி ஆலைத் தொழில், சணல் தொழில், இரும்பு எஃகு தொழில் முதலியவை தலையெடுத்தன. கடந்த மகா யுத்த காலத்தில் (1914—18) சில ஆலைத் தொழில்கள் நன்றாய்ச்

செழித்து ஓங்கின. யுத்தத்திற்குப் பின், உலகத் தொழில்களின் போட்டியின் காரணமாக இந்தியத் தொழில்களுக்குச் சங்கடங்கள் சில உண்டாயின. இந்தியத் தொழில்களின் நல்ல காலமாக, இந்திய அரசாங்கத்தார் சில குறிப்பிட்ட தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கச் சம்மதித்தனர். அதனால் இரும்பு எஃகுத் தொழில், சர்க்கரைத் தொழில் முதலிய சில தொழில்கள் நிலைத்திருக்க வாய்ப்பு உண்டாயிற்று.

இந்த யுத்தம் (1939—......) தொடங்கிய பிறகு, பல நாடுகளும் தங்கள் பொருள் உற்பத்திச் சாதனங்களையெல்லாம் யுத்த தளவாடங்களை உண்டாக்குவதற்குப் பயன்படுத்த வேண்டிய அவசியம் உண்டாயிற்று. ஆகையால் அவை நாட்டிற்கு அனுப்பக்கூடிய பொருள்களின் எண்ணிக்கையும் அளவும் சுருங்கிவிட்டன. போக்குவரவு சாதனங்களின் வசதிகளும் குறைந்துவிட்டன. ஏற்றுமதி இறக்குமதியில் பல கட்டுப்பாடுகளை அரசினர் அங்கங்கே விதித்துள்ளனர். எனவே வெளிநாட்டுப் பொருள்கள் முன்போல இந்தியாவில் வந்து விற்பனை ஆவதற்கில்லை. ஆதலால் இந்தியப் பொருள்களுக்கு கிராக்கி ஏற்பட்டது. விலைவாசியும் ஏறிற்று. இக்காரணங்களால் பல பொருள்கள் இப்போது இந்நாட்டிலே உற்பத்தி செய்யப்படுகின்றன, எனினும் யுத்தத்தால் உண்டான வசதிகளை நாம் முற்றிலும் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. நம் தொழில் நிலையில் விசேஷமான மாறுதல் உண்டாயிற்றென்று கூறுவதற்கில்லை. கனடா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் இந்த யுத்தத்தால் ஏற்பட்ட வசதியைப் பயன்படுத்திக் கொண்டு அந்நாட்டினர் தங்கள் ஆலைத் தொழில்களை எவ்வளவோ விரைவில் பெருக்கிவிட்டனர். நம் நாட்டில் அதைப் போன்ற பெருக்கம் சாத்தியமாகவில்லை. அதற்கு முக்கிய காரணம் நம் நாட்டு ஆட்சி நம் கையில் இல்லாததுதான். இந்நாட்டின் ஆட்சி நம்முடையதாக இருந்தால் நம் பொருள் நிலையை எவ்வளவோ மாற்றி இருக்கலாம். நம் நாட்டினருக்கு இன்னும் நல்லகாலம் வரவில்லை. ஆகையால் யுத்தத்தால் ஏற்பட்ட வசதிகளுக்கு ஏற்ப நம் நாட்டு ஆலைத் தொழில்களை பெருக்கவாவது, புதுக்கவாவது, தோற்றுவிக்கவாவது முடியவில்லை. புது ஆலைகளை உண்டாக்குவதற்கான இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து நம்மால் பெற முடியவில்லை. இந்நாடு முழுவதையும் தொழில்மயமாக்கக் கூடிய அரிய சந்தர்ப்பத்தை நாம் முழுதும் பயன்படுத்திக் கொள்ளமுடியவில்லை.

இந்த யுத்தம் தொடங்கிய பிறகு சில தொழில்கள் விருத்தியடைந்திருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் இவை சாசுவதமான இந்திய தொழில் முன்னேற்ற நிலைக்கு அடிப்



படைகள் அல்ல என்பதை நினைவில் வைத்தல்வேண்டும். நீண்டகாலத் தொழில் வாழ்வு வேண்டுமானால், அடிப்படைத் தொழில்கள் வளரவேண்டும். அடிப்படைத் தொழில்கள் எனப்படுபவை, மின்சக்தி உற்பத்தி, சுரங்கத் தொழில், என்ஜினீயரிங் தொழில்கள், சாயம், எரு, மருந்து முதலியவைகளைச் செய்யும் கெமிகல் தொழில்கள், சிமிட்டித் தொழில், போக்குவரவு சாதனத் தொழில்கள் முதலியவை. ஒரு நாட்டின் பொருள் உற்பத்திக்கு உற்றதுணையாக இருப்பவை இத்தொழில்களேயாகும். இவை மற்ற தொழில்களுக்கு அடிப்படை போன்றவை. இவை விருத்தியானால் தான் மற்ற தொழில்கள் முன்னேற முடியும். ஆகையால் இவ்வகைத் தொழில்களை முதலில் விருத்தி செய்தால்தான் சாசுவதமான பொருள் முன்னேற்றத்தைக் காணலாம்.

இவ்வடிப்படைத் தொழில்கள் இப்போது ஓரளவுதான் விருத்தி அடைந்திருக்கின்றன. அவைகளைப் போதிய அளவு வளர்ப்பதற்கேற்ற ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இது முக்கிய முதல் வேலை. இவ்வேலையைச் செய்யும்போது, மக்களின் வாழ்க்கைக்கான அவசியப் பொருள்களையும் ஓரளவு உற்பத்தி செய்து வருதல் அவசியமாகும்.

தொழில்களை வளர்த்தல் மட்டும் போதாது. இந்நாட்டு விவசாயத்தையும் பெரிதும் விருத்திசெய்தல் அவசியம். இப்போது பெரும்பாலான மக்கள் விவசாயத்தைக் கொண்டு வயிறு வளர்க்க முயலுகின்றனர். விவசாய முறைகள் பிற்போக்கானவையாக இருப்பதாலும், தேவைக்குமேல் அதிகமான மக்கள் அத்தொழிலில் ஈடுபட்டிருப்பதாலும், விவசாயத் தொழில் தாழ்ந்த நிலையில் இருக்கிறது.

விவசாயம், தொழில் துறைகள் முதலியவைகளை விருத்தி செய்ய வேண்டியவர்கள் அந்த அந்த நாட்டின் மக்கள் தானே! நாட்டு மக்களின் நிலை உயர்ந்தால் தானே அவர்கள் தங்களுடைய நாட்டின் நிலையை உயர்த்த முடியும்! ஆகையால் இந்நாட்டினரின் நிலையை எல்லாவகையிலும் உயர்த்தவேண்டும். எல்லாத் துறையிலும் இந்நாட்டு மக்களின் நிலை உயரவேண்டும். அதற்கான எல்லாக் காரியங்களையும் செய்தல் வேண்டும்.

இக்காரியங்களை இப்போதே செய்ய முடியாவிட்டாலும், யுத்தம் நின்ற உடனேயாவது செய்தல்வேண்டும். வருங்காலத்திலேயாவது நாம் உலகிடையே தலைநிமிர்ந்து செல்லவேண்டும். பல நாடுகளிலும் யுத்தத்திற்குப் பின் செய்யவேண்டிய காரியங்களாகத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. புத்தமைப்புத் திட்டங்களைப் பற்றித் தினந்தோறும் படிக்கிறோம்; கேட்கிறோம்.

பொருள் நிலையில் முன்னேறியுள்ள நாடுகளில் புனருத்தா
ரண முழக்கம் கேட்கும் போது, பின்னணியில் நின்று வந்த நம்
நாட்டிலும் திட்டங்களை வகுத்து இந்நாட்டின் நிலையை உயர்த்த
வேண்டியதன் அவசியத்தைப் பற்றி அதிகம் கூறவேண்டிய
தில்லை. நம் நாட்டினரும் தூங்கிக்கொண்டிருக்கவில்லையென்று
இப்போது தெளிவாகிறது. சமீபத்தில் முதலாளிகள் சிலர்
இந்தியப் பொருள் முன்னேற்றத்திற்காகத் திட்டமொன்றை
வகுத்து வெளியிட்டிருக்கின்றனர். இதற்குப் பம்பாய்த் திட்டம்
என்றும் பெயர். இதை இந்நாட்டினர் அனைவரும் மகிழ்வுடன்
ஏற்றிருக்கின்றனர். ஆனால் இங்கிலாந்து முதலிய இடங்களில்
இவ்வகையான வரவேற்பு இல்லை. அதைக்கண்டு நாம் ஆச்
சரியப்படவேண்டியதில்லை. ஏனெனில் பெரும்பாலான மக்கள்
சுய நலத்தை மாத்திரம் விரும்புபவர்கள் தானே!

இப்பம்பாய்த் திட்டமானது ஏறக்குறைய 15 ஆண்டில்
முடிக்கக் கூடிய ஒரு திட்டம். இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத்
திறைகள் அனைத்திலும் பெரிய மாறுதலை உண்டாக்கக்கூடிய
திட்டம் இது. இத்திட்டத்தில் நாம் செய்ய வேண்டிய காரியங்
கள் இவை இவை: அவைகளைச் செய்ய எவ்வளவு செலவு ஆகும்:
அச் செலவுக்குப் பணம் எப்படித் திரட்டுவது முதலிய விவரங்
கள் தரப்பட்டிருக்கின்றன. அவைகளிற் சில முக்கிய குறிப்பு
களைச் சுருக்கமாகத் தருகிறேன்.

இத்திட்டம் அமுலுக்கு வந்தால், விவசாயத்திலிருந்து
கிடைக்கும் நிகர உற்பத்தி இரு மடங்காகவும், தொழில்களின்
நிகர உற்பத்தி ஐந்து மடங்காகவும் விருத்தி அடையும். இத்திட்
டத்தின்படி சக்தியுண்டாக்கும் தொழில்கள் (power in duties)
இயந்திரங்களை உண்டாக்கும் தொழில்கள் முதலியவை முதலில்
விருத்திசெய்யப்படும். அன்றாட வாழ்க்கையின் உபயோகத்திற்
கான பொருள்களும் உற்பத்தி செய்யப்படும். இவ்வகையான
எல்லா முயற்சிகளின் முக்கிய பலன் மக்களின் வாழ்க்கை
நிலையை உயர்த்துவதே யாகும்; மக்களின் வாழ்க்கை நிலை
உயர்ந்தால் வாழ்க்கைச் சுகமும் அதிகமாகும், "எல்லாரும் இன்
புற்று இருக்க" முடியும்.

இத்திட்டத்தில் இந்நாட்டு மக்களுக்கு போதிய உணவும்,
உடலுக்கு உறுதியான சத்தான உணவும் கிடைக்க ஏற்பாடு
செய்ய வேண்டு மென்பது வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இப்
போது பல கோடி மக்களுக்கு வயிறார உண்ணுவதற்கு வசதி
யும், உணவுப் பொருளும் இல்லை என்பது எல்லோரும் அறிந்த
விஷயம். இந்நிலை முற்றிலும் மாறவேண்டும். இந்நாட்டு மக்கள்
நன்றாக உண்டால் ஆண்டு தோறும் உணவுக்காக 2,100 கோடி
ரூபாய்கள் செலவாகும் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.



உணவுக்கு அடுத்தது உடை. சராசரி ஆள் ஒன்றுக்கு வரு
ஷத்திற்கு 30 கஜம் துணி தேவை. அதற்கு 11,6700 லட்ச
கஜ நீளம் துணியை உற்பத்தி செய்யவேண்டும். கஜம் ஒன்
றுக்குச் செலவு 3½ அணாவாக வைத்துக்கொண்டாலும் 255
கோடி ரூபாய் செலவாகும், வீட்டு வசதிகளை உண்டாக்க 1,400
கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.
வைத்திய உதவி, கல்வி முதலியவைகளின் விருத்திக்காகவும்
எவ்வளவு செலவு செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்
கிறது. இம்முயற்சிகளின் பயனாக வருஷாந்தர சராசரி வரும்படி
அதிகமாதல் வேண்டும். இப்போது ஆள் ஒன்றுக்குச் சராசரி
வருமானம் 65 ரூபாய்; அமெரிக்காவில் ஆள் ஒன்றுக்கு வரு
மானம் சுமார் 1,400; ரூபாய்கள் கனடாவில் 1000 ரூபாய்கள்; இங்
கிலாந்தில் 980 ரூபாய்கள்; ஜர்மனியில் 600 ரூபாய்கள்; ஜப்பா
னில் 200 ரூபாய்கள்; இந்தியாவிலோ 65 ரூபாய்கள். எனவே
நம் பொருள நிலையை உயர்த்த வேண்டியதன் அவசியம் வெள்
ளிடைமலை போல் விளங்குகின்றதல்லவா? சராசரி வருமானம்
உயரும்படி செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், இத்
திட்டம் அமுலுக்குவந்தால் சராசரி வரும்படி ஆள் ஒன்றுக்கு
ரூ. 135 ஆகப் பெருகும் என எண்ணப்படுகிறது.

விவசாய விருத்தி, நீர்ப்பாசன விருத்தி போக்கு வரவு
வரவு விருத்தி முதலிய காரியங்களுக்கும் பணம் வேண்டும்.
தொழில் விருத்திக்கும் முதல் வேண்டும். இத்திட்டப்படி கீழ்க்
கண்ட காரியங்கட்குக் கீழே குறிப்பிட்ட முதல் தொகைகள்
வேண்டும்:

| | | கோடி ரூபாய்கள். |
|---|---|---|
| ஆலைத்தொழில்கள் | ... | 3,480 கோடிகள் |
| விவசாயம் | ... | 1,240 " |
| போக்கு வரவு முதலியனவை | ... | 940 " |
| கல்வி | ... | 490 " |
| சுகாதாரம் | ... | 450 " |
| வீட்டு வசதிகள் | ... | 2,200 " |
| மற்றவை | ... | 200 " |
| ஆக மொத்தம் | ... | 10,000 கோடிகள் |

எனவே இத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர 10,000 கோடி
ரூபாய்களை முதலாக வைக்கவேண்டி இருக்கிறது.

இவ்வளவு முதல் தொகையை எப்படித் திரட்டுவதென்று
பலர் மலைக்கலாம். முடியுமோ என ஐயுறலாம்: எப்படிச் செய்வ

தென்று நினைக்கலாம். முதல் தொகையை எப்படித் திரட்டுவதென்பதன் விவரங்களையும் இத்திட்டத்தை வகுத்தவர்கள் விளக்கமாகத் தந்திருக்கிறார்கள்.

இத்திட்டத்திற்கான முதல் கீழ்க்கண்டவகைகளால் திரட்டமுடியும் என அத்திட்டத்தில் கண்டிருக்கிறது. இந்நாட்டில் தங்கம் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. சமீபகாலத்தில் வெளிநாட்டிற்குப் பறந்துபோன தங்கம் போக, இங்கு இருப்பது சுமார் 300 கோடி ரூபாய்கள் பெறுமானது என எண்ணப்படுகிறது. நம்முடைய சாமான்கள் முதலியவகையில் இங்கிலாந்திலிருந்து நமக்குச் சேரவேண்டிய தொகையின் பாக்கி சுமார் 1,000 கோடி ரூபாய்கள். நம்முடைய வியாபாரத்தின் வழி வரக்கூடியது, 15 வருஷ காலத்தில் சுமார் 600 கோடி ரூபாய்கள். வெளிநாடுகளிடமிருந்து அவசியமானால் கடனாகப் பெறவேண்டி நேரிடக்கூடிய தொகை சுமார் 700 கோடி ரூபாய்கள்.

இவையன்றி, இந்நாட்டு மக்கள் தங்கள் வருவாயிலிருந்து சேமிக்கக்கூடிய தொகை சுமார் 4,000 கோடி ரூபாய்கள். இந்த திட்டத்தைத் தொடங்கும் காலத்திலிருந்து இந்நாட்டு மக்களின் வரும்படி உயர்ந்துகொண்டேவரும். வரும்படி உயர, உயர சேமித்து வைக்கக்கூடிய தொகையும் அதிகரித்துக்கொண்டே போகும். ஆதலால்தான் 4,000 கோடி ரூபாயை 15 ஆண்டில் இந்நாட்டு மக்கள் சேர்க்கமுடியும் என எண்ணப்படுகிறது.

இவ்வகைகளில் திரட்டும் பணம் போதாவிட்டால், அரசினர் புதிதாக நோட்டுகளை அடித்துப் பணத்தை உண்டாக்கலாம். நாட்டின் பொருளாதார விருத்திக்காக, அதிகமாக அடித்துப் பயன்படுத்தும் பணத்தால் கெடுதல் ஒன்றும் உண்டாகாது. நன்மையே விளையும். நாட்டின் பொருள் விருத்திக்கான காரியங்களுக்குப் பயன்படுத்தும் காரியத்திற்காக அன்றி, வேறு காரணங்களால் பணத்தை அதிகமாக்கினால்தான் விலைவாசிகள் உயரும்: பல தீமைகள் உண்டாகும். ஆகையால் தொழில் துறை விருத்திக்காக அரசினர் பணத்தைப் புதிதாக ஆக்கலாம். எனவே இப்புதுத் திட்டத்திற்கான முதல் தொகை திரட்டமுடியும் என்பது தெளிவாகிறது. மேற்கண்ட விவரப்படி,



| | | |
|---|---|---|
| ஜனங்கள் சேர்த்து வைத்துள்ள பொருள் ... | 300 | கோடி ரூபாய்கள் |
| நமக்கு வரவேண்டிய தொகைக்கு இருக்கும் ஸ்டெர்லிங் பத்திரங்கள் ... | 1000 | ,, |
| வெளி நாட்டு வியாபாரவகையில் வரக்கூடியது ... | 600 | ,, |
| வெளி நாட்டில் கடன் கொள்ளக் கூடியது ... | 700 | ,, |
| மக்கள் சேர்க்கக்கூடியது ... | 4000 | ,, |
| புதிதாக அரசினர் உண்டாக்கக் கூடிய பணம் ... | 3400 | ,, |
| ஆகக் கூடுதல் ... | 10,000 | ,, |

எனவே "முயற்சி திருவினை ஆக்கும்" என்பது உறுதியாகின்றது. மனம் இருந்தால் இடம் உண்டாகும், இந்நாட்டு மக்கள் உற்சாகத்துடன் வேலை தொடங்கினால் ஆகாத காரியம் ஒன்றும் இல்லை. "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ"? எப்படி உழைப்பதென்பதற்கு இப்போது வகுக்கப்பட்ட திட்டம் வழிகாட்டுகிறது. இத்திட்டத்தை ஆதரித்து, இந்நாட்டு மக்களும் இந்நகரும் சிறந்த நிலைக்கு வர அனைவரும் முயற்சிசெய்தல் வேண்டும். அப்படி முயன்றால் நாம் அனைவரும் சுகப்படலாம்.

நம் முயற்சிகள் தக்க பலனைத் தரவேண்டுமென நாம் விரும்பினால் இந்நாட்டின் ஆட்சி நம்முடையதாதல் வேண்டும். ஆட்சி நம் கையில் இருந்தால்தான் இப்பெருங் காரியங்களையெல்லாம் சாதிக்கலாம். எனவே நாட்டாட்சியைப் பெற நாம் சலியாது உழைக்க வேண்டுமெனக் கூறவும் வேண்டுமோ?

**மின்னும் நக்ஷத்திரம்**

**இலங்கை ரஸிகர்களுக்கு**

மின்னும் நக்ஷத்திரம் என்ற புத்தகம் வேண்டுவோர் ரூ. 2ஐ, பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டராகவோ, அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பிவைத்தால் இலங்கை அன்பர்களுக்கு புத்தகம் வீடு தேடிவரும். தபாலில் வருமோ என்ற பயம் இல்லை. இலங்கை முழுவதற்கும் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளோம். விற்பனை ஏஜண்டுகளும் எழுதலாம்.

**கமலா பிரசுராலயம்,**

பிராட்வே, சென்னை.

# வருங்காலத்தில் : : தமிழ் இலக்கியம்

சக்திதாசன் சுப்பிரமணியன்

**வ**ருங்காலத்தைப் பற்றிய பேச்சு இப்போது எங்கே பார்த்தாலும் அதிகமாயிருக்கிறது. வருங்காலத்திலே ஜெர்மனியின் நிலை என்ன? ஜப்பானின் கதி என்ன? இந்தியாவின் விதி என்ன? பொருளாதாரம் எப்படி? நாணயச் செலாவணி எப்படி? தொழில்களின் நிலையாது? இப்படியாக நூறாயிரம் விஷயங்களைப் பற்றி உலக அறிவாளிகள் சிந்திக்கிறார்கள். திட்டம் வகுக்கிறார்கள்.

வருங்காலத்திலே இலக்கியம் எப்படி? எந்த வகையிலே இலக்கியம் வளரும்? அதை எப்படி வளர்த்தல் வேண்டும் உலகமெங்கும் இது பற்றிய கருத்துக்கள் வலுத்து வருகின்றன. உலக மேதாவிகளும் எழுத்தாளர்களும் அம்முறையில் இலக்கியம் வளர்க்க முனைந்து வருகிறார்கள்.

நம்முடைய தமிழ் இலக்கியத்தைப்பற்றிய சேதி என்ன? வருங்காலத்திலே தமிழ் இலக்கியம் எப்படி இருத்தல் வேண்டும்? இதுபற்றி நாம் சிந்திக்க வேண்டாமா?

ஆமாம்! இலக்கியம் இலக்கியம் என்று சொல்கிறார்களே! அது என்ன? வாழ்க்கையிலே இலக்கியத்தின் 'காரியம்' யாது? இலக்கியத்தினாலே மனித சமுதாயம் அடையும் பலன் என்ன?

மனித சமுதாயத்தின் உணர்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியே இலக்கியம். மக்கள் குலத்தின் அன்றாட வளர்ச்சியை அப்படி அப்படியே வடித்துக் காட்டுவது இலக்கியம். மானிட ஜாதியை இயங்க வைக்கும் இயந்திரம் இலக்கியம். மனிதனுக்குள்ளே அடங்கிக் கிடக்கும் உள் உணர்ச்சியைத் தட்டி எழுப்பி அவனை உருவகப்படுத்துவதே இலக்கியம். வாழ்க்கையுடன் ஒட்டாத இலக்கியம் ஒன்றுக்கும் உதவாது. வாழ்க்கையைப் பிரதிபலித்துக் காட்டாத இலக்கியத்தால் யாதொரு பயனுமில்லை. வாழ்க்கையைச் செம்மை செய்வதே இலக்கியத்தின் பயன்.



இலக்கியம் என்பது வெறும் பொழுது போக்குக்காக ஏற்பட்ட ஒன்று அல்ல. மனிதன் அழகு பார்ப்பதற்காக ஏற்பட்டதல்ல. ஆனால் மனிதனைத் தட்டி எழுப்பி உயர்நிலைக்குச் செலுத்துவதேயாகும். பொழுது போக்கு இலக்கியம் மனிதனைச் சோம்பேறியாக்கும். புரட்சி இலக்கியமோ மனிதனை மனிதனாக்கும்.

இலக்கியம் என்பது ஏதோ ஒருமனிதனின் கற்பனைக்கனவுகளைக் கொண்டதல்ல. ஆகாசக் கோட்டைகளை அடக்கியதல்ல. அந்தரச் சிந்தனைகள் செறிந்ததல்ல.

மனித சமூகத்திலே பொங்கி வரும் பூகம்பங்களையும் எழுச்சிகளையும், வேதங்களையும். முரசமிட்டுக் காட்டுவது இலக்கியம்.

மனித குலத்தின் சரித்திரத்தையே எடுத்து ஆராய்ந்து பாருங்கள். போராட்டத்தின் மூலம் படிப்படியாக வளர்ந்திருப்பதைக் காணலாம்.

ஒரு போராட்டம்! அதன் பின் சிறிது வளர்ச்சி. மறு போராட்டம். மறுபடி சிறிது வளர்ச்சி. பின்னும் போராட்டம். பின்னும் சிறிது வளர்ச்சி. இப்படியாக மானிட சமூகம் வளர்ந்திருக்கிறது. அதற்குத் தகுந்தபடி இலக்கியமும் வளர்ந்திருக்கிறது.

எப்பொழுதுமே ஒரு கிளர்ச்சிக்குப் பின் வளர்ச்சி ஏற்படுவது இயற்கை. அதேமாதிரி மனித சமூகம் செய்த ஒவ்வோர் கிளர்ச்சியுடனும் ஒன்றி ஒன்றி இலக்கியம் வளர்ந்திருக்கிறது.

சமீபகால சம்பவம் ஒன்று பாருங்கள். சென்ற 1930-ம் வருஷ சத்தியாக்கிரகத்துப் பின் நம் தமிழ் நாட்டிலே இலக்கிய வளர்ச்சி எவ்வளவு அபரிமிதம் பாருங்கள். எவ்வளவு பத்திரிகைகள். எவ்வளவு புத்தகங்கள்! ஏன்? கிளர்ச்சியினாலே மக்களிடத்தில் விழிப்பு ஏற்படுகிறது. விழிப்பினாலே அரசியல் வளர்ச்சி. அரசியல் வளர்ச்சியாலே சமூக வளர்ச்சி.

அரசியல், சமூக வளர்ச்சியாலே இலக்கிய வளர்ச்சி.

ஒன்றும் வேண்டாம். இப்போது உலகம் பெரியதொரு போரில் அமிழ்ந்து கிடக்கிறது. இப்போது —அதாவது— சென்ற இரண்டு ஆண்டுகளில் நம் தமிழ் நாட்டிலேதான் எத்தனை புத்தகங்கள்! எவ்வளவு பத்திரிகைகள்! ஏன்! எங்கிருந்து இவ்வளவு 'தாகம்' ஏற்பட்டது மக்களுக்கு.

உலகம் இருக்கிறதே! இது பல வகைகளில் பிரிக்கப்பட்டிருக்கிறது. கடலால் பிரிக்கப்பட்டுள்ளது! மலையால் பிரிவு! நதியால் பிரிவு! காடுகளால் பிரிவு! அரசியலால் பிரிவு, நிறபேதங்களால் பிரிவு!

இருந்தாலும் மனித சமூகம் இருக்கிறதே! இது ஒன்றுதான். மனித சமூகத்தின் எந்த மூலையில் ஒரு நிகழ்ச்சி தோன்றினும் சரியே! அது

மனித சமூகம் முழுதும் போய் எதிரொலிக்கும்.

பிரெஞ்சுப் புரட்சி நடந்தது. மனித சமூகத்தையே ஆட்டவில்லையா! ரஷ்யப் புரட்சி நடந்தது! உலகத்தைக் குலுக்கிவிடவில்லையா? இன்று உலகம் முழுதும் ஒரு போராட்டம் இருக்கிறது. மனித குலம் மௌனமாகப் போராடி வருகிறது, பல இடங்களில் இப்போர் புலனாகிறது. சில இடங்களில் புலப்படுவதில்லை. இந்த யுத்தத்துக்குப் பின் வெட்டவெளிச்சமாகத் தெரியும். அதாவது என்ன? உடையோர், இல்லோர் போராட்டம்.

உலகத்தில் உள்ள அடிமைப்பட்ட சக்திகள் எல்லாம் திரண்டு விட்டன; எழுச்சியுற்று நிற்கின்றன, அடிமைத்தனம் பலவகையில் உண்டு. அரசியல் அடிமை! பொருளாதார அடிமை! சமூக அடிமை! இம்மாதிரி பல்வகையான அடிமைப்பட்ட சக்திகள் எல்லாம் 'கொக்கரித்து' நிற்கின்றன. தங்கள் மேல் பலமாக ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் சுயநலக்கூட்டத்தை-பரசிரம ஜீவிகளை—அட்டைகளைத் தட்டி எறியத் தயாராய் விட்டன.

அதன் எதிரொலியை இன்று நாம் இந்தியாவில்—தமிழ் நாட்டில் கேட்கிறோம். உலக மெங்கும் மனித சமூகத்திலே ஏற்பட்டுள்ள விழிப்பு உணர்ச்சி, இன்று நம் தமிழ் மக்களையும் தாக்கிவிட்டது. அதன் பலன் தான் இன்று நாம் கண்கூடாக்காணும் இலக்கியதாகம்! அறிவுத்தாபம்!

தமிழ் மக்களிடையே இன்று ஏற்பட்டுள்ள இந்த இலக்கிய தாகத்தைத் தணிக்க நாம் என்ன செய்திருக்கிறோம்? அவர்களுடைய தேவையை எவ்வளவு தூரம் பூர்த்தி செய்திருக்கிறோம்?

நம்முடைய தமிழ் மகன் பல வகைகளில் ஆழ்த்தப்பட்டிருக்கிறான். அரசியலில் அடிமை! பொருளாதாரத்தில் அடிமை! சமூகத்தில் அடிமை! இந்த அடிமைத்தனத்தை நிரந்தரமாக்க நூறாயிரம் சப்பைக் கட்டுகள்! அறியாமை இருளை என்றென்றும் வைத்திருக்க எண்ணற்ற பொய்கள்!

தமிழ் எழுத்தாளனே! இவற்றைத் தவிடுபொடியாக்க நீ என்ன செய்கிறாய்?

'கண்மூடி வழக்க மெல்லாம் மண்மூடிப்போக' வேண்டுமென்றார் பாரதி? மூத்த பொய்மைகளை யெல்லாம் சாய்த்துவிட வேண்டுமென்றார். மூடக் கட்டுகளை யெல்லாம் தகர்க்க விரும்பினார்.

எனது அருமைத் தோழனே! எழுத்தாளனே! நீ அந்த பாரதியின் பரம்பரையைச் சேர்ந்தவன். பாரதியின் கொள்கையைப் பின்பற்றி நீ எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறாய் என்பதைச் சிந்தித்துப் பார்.

தமிழ்மகன் நூறாயிரம் வழியில் தாழ்வுற்றிருக்கிறான் என்று சொன்னேன், தன்னம்பிக்கையில்லை தமிழனுக்கு. அதிர்ஷ்டத்திலே நம்பிக்கை. முயற்சி செய்தால் வெற்றி பெறலாம். முயற்சியினாலே, ஊக்கத்தினாலே இந்த உலகில் எதையும் சாதிக்கலாம். என்று கூறிய திருவள்ளுவர் பிறந்த இத்தமிழ் நாட்டிலே பிறந்த தமிழன் இன்று 'தலைவிதி' என்று விதியை நம்புகிறான், 'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்' என்று சொன்னார் வள்ளுவர். அதே தமிழன் இன்று விதி கண்டு நடுங்குகிறான்; மயங்குகிறான்.

சாவித்திரியின் கதை நம் எல்லோருக்கும் தெரியும். எமனுடன் போராடி வெற்றி பெற்றாள். எதனால்? 'விதி விதி' என்று மயங்கி அவள் உட்கார்ந்தால் வெற்றி பெற முடியுமா? ஒரு நாளும் முடியாது. விதியை மிதிப்பேன் என்று எழுந்தாள். வெற்றி பெற்றாள்.

மார்க்கண்டனின் கதை, நம் எல்லாருக்கும் தெரியும். விதியை மாற்றுவேன் என்று போராடினான் மார்க்கண்டன். வெற்றி பெற்றான். ஆகவே விதி என்று ஒன்றுமில்லை. விதி அவ்வளவு வலியதுமில்லை. தன்னம்பிக்கையிருந்தால் விதியை மிதிக்கலாம்.

சாவித்திரி பிறந்த நாட்டிலே, மார்க்கண்டன் பிறந்த நாட்டிலே விதி என்று மதி மயங்கலாமா? கூடாது என்று கூவு எழுத்தாளனே!

இன்றைய சமூகத்தை அடியோடேட்டபடு சாம்பலாக்க வேண்டுமென்று எழுது. இந்தச் சாம்பலிலிருந்து புதியதொரு சமத்துவ சமூகத்தைத் தோற்றுவிக்க வேண்டுமென்றுஎழுது.

மனிதனை மனிதன் அடக்குவதும், ஒரு சமூகத்தை இன்னொரு சமூகம் ஆக்கிரமிப்பதும், ஒரு ஜாதியை இன்னொரு ஜாதி அழுத்துவதும், அழிய வேண்டும் என்று எழுது.

காதல் கதை காதல் கதை என்று எழுதிக்கொண்டு வீணாக் காலக்கொலை செய்யாதே தோழனே! உன் காதல் கதையெல்லாம் வெறும் கானல் நீர்.

வங்காளத்திலே மக்கள் உண்ண உணவில்லை. பஞ்சம்! பட்டினியால் துடி துடித்துச் சாகிறார்கள். சென்னையிலே உளுந்தில்லை! விறகில்லை! மலையாளத்திலே உணவில்லை! கோவையிலே பிளேக்! மதுரையிலே மண் எண்ணெய் இல்லை! காதல் எங்கே? யாரிடத்தில்?

பாலுக்குச் சர்க்கரை இல்லை என்று அழும் ஒரு சிறு கூட்டம். காமவேதனை பிடித்து அலைகிறது. அதனைப் போய் காதல் என்று புகழ்ந்து எழுதாதே!

அருமைத்தோழனே! உண்மையில் உன் எழுத்தின் பலன் என்ன என்பதை உணர்கிறாயா? ஈட்டி முனையிலும் கூரியது உன் பேனா முனை. ஈட்டி

முனை உடலில் தோலில் நரக்கும். உன் எழுத்து முனையோ உடலைத் தாக்குகிறது. உள்ளத்தைத்தாக்குகிறது; ரத்தத்தைத் தாக்குகிறது; ரத்தக் குழாய்களைத் தாக்குகிறது; ரத்தத்தில் உள்ள உயிர் அணுக்களைத் தாக்குகிறது. சந்ததி சந்ததியாக மக்களைத் தாக்குகிறது.

காதல் கதைகளுக்கு இன்றைய தமிழ் நாட்டிலே கிராக்கி இருப்பது என்னவோ உண்மை. இக்கதைகளைப் படிப்பவர் யார்? சிறுவர்கள் வாலிபர்கள், கிழவர்கள். கிழவர்களைப்பற்றிக் கவலையில்லை.

இளம் பெண்களும், பிள்ளைகளும் இக்கதைகளை எவ்வளவு ஆர்வமுடன் படிக்கிறார்கள்? அதன் பலன் என்ன? சரியான வயதில் காமஉணர்ச்சி அவர்கள் ரத்தத்தில் ஊறிப் போகிறது. இளைஞர்களிடத்திலே திருட்டுச் சேர்க்கை உண்டாகிறது.

ஆண்களும் சரி பெண்களும் சரி, இதனால் திடகாத்திரமான சந்ததி உண்டாவதில்லை.

இன்றைய தினம் பிரான்ஸ் வீழ்ச்சியுற்றதன் காரணம் என்ன? இத்தகைய காமக் கதைகளும் கேளிக்கைகளுமே.

ஆகவே வீழ்ந்து கிடக்கும் தமிழனுக்கு இக்கதைகள் வேண்டாம்.

இன்றுதான் உணர்ச்சியுடன் கண்ணை விழித்துச் சுற்றுமுற்றும் பார்க்கிறான் தமிழன். அவனுக்குக் கஞ்சா மருந்து கொடுப்பது போல இக்காதல் கதைகளை எழுதாதே எழுத்தாளனே!

அவனது எழுச்சியை விடுதலை உணர்ச்சியை கொழுந்துவிட்டு எரியச் செய்யும் புதுமை இலக்கியங்களை எழுதிக்குவி! இதுவே வருங்காலத்துக்கு வேண்டிய இலக்கியம்.


## நமது ஏஜண்டுகள்

**வி. துரைசாமி,**
நியூஸ் ஏஜண்டு
43 வடக்கு சித்திரை வீதி
மதுரை.

**ஈ. வி. சாஸ்திரி,**
பி. 82, சர்தார் சங்கர் ரோடு,
காளி காட், கல்கத்தா.

**ரா. சு. முருகேசன்,**
நடுத்தெரு, ராஜவல்லிபுரம்,
திருநெல்வேலி,

**எஸ். நாராயண பிள்ளை,**
நியூஸ் ஏஜண்டு
பஸ் ஸ்டாண்டு, புதுகோட்டை

**எஸ். பி. கிருஷ்ணன்,**
நியூஸ் ஏஜண்டு
காட்டூர், கோயமுத்தூர்.




# யுத்தம் எப்போது முடியும்

**கே. அருணாசலம்** ஆசிரியர் பாரததேவி

இந்த மகா யுத்தம் ஆரம்பமாகி கிட்டத் தட்ட ஐந்து வருஷங்கள் பூர்த்தியாகப் போகின்றன, கொள்ளை லாப வியாபாரிகளைத் தவிர அனைவருக்கும் அலுப்புத் தட்டி விட்டது. எப்பொழுது இந்த சண்டை முடியும்? என்று கேட்கிறார்கள். இந்த வருஷக் கடைசிக்குள் முடிந்து விடலாம் என்று விஷயமறிந்தவர்கள் சொல்லுகின்றனர். அப்படி முடிந்துவிடுமென்றே நம்பலாம்.



இந்த சமயத்தில் இதுவரை நடந்தவற்றை சற்று ஞாபகப் படுத்திக் கொள்வது நல்லதல்லவா?

ஜெர்மன் பிரசார மந்திரி கேப்பன்ஸ் 1931-ஆம் வருஷத்திலேயே சொல்லியிருப்பதைப்போல, "வெளி நாட்டுக் கொள்கையை நடத்திச் செல்லக்கூடிய ஒரே கருவி வாள்தான். வேறு எதுவுமில்லை" என்ற சித்தாந்தத்தை நாஜிகள் பதவிக்கு வந்த பிறகு கடைப்பிடித்து, அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரவும் முனைந்தார்கள்.

'வாக்குறுதி கொடுப்பதே மீறுவதற்காகத்தானே!"

"ஒப்பந்த வகைகளில் கையெழுத்திடுவது அவற்றை பிற்பாடு கிழித்தெறியத்தானே!"

இவையெல்லாம் ஹிட்லரின் மணிவாக்குகள்.

"ஒரு தேசத்தின் மக்கள் எந்த முறையில் முன்னுக்கு வருகிறார்கள் என்பதை கவனிக்கக்கூடாது. அடையும் லக்ஷியமே முக்கியம்." இது

கேப்பன்ஸ் அளிக்கும் பக்க பலம்.

இந்த சித்தாந்தங்களையெல்லாம் அடிப்படையாகக் கொண்டே ஜெகோஸ்லோவேகியாவை 1939-ஆம் வருஷம் மார்ச் மாதம் 11-ஆம் தேதி ஹிட்லரின் ராணுவம் கபளீகரம் செய்தது.

பிரிட்டனும் பிரான்சும் ஜெக் நாட்டைக் காட்டிக்கொடுத்தன. இந்த சிறிய, ஆனால் வீரம் நிறைந்ததும் கண்ணியம் மிகுந்ததுமான குடியரசுக்குப் பரிந்து யுத்தத்தில் இறங்க பிரான்ஸ் தயாராயிருந்தால் தானும் தயார் என்றது ரஷ்யா. கம்யூனிஸ்ட் கரடியின் சகவாஸமே கூடாது என்றது பிரான்ஸ். அன்றே பிரான்சுக்கு சாவுமணி அடித்தாகி விட்டது. இது அந்நாடு முதல்தரமான வல்லரசுகளில் ஒன்றாய் இருக்காது என்று சமீபத்தில் மார்ஷல் ஸ்மாட்ஸ் சொன்னார். உண்மை. சர்ச்சிலின் ஆப்த நண்பராகிய அவருக்கு நேச நாடுகளின் திட்டம் தெரியாதா, என்ன? பக்கத்து நாடு பட்டாக் கத்தியை தீட்டிக்கொண்டிருந்தபோது பிரான்சு சுகபோகத்தில் நீந்திக் கோலாகலத்தில் மூழ்கிக் கிடந்ததால், நொடிப் பொழுதில் அந்நாட்டை நாஜி வெள்ளம் வீழ்த்திவிட்டது. உதவிக்கு வந்த பிரிட்டிஷ் டிவிஷன்களும் ஓடவேண்டியதாயிற்று.

(அப்போது பிரான்ஸில் காணாமற்போன நேசப் படைகளில் இந்திய கோவேறுக் கழுதைப் பட்டாளமும் ஒன்று என்பதை இந்த சமயத்தில் ஞாபகப் படுத்தாமல் இருக்க முடியவில்லை.)

**பொதுவுடமை—பிறருக்கு ஹிட்லர் காண்பித்த பூச்சாண்டி**

பொதுவுடமை கண்டு பிரான்ஸ் பயந்ததால்—ரஷ்யாவின் உதவியை முன்பே பெற மறுத்ததால்—தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் ஹிட்லரோ பலேப் பேர்வழி: அந்த கரடியைக் காண்பித்து இதரர்களை பயமுறுத்தினாரே ஒழிய தான் பயப்படவில்லை. பிரிட்டனை தன் பக்கம் இழுக்க எவ்வளவோ பிரயாசைப் பட்டும் பலனற்றுப் போகவே, ஐரோப்பாவில் எப்படியாவது மேலாதிக்கம் செலுத்த உறுதிகொண்டு 1939-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 23ந்தேதி ஸ்டாலினுடன் அனாக்ரமிப்பு ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டார்.

"விஷயங்களிலெல்லாம் கொடிய விஷம் போல்ஷிவிஸம்தான்" என்று 1937ல் ஜெர்மன் சட்ட சபையில் இடி முழக்கம் செய்த ஹிட்லருக்கு 1939 அதே போல்ஷிவிஸம் கடைசியில் அமிர்தமாகிவிட்டது. இந்த இரு சர்வாதிகாரிகளும் திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர் 'போக்கிரிகள் போல ஒருவரையொருவர் ஏமாற்றி விடுவதாக அந்தரங்கத்தில் ஆனந்தம்!

ரஷ்யாவையும் பிரிட்டனையும் மோதவிட்டு வேடிக்கைப் பார்க்க விரும்பிய பிரிட்டனின் வாயில் மண்ணை போட ஸ்டாலின் தீர்மானித்து விட்டார். அப்போதும் ராஜ தந்திரத்தில் ஜெர்மனி. பிரிட்டன் இரண்டையுமே ஸ்டாலின் தோற்கடித்தார் என்றே சொல்லவேண்டும்.

அந்த அனாக்ரமிப்பு உடன்படிக்கை மூலம் யுத்த ரயிலுக்கு விசையை ரஷ்யா கொடுத்தது. செப்டம்பர் (1939) முதல் தேதியன்று போலந்தை பல இடங்களில் ஜெர்மன் படைகள் தாக்கின. செப்டம்பர் 3ந் தேதி போலந்துக்காக பரிந்து வருவதாய் அறிவித்து, பிரிட்டனும் பிரான்சும் ஜெர்மனி மீது யுத்தப் பிரகடனம் செய்தன.

**முதல் பகுதியும் இரண்டாம் பகுதியும்**

இந்த யுத்தத்தின் முதல் பகுதியில் ஜெர்மனியார் சக்கைபோடு போட்டார்கள். பிரான்ஸிலிருந்து நார்வேவரை அவர்கள் கையில். இதாலி அவர்கள் கைக்குள். இதாலிருந்து பல்கேரியாவரை—இரண்டும் உள்பட—அவர்களுடைய குதி காலின் கீழ். 'பின்னேயாரை உதை, இந்த ரஷ்யா தானே, மூன்றே மாதத்தில் பூண்டோடு ஒழிக்கிறோம்' என்று சொல்லி மாஸ்கோ வாசல்வரை வந்து விட்டார்கள். ஆப்ரிக்காவில் வெற்றி மேல் வெற்றி, உதைபட்ட பிரான்சு பிற்பாடு உதவி செய்தது. எகிப்து ஜெர்மனியர் வசம் போகுமோ என்ற அபாயம் இருந்தது, சூயிஸ் கால்வாய் போயே விடலாம் என்ற கவலை இருந்தது. பிரிட்டனே சொக்கப்பானையாகி விடும் போலிருக்கிறதே என்று அஞ்சியது. இதெல்லாம் யுத்தத்தின் முதல்கப்பம்—ஐரோப்பிய ஆப்ரிகா முனைகளில்.

இரண்டாவது பகுதி ஜெர்மனியாருக்கு வாபஸ்படலமாயிற்று. ஆப்ரிக்காவிலிருந்து சிஸிலி, சிஸிலியிலிருந்து இதாலி, இதாலியிலிருந்து......

மாஸ்கோ வாசலிலிருந்து வாபஸ், வாபஸ், ஸ்டாலின் கிராடில் சமாதி.

பிரிட்டன் எரிந்த காலம் போய் ஜெர்மனி எரியும் காலம் ஆரம்பமாயிற்று.

**கீழ்க்கோடியில்**

ஜெர்மனியின் கூட்டாளியாகிய ஜப்பானுக்கும் முதல் பகுதியில் சுக்ரதசை பிரமாதமாக அடித்தது. ஒரே மூச்சில் பெர்ல் ஹார்பர், டச்சு கிழக்கு இந்தியத் தீவுகள், மலாய், பர்மா எல்லாம் ஸ்வாஹா! நேசப் படைகள் கீழ்க்கோடி முனையிலும் 'டன் இர்க்' செய்து, வந்தவர்களையெல்லாம் கொள்ளும் இந்த மவ ர்ரசன் கப்பலாகிய இந்தியாவுக்குள் புகுந்து கொண்டன.

ஆனால் இப்பொழுது நிலைமை என்ன?

இந்தியாவுக்குள் புகுந்த ஜப்பானியர் பூர்ணமாக வாபஸாகவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். பஸிபிக்கில் பிடித்த தீவுகளை ஒவ்வொன்றாக்

கோட்டை விடுகிறார்கள். இதன் எதிரொலி—டோஜோ வுக்கு கல்தா, கொய்ஸோ சாதிக்கப்போவதைப் பார்க்க வேண்டும். ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் ஒரே வித்யாசமிருக்கிறது.

ஜெர்மனியர் பலம் நாசமானதைப் போல ஜப்பானியர் பலம் அழியவில்லை. ஜப்பானியர் இப்பொழுதும் பலம் பொருந்தியவர்களாகவே இருக்கிறார்கள்.

ஆனால் இரண்டாம் முனை சீக்கிரத்தில் டிஸம்பருக்குள் முடியுமானால், ஜப்பானியரால் தனித்து நின்று நேசப் படைகளை எத்தனை மாதங்களுக்குத் தாக்குப் பிடிக்க முடியும் என்ற கேள்வி எழுகிறது. கொய்ஸோவின் உடனடியான சாகஸங்களைப் பார்த்தே ஜப்பானைப் பற்றி ஒரு இறுதியான முடிவுக்கு நாம் வர முடியும்.

## வெற்றி யாருக்கு?

இந்த சண்டையில் யார் ஸார் ஜெயிப்பார்?" என்று ஒருவரையொருவர் ஜோஸியம் கேட்டுக் கொண்டிருந்த காலம் உண்டு.

இப்பொழுது என்ன பிரிட்டன் ஜெயித்து விடும் போலிருக்கிறதே' என்ற பேச்சு ஆரம்பமாகிறது. இந்த ஹிட்லர் இன்னும் ஏதேனும் ரகசிய ஆயுதம் வைத்திருப்பானோ ஸார்?" என்று ஆவலாகவும் பலர் கேட்கிறார்கள்.

ஆனால் லார்டு ஹாஹா என்னவோ இன்னும் பல ரகசிய ஆயுதங்கள் இருப்பதாகப் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்.

ஹிட்லரிடம் இருக்கக்கூடிய கடைசி ரகசிய ஆயுதம். போலந்தில் 'பூதத்தைக்' கட்டிக் கொள்ள ஜெர்மனி தயார் என்று அறிவிப்பதாக இருக்கலாம். ஆனால் அப்படி தழுவினாலும் ஜெர்மனியை சும்மா விடப்போவதில்லை என்கிறார் சர்ச்சில். போலந்தையும் ஏப்பம் விட தீர்மானித்து, சுதந்திரப்போரின் சர்க்காரை ஸ்தாபித்துள்ள ரஷ்யர் அப்போது என்ன செய்வார்கள் என்பதே கேள்வி. நேச நாடுகளுடன் பரஸ்பர நட்பை நீடிப்பார்கள் என்றே சகஜமாக நாம் எதிர்பார்க்க வேண்டும்.

மொத்தத்தில் இந்த யுத்தத்தினால், ரஷ்யாவும் பிரிட்டனும் தங்கள் சக்தியை விருத்தி செய்துகொள்ளும். சிறிய ஐரோப்பிய நாடுகளுக்குக்கூட ஓரளவுக்கு சுதந்திரம் கிடைத்துவிடலாம். அதனால் பிரிட்டனுடன் சேர்ந்து போர்க்களத்தில் லக்ஷக் கணக்கில் உயிர்விட்ட சிப்பாய்களின் நாட்டின் கதி என்ன? தலை வெளியிலிருக்கிறது. தலைவர்கள் சிறையில் இருக்கிறார்கள். எனவே இந்நாட்டைப் பொறுத்தவரை நிலைமை பழையபடியேதான் இருக்கும் அதற்கு மட்டமாகக்கூட இருக்கும்.



# திரும்பி வருமா?

'பிச்சு'

ராஜத்திற்கு அவள் பிறந்தகத்தைப் பற்றி யாராவது பேச ஆரம்பித்து விட்டால் போதும். அவளுக்கு நேரம் போவதுகூடத் தெரியாது. தன் பிறந்தகத்தில் யானை கட்டி வாழ்ந்ததென்றும் தன் கல்யாணத்திற்கு தகப்பனார் பதினாயிரம் ரூபாய் செலவழித்தாரென்றும் அதனால்தான் அவர் ஏழையாய்ப் போய்விட்டாரென்றும் தெருவில் ஒருவரிடம்கூட பாக்கி யில்லாமல் சொல்லிவைத்திருந்தாள்.

நான் எங்கள் வீட்டு நகைகளை ராஜத்திற்குப் போட்டிருப்பதை பார்த்துவிட்டு அவள் தகப்பனார்தான் அந்நகைகளைப் பண்ணிப்போட்டார் என்று எல்லோரும் நம்புவதில் என்ன பிசகு இருக்கிறது? என் மாமனார் நாலு விஷயமும் தெரிந்தவர். கல்யாணத்திற்கு பதினாயிரம் ரூபாய் செலவழிக்கிறதுபோல் பாண்டு, வாணவேடிக்கைகளுடன் முதல்நாள் தடபுடலாய் எதிர்கொண்டு அழைத்துவிட்டு தாலிகட்டியபிறகு ஜானவாசம் நடக்கிறது என்று காமிரா உள்ளே சாத்திக் கொண்டு படுத்துக்கொள்ள யாருக்குத் தெரியும்? அந்த நாலுநாளும் ஒருசாதம் வெந்தல் குழம் பிறகே தகராறாய்ப் போய் விட்டது. வந்தவர்களை சாப்பிட்டீர்களா என்று கேட்க ஆசாமி ஒருவருமில்லை.

ஆமாம்! மாமனாருக்கு இப்பவோ, அப்பவோ என்று இருக்கிறபொழுது சம்பந்திகளை உபசரித்து கொண்டா இருப்பார்கள்? நாங்கள் ஐந்தாம் நாள் ஊருக்குப் போனபிறகுதான் அவருக்கு பிரக்ஞை வந்தது என்று சொல்லவேண்டும்.

ராஜத்திற்கு ஒரு சகோதரி உண்டு. எங்கள் கல்யாணமான ஒருவருஷத்திற்குப் பிறகு அவள் விதவையாய்ப் போய்விட்டாள்.

ஒருநாள் நான் பேப்பர் படித்துக் கொண்டிருக்கும் பொழுது ராஜம் அங்கே வந்தாள்.

"எங்க அக்கா பாலியத்திலே ஒருநாள் பாண்டி விளையாடிக் கொண்டிருந்தாளாம். அப்போது அத்திம்பேர் தற்செயலாய் காரில் போய்க் கொண்டிருந்தாராம். அக்காவின் அழகைப்பார்த்து மோகித்துப் போய்விட்டாராம். நேரே

அப்பாவிடம் வந்து'' உங்க பெண்ணைத்தான் நான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன். எனக்கு எதிர் ஜாமீனே வேண்டாம். நானே வேண்டுமானாலும் கல்யாணச் செலவு முழுவதையும் ஒப்புக்கொள்ளுகிறேன் என்று சொன்னாராம். அப்பா ஜாதகத்தை பார்க்காமல் ஒன்றும் செய்ய முடியாது என்றாராம். அதற்கு அத்திம்பேர் தனக்கு ஜாதகமே கணிக்கவில்லை என்று கோட்டை புளுகு புளுகி கல்யாணம் செய்துகொண்டாராம்'' என்றாள்.

"நிஜமாகவா!'' என்று கேட்டேன்.

"ஆமாம்! நான் பொய்யா சொல்லப்போகிறேன்'' என்றாள் சிரித்துக்கொண்டே.

"உனக்கு பாண்டி ஆடத் தெரியுமோன்னோ?'' என்று கேட்டேன்.

"தெரியுமே, ஏன்?'' என்றாள்.

"இல்லை. நீ பாண்டி ஆடுகிறபொழுது உன்னைக் கண்டு ஒருவரும் தூக்கிக்கொண்டு போகவில்லையே என்று தான் கேட்கிறேன். உன்னைப் பார்த்தால் உங்க அக்கா அவ்வளவு அழகாய் இருப்பாள் என்று யாராவது சொல்வார்களா?'' என்று ஒரு டோஸ் விட்டேன். இரண்டு நிமிஷம் பேச்சு மூச்சே காணோம். உள்ளே பாத்திரங்கள் இங்குமங்கும் தூக்கி வீசியெறியப்படும் சப்தம் கேட்டது. ராஜத்திற்குக் கோபம் வந்துவிட்டால் அதைப் பாத்திரங்களிடந்தான் காட்டுவாள் என்று நாலு வருஷ காலம் அவளுடன் குடித்தனம் பண்ணின எனக்கா தெரியாது?

ஒரு ஞாயிற்றுக்கிழமை ராஜத்தை அழைத்துக்கொண்டு என் மாமனாரகத்திற்குப் போயிருந்தேன். சாப்பிட்ட பிறகு பேசிக்கொண்டிருக்கும்பொழுது தன் மூத்த பெண்ணைப் பற்றி பேச ஆரம்பித்தார். தன் சம்பந்திகள் உயில்படி இருபது வேலி நிலத்தைப் பிரித்துக்கொடுக்க மாட்டேன் என்கிறார்கள் என்றும், கேஸ் போடுவதைத் தவிர வேறு வழி ஒன்றுமில்லையென்றும் சொன்னார். சொல்லிவிட்டு, "இந்த நாளில் கேஸ் போடுவதென்றால் லேசாய் இருக்கிறதா? இரண்டாயிரம் ரூபாய் இருந்தால் ஒரு கை பார்க்கலாம். ஆனால் பணம் தான் லகுவில் புரளமாட்டேன் என்கிறது'' என்றார்.

"ஆமாம்! பணம் இந்நாளில் அகப்படுகிறது குதிரைக்கொம்பாயிருக்கிறது'' என்று தலையாட்டினேன்.

ஆபீஸ் வேலை கொஞ்சம் வீட்டில் செய்யவேண்டியிருந்தபடியால் ராஜத்தை சாயங்காலம் வரும்படி சொல்லிவிட்டு நான் வந்துவிட்டேன்.

சாயங்காலம் வரும்பொழுது ராஜம் ஒரு பிளாஸ்கில் காப்பியும் ஒரு பொட்டலத்தில் பஜ்ஜியும் கொண்டு வந்தாள். "நீங்கள் டிபன் சாப்பிடாமல் வந்துவிட்டேள் என்று அம்மா ரொம்ப வருத்தப்பட்டுக் கொண்டாள். கிட்டே ஹோட்டல் இல்லையே என்று பிளாஸ்கில் காப்பியும், கொண்டு வந்தேன்'' என்று காப்பியையும், பஜ்ஜியையும் கொண்டு வந்து வைத்தாள். கொண்டு வந்து வைத்துவிட்டு என்னருகில் சிரித்துக்கொண்டு நின்றாள். ராஜம் காரியமில்லாமல் சிரிக்க மாட்டாள் என்று எனக்குத் தெரியும். கெடியாரத்தைப் பார்த்தேன். ஆறரை மணியாயிற்று. சரி, தன்னை சினிமாவிற்கு அழைத்துக் கொண்டு போகவேண்டும் என்று சொல்லுவதற்காகச் சிரித்திருக்கமாட்டாள். எதற்கோ பீடிகை போடப் போகிறாள் என்று நினைத்தேன். ஆனால், அவள் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் என்னைத் தூக்கி வாரிப் போட்டன.

"அப்பா உங்களிடம் அக்கா விஷயமாக கேஸ் போடப்போகிறேன் என்று சொன்னாராமே'' என்றாள்.

"ஆமாம்'' என்றேன்.

"அதற்கு இரண்டாயிரம் ரூபாய் வேண்டுமாம். ஸ்டாம்புக்குக் கட்ட வேண்டுமாம். பணத்திற்கு எங்கே போகிறது என்று திண்டாடுகிறார்'' என்றாள்.

நான் ஒன்றும் பதில் லவில்லை.

"வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவானேன்? நீங்கள் பாங்கில் போட்டிருக்கும் இரண்டாயிரம் ரூபாயை வாங்கித் தரச் சொல்லுகிறேன்'' என்றாள்.

"என்ன! நிஜமாகவா?'' என்றேன் திடுக்கிட்டு.

"ஆமாம்! கண்டவனையும், கேட்டவனையும் போய் பணம் கேட்கிறது" என்றால் அவர் ரொம்ப கூச்சப்படுகிறார். முதலிலே அவர்கூட "ராஜம்! அதெல்லாம் வேண்டாம்! நன்றாயிருக்காது? மாப்பிள்ளை தப்பாக நினைத்துக் கொள்ளுவார்!'' என்றார். எனக்கா உங்கள் குணம் தெரியாது? அதெல்லாம் ஒன்றும் நினைத்துக் கொள்ளமாட்டார்? நான் போய் சொல்றேன். உடனே இரண்டாயிரம் ரூபாய்க்கு ஒரு செக் எழுதிக்கொடுத்து விடுவார் என்று சொன்னேன்'' என்றாள்.

எனக்குக் கோபம் வந்தது. இந்தப் பைத்தியத்தை எனக்காக பிரம்மா சிருஷ்டித்து என் தலையில் கட்டினாரே என்று கோபம் தான்.

"என்ன பேச்சு மூச்சே காணோம். பணம் திரும்பி வருமோ வராதோ என்று பயமா? பணத்தை நானே திரும்பி உங்களுக்கு வாங்கித் தருகிறேன். அப்புறம் என்ன பயம்? பாங்கில் காலே அரைக்கால் வட்டிதானே வருகிறது. அப்பா ஒண்ணரை வட்டிக்கு எழுதித் தருகிறேன் என்கிறார்'' என்றாள்.

"நீ சொல்வதெல்லாம் சரி! கேஸ் தோற்றுப் போய்விட்

டால் என்ன பண்ணுகிறது?" என்றேன்.

"அச்சுப் பிச்சு என்று ஏதாவது உளறாதேயுங்கோ? கேஸ் தோற்றுப் போய்விடுமென்றால் அப்பா கேஸ் போடுவாரா? அவருக்கா இதெல்லாம் தெரியாது? நாலு பேருக்கு அவர் சொல்லிக் கொடுப்பாரே! ஏன் அப்படித் தயங்குகிறேள்? நான் உங்களுக்குப் பணத்தைத் திருப்பி வாங்கித் தருகிறேன் என்றால் என் வார்த்தையில் உங்களுக்கு நம்பிக்கை யில்லையா?" என்று கேட்டாள்.

நான் ஒன்றும் பேசவில்லை. இவ்விஷயத்தைப் பற்றி அதிகம் பேசினால் சண்டை வளரும் என்று பேசாமலிருந்து விட்டேன்.

ராஜத்தின் இம்சை பொறுக்க முடியவில்லை. அவளுக்குக் கோபம் வந்துவிட்டதென்றால் சமையலைப் பற்றி கேட்கவே வேண்டாம். அவளுக்குத் தெரியாமல் ஹோட்டலில் சாப்பிடுவதைத் தவிர வேறு வழியில்லை. நான் பாங்கில் போட்டிருந்த இரண்டாயிரம் ரூபாயை எங்கேயாவது சமுத்திரத்தில் தூக்கி யெறிந்தாலொழிய மன நிம்மதி ஏற்படாது போலிருந்தது. "ஏன் இப்படி ருட்டி அடிக்கிறாய்? இந்தா, தொலைந்து போ" என்று ஒரு செக் எழுதி, கோபத்துடன் விட்டெறிந்தேன்.

கேஸ் இரண்டு வருஷம் நடந்தது. என் மச்சினியின் கேஸ் ஜெயிக்கவேண்டும் என்று ஊரிலிருக்கிற பிள்ளையார்களை யெல்லாம் வேண்டியது யார் என்றால் நான்தான் என்று சொல்லவேண்டும்.

அப்படி யிருந்தும் கேஸ் தோற்றுவிட்டது.

"நான் சொன்னேனே, அப்படியே நடந்துவிட்டது பார்த்தாயா?" என்றேன்.

"ஆமாம்! அவ்வளவுதான் நம்மதிருஷ்டம்" என்றாள் ராஜம்.

"நம் அதிருஷ்டமா?" என்றேன்.

"ஆமாம்! அக்காவிற்கு இருபது வேலி வந்தால் நமக்கு இரண்டு வேலி எழுதிவைக்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்தாள்" என்றாள்.

மேற்படி சம்பவம் நடந்து ஒரு மாதம் சென்றது. என் மாமனார் தன் ஒருவேலி நிலத்தையும் ரொம்ப நல்ல விலைக்கு வருகிறது என்று ஏழாயிரம் ரூபாய்க்கு விற்றார்.

"ராஜம்! உங்கப்பா ஒரு வேலியையும் விற்றுவிட்டாராமே" என்றேன்.

"ஆமாம்! சாதாரண நாளில் நாலாயிரத்திற்கே வாலைப் பிடிக்கும். யாரோ ஒரு துலுக்கன் அந்த ஊரில் எல்லோருடைய நிலங்களையும், வாங்குகிறானாம். அப்பாவின் நிலம் ஒன்றுதான் பாக்கி. ஏழாயிரம் ரூபாய் தருகிறேன் என்றான். அந்த ஏழாயிரத்திற்கு இரண்டு வேலி நிலம் எங்கேயாவது வாங்கலாமே என்று விற்றுவிட்டார்" என்றாள்.

"அப்படி என்றால் அப்பாவிடம் ஏகப்பட்ட பணமிருக்குமே. நம்ப பணத்தைக்கூட அவர் திருப்பிக் கொடுத்து விடலாமே" என்றேன்.

"அப்பாவிடம் இருக்கிற பணம் எங்கே போய்விடப் போகிறது. பாங்கிலிருக்கிற மாதிரிதான்! அவர்கூட நேற்றைக்கு பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடட்டுமா? என்று கேட்டார். நான்தான் வேண்டாம். இப்ப என்ன அவசரம்! மெதுவாக கேஸ் முடிந்த பிறகு கொடுங்களேன்" என்றேன். இந்த கேஸிற்காக ஆயிரம் ரூபாய்போல் வேறு எங்கேயோ கடன் வாங்கி யிருக்கிறார். அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அப்புறம் ஜீவனாம்சத்திற்காக வேறு கேஸ் ஒன்று போடவேண்டுமாம். அதற்கெல்லாம் பணம் வேண்டாமா? ஆகையினால் தான் மெதுவாகக் கொடுங்கள் என்று சொன்னேன்" என்றாள்.

எனக்கு தூக்கி வாரிப் போட்டது! இது மாதிரி உலகத்தில் எந்தப் பெண்ணாவது, புத்தி என்பது கொஞ்சமாவது இருந்தால் சொல்லுமா? என் மாமனார் கெட்டிக்காரர் என்று சொன்னேனே அது பொய்யா? என்னைக் கேட்டால், "சரி, திருப்பி கொடுத்து விடுங்களேன்?" என்று சொல்லுவேன் என்று அவருக்குத் தெரியாதா? ஆகையால் தான் ராஜத்தைக் கேட்டிருக்கிறார்.

எமகாதகப் பிராமணன்! எனக்கு வட்டியே வேண்டாம்! முதலை மட்டும் அவர் திருப்பிக் கொடுத்தால் போதும் என்று தோன்றுகிறது. ஆனால், மாமனாரிடம் கொடுத்த பணம் லேசில் திரும்பி வருமா?

"புத்த பக்தி"
முதலிய வசன கவிதைகள்
கே. ராமநாதன் எழுதியது
விலை அணா எட்டு
நவசக்தி காரியாலயம்
மயிலாப்பூர் சென்னை

# வாசகர் மனங் கவர்வது எப்படி ?

எஸ். சுப்பிரமணியம் எம். ஏ.

கதையை ஸ்வாரஸ்யம் மிகும்படி செய்வது எப்படி என்று நாம் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ளுவதைவிட ஏதாவது ஒரு நல்ல கதையை நீங்களே எடுத்துப் படித்துவிட்டு அக்கதையால் உங்களுடைய உணர்ச்சி எப்படிப் பாதிக்கப் படுகிறது என்பதைப் பார்த்துக்கொண்டால் அநுபவபூர்வமாக நீங்கள் இந்த வழியை அறிந்துகொள்ளுவீர்கள்.

கதாநாயகன் தெய்வீகத் தன்மை யெதுவுமில்லாமல் சாதாரண மனிதனாக மாத்திரம் இருந்து தன் முன்னிருக்கும் இடையூறுகளையெல்லாம் தகர்த்தெறிந்தானென்று நீங்கள் படித்தால் உங்கள் மனம் எவ்வளவு சந்தோஷமடைகிறது! அதேமாதிரி கதையில் 'சகுனிமாமா' வேலைசெய்யும் போக்கிரி ஒருவன் கதாநாயகனை வீழ்த்த விரும்பிச் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் வீணாகிறபோது நீங்கள் எவ்வளவு மகிழ்ச்சி யடைகிறீர்கள்! எவ்வளவுக் கெவ்வளவு கதாநாயகன் வெற்றியடைகிறானோ அவ்வளவுக் கவ்வளவு நீங்களும் சந்தோஷப் படுகிறீர்கள். —ஆனால் ஒன்றே ஒன்று. அந்த இடையூறுகள் மாத்திரம் மனிதனால் கடக்கக் கூடியவையாயிருக்கவேண்டும்; ஏனென்றால் எந்த மனிதனாலும் செய்ய முடியாத ஒரு காரியத்தை ஒரு கதா நாயகன் செய்து முடித்தான் என்று சொன்னால் நீங்கள் அதை நம்பமாட்டீர்கள். எவ்வளவுக் கெவ்வளவு இவ்விடையூறுகள் அதிகரிக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு கதாநாயகனிடம் உங்களுக்குள்ள மதிப்பும் உயர்கிறது; சகுனிமாமாவிடம் உங்களுக்குள்ள வெறுப்பும் அதிகரிக்கிறது. கடைசியில் கதையின் முடிவில்—கதா நாயகன் வெற்றி பெற்றான், சகுனி மாமா வீழ்ச்சியுற்றான் என்று நீங்கள் படிக்கும்போது உங்களுக்குண்டாகும் சந்தோஷத்தை அளவிட்டுக் கூற முடியுமா?

இதிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்வதென்ன? உங்களுடைய கதாநாயகனுக்கு விரோதிகளையும் இடையூறுகளையும் அமைக்க வேண்டும்; அவை சாதாரணமாக எதிர்க்க முடியாதனவாயிருக்கவேண்டும்; ஆனால் அமானுஷ்யமாக இருந்து விடக்கூடாது. அப்பொழுதுதான் உங்களுடைய கதாநாயகனிடத்தில் வாசகர்களுக்கு ஒரு அலாதிப் பிரியமுண்டாகும்.

அப்படியில்லாமல் உங்கள் கதாநாயகன் ஒரு இடையூறுமின்றி தன் ஆசையைப் பூர்த்தி செய்துகொண்டுவிட்டதாக நீங்கள் கதை எழுதுவீர்களானால் அந்தக் கதை கொஞ்சங்கூட ஸ்வாரஸ்யமாகவே இருக்காது.

ஆனால் கதாநாயகனுக்கு முன் அனேக இடையூறுகளை அடுக்கிவைப்பது அருவருக்கத் தக்க விஷயமாகும். உண்மைக்கும் புறம்பாகும். ஆகையால் ஒவ்வொரு இடையூறு வரும்போதும் வாசகர்கள், 'இந்த ஒரு இடையூறைத் தாண்டிவிட்டால் கதா நாயகனுடைய ஆசை பூர்த்தியாகிவிடும்' என்று நினைக்கும்படி அந்த இடையூறு அமையவேண்டும். அந்த இடையூறைத் தாண்டியதும் கதா நாயகனை இன்னொரு இடையூறு குறுக்கிடவேண்டும். அப்பொழுது, "நம் கதா நாயகன் இந்த இடையூறையும் எப்படியாவது தாண்டியாகவேண்டுமே" என்று வாசகர்கள் கதாநாயகனுக்காகக் கவலைப்படுவார்கள். அந்த இடையூறைத் தாண்டியதும், "அப்பாடா! நல்லவேளை," என்று தங்களுக்குள் முணுமுணுத்துக் கொள்ளுவார்கள்.

இந்த இடையூறுகளைப் பற்றியும் அவைகளைக் கதா நாயகன் எப்படித் தகர்த்தெறிந்தான் என்பதைப் பற்றியும் வெறுமனே சொன்னால் மாத்திரம் போதாது. ஏனென்றால் வாசகர்கள் எதையும் கேட்டு அறிந்துகொள்ளுவதைவிட பார்த்துக் கொள்ளவே மிகவும் ஆசைப்படுவார்கள். ஆகையால் அந்த இடையூறுகளைக் கதாநாயகன் எப்படி மீறிச் சென்றான் என்பதை வாசகர்களுக்கும் படம் போல் எழுத்துமூலமாகப் பிடித்துக்காட்டவேண்டும்.

உதாரணமாக, ஒருவன் தன் நண்பனொருவனை வஞ்சகம் செய்ய நினைக்கிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது அவன் மனச்சாட்சி குறுக்கிட்டு, "நீ அப்படிச் செய்யாதே. அவன் உன்னை மிகவும் நேசிக்கின்றான்.

அவனை நீ வஞ்சகம் செய்தால் பாவத்திற்காளாவாய்," என்று அவனுக்குச் சொல்லுகிறது. இங்கே அவனுடைய வழியில் அவன் மனச் சாட்சியே ஒரு முட்டுக் கட்டையாக நிற்கிறது. இது அவனுக்குப் புறம்பான இடையூறல்ல என்பது குறிப்பிடத் தக்கது. அவனுடைய மனச் சாட்சியின் காரணமாக அவன் மனதில் ஒரு பெரும் போர் ஏற்படுகிறது. கதா நாயகன் "இதைச் செய்யலாமா? செய்யலாமா? செய்ய வேண்டாமா?". "இதைச் செய்வோமா? அதைச் செய்வோமா?" என்று திரிசங்கு சுவர்க்கம் போன்ற மனோ சஞ்சல நிலையிலிருக்கின்றான். இங்ஙனம் ஒருவனது மனப் போர் நிலையையும் அதன் முடி

வையும் சித்திரிக்கும் மேனாட்டுச் சிறு கதைகள் பல உலகப் பிரசித்தியுடையனவாயிருக்கின்றன. கை தேர்ந்த சிறு கதை எழுத்தாளர்கள் இத்தகைய கதைகளை எழுதுவதிலேயே தம் முழு கவனத்தையும் செலுத்துகிறார்கள். இத்தகைய கதைகளை ஒருவன் நயப்பட எழுதி முடித்து விட்டானாயின் அவன் சிறந்த சிறு கதை எழுத்தாளன் என்பதில் சந்தேகமேயில்லை.

நாம் எத்தனை கதைகளை அவைகளின் நடைக்காகவே—கதையின் ஸ்வாரஸ்யத்துக்காக அல்ல—திருப்பித் திருப்பிப் படிக்கிறோம்? கதையின் கவர்ச்சி கதை எழுதும் நடையிலுமிருக்கிறது என்பது இதிலிருந்து தெரிகிறதல்லவா? கரடு முரடான—பண்டிதர்களுடைய—தமிழில் எழுதினால் கட்டாயம் கதை பிரசுரமாகாது. எளிய சொற் பிரயோகங்களும் அழகிய வாக்கியங்களுமே மனதைக் கவர வல்லன. ஆகவே சிறு கதைக்கு எடுத்தது இனிய, எளிய நடையாகும்.

ஒரு கதையானது சிறந்த சிறு கதையென்று உலகத்தவரால் கொண்டாடப்பட வேண்டுமென்றால் அது படிப்பவர்களுடைய மனதில் உணர்ச்சி வெள்ளத்தைப் பெருக்கவேண்டும். ஆனால் புது எழுத்தாளர்கள் இப்படிப்பட்ட கதைகளை எழுதுவது சிரமமான காரியம். ஏனென்றால் அவர்கள் இன்னும் வாழ்க்கைச் சமுத்திரத்தில் நன்றாக அடிபட்டு அனுபவப்படவில்லையல்லவா? அதனால்தான். ஆனால் நாளடைவில் அவர்கள் மாத்திரம் தங்கள் ஐம்புலன்களையும் நன்றாக உபயோகித்து வருவார்களானால் கட்டாயம் சிறந்த சிறு கதைகள் எழுதத் தொடங்கிவிடுவார்கள் என்பது நிச்சயம்.

மனதில் உணர்ச்சி வெள்ளத்தைப் பெருக்கக்கூடிய கதைகளை எப்படி எழுதுவது என்று கேட்டால் அந்தக் கேள்விக்கு பதில் கூறுவது எளிதல்ல. நல்ல கதைகளைப் படித்து அக் கதாசிரியர்கள் எப்படி யெப்படி நம்முடைய மனதில் உணர்ச்சியைப் பெருக்குகிறார்கள் என்று அனுபவ பூர்வமாக அறிந்து கொள்ளுவதைத் தவிர இதற்கு வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லை.

மனதிலுள்ள உணர்ச்சியை வெளிக்காட்டுவது ஒருவனுடைய நடத்தையேயல்லவா? ஆகையால் ஒருவனுடைய நடத்தையைப் படம் பிடித்துக் காட்டுவதால் அவனுடைய உணர்ச்சியை ஒருவாறு வாசகர்களுக்குத் தெரிவிக்கலாம். உதாரணமாக, "அவ்வரசன் கண்களில் தீப்பொறி பறக்க குற்றவாளியை நோக்கினான்" என்று கூறினால் அரசன் அச்சமயம் கோபாக்கிராந்தனாயிருந்தான் என்பது வெளியாகிறதல்லவா?

சம்பாஷணையின் மூலமாகவும் உணர்ச்சியை ஒருவாறு காட்ட முடியும். இருவருக்குள் காரசாரமான வார்த்தைகள் பரிமாறப் பட்டால் அவ்விருவரும் விரோதம் பாராட்டுகிறவர்கள் என்று வாசகர்கள் தெரிந்து கொள்ளுவார்கள். அதேபோல இருவர் மிகவும் அன்னியோன்னியமாகப் பேசிக் கொண்டால் அவ்விருவரும் நண்பர்கள் என்று வாசகர்கள் சொல்லாமலே தெரிந்து கொள்ளுவார்கள்.

கதையில் எந்தெந்த நிகழ்ச்சிகளைச் சேர்த்தால் உணர்ச்சி அதிகரிக்கும் என்று அறிந்து அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைக் கதையில் புகுத்துவதும் ஒரு வழியாகும். கதையை ஆரம்பிக்குமுன்னமே கதையின் மூலமாக இன்ன உணர்ச்சியைத்தான் வாசகர்கள் மனதில் எழுப்பவேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டு விடவேண்டும். அந்த உணர்ச்சியை எழுப்புவதற்கு எந்த எந்த நிகழ்ச்சிகளைக் கதையில் சேர்க்கவேண்டுமோ அவைகளைத் தேர்ந்தெடுத்து கதையைக் கோர்வையுடையதாகச் செய்யவேண்டும்.

சுருங்கக் கூறின், கதா பாத்திரங்களின் நடையுடை பாவனைகளின் மூலமாகவும், கதையிலுள்ள ஐம்புல விருந்தின் மூலமாகவும், கதையின் முக்கிய நிகழ்ச்சிகளின் மூலமாகவும், கதாசிரியனின் குறிப்புக்களின் மூலமாகவும்தான் கதையின் உணர்ச்சி வெளிப்படுகிறது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பத்திரிகைகளிலுள்ள சிறு கதைகளைப் படிப்பவர்களில் முக்கால்வாசிப் பேர் பொழுது போக்குக்காகத் தான் அவைகளைப் படிக்கிறார்கள். ஆகையால் சிறு கதை எழுத்தாளர்கள் தங்களிடமிருந்து வாசகர்கள் விரும்புவதும் எதிர் பார்ப்பதும் நல்ல கதையையே என்பதை மறக்கக் கூடாது.

எந்தச் சிறு கதையிலும் கதை யம்சம் இருந்தாகவேண்டும். "இதைச் சொல்வானேன்? சிறுகதை யென்றால் கதை யில்லாமலிருக்குமா?" என்று நீங்கள் கேட்பீர்கள். ஆனால் கதை யம்சம் யில்லாத—வெறும் வார்த்தைகளாலான—கட்டுரைகளை எத்தனை பேர் சிறு கதையென்று நினைத்துக்கொண்டு பத்திரிகாசிரியர்களுக்கு அனுப்புகிறார்களென்று உங்களுக்குத் தெரியுமா? தெரியாதென்றால் உங்களுக்குத் தெரிந்த பத்திரிகாசிரியர் எவரையாவது கேட்டுப் பாருங்கள்.

கதை எப்படி யிருக்கவேண்டும் என்று கேட்டால் அது ஸ்வாரஸ்யம் மிகுந்ததாய் படிப்பவர்களுடைய மனதைக் கவரக்கூடியதாயிருக்க வேண்டும். அது வாழ்க்கையில் நடக்கக் கூடியதாய் அமானுஷ்யமாயில்லாமலிருக்க வேண்டும்.

சிறு கதைக்கு அவசியமானது அடிப்படையான கருத்து என்று சொன்னோம். அந்த அடிப்படையான கருத்தை மாத்திரம் வெளியிட்டால் அது ரஸிக்காது. மக்கள் மனத்தைக் கவராது. ஆனால் அதே கருத்தை ஒரு கதை ரூபத்தில் வெளியிடுவீர்களாயின் அது வாசகர்களுடைய மனத்தில் ஒரு நிரந்தரமான இடத்தைப் பெற்றுவிடும்.

பல நிகழ்ச்சிகளைக் கோர்வையாகச் சொல்லி விட்டால் அது சிறுகதையாகிவிடாது. அவைகளெல்லாம் தனித்தனியாக நில்லாமல் ஒரு கயிற்றால் பிணிக்கப்பட்டிருக்கவேண்டும். அந்தப் பல நிகழ்ச்சிகளில் ஒன்றை எடுத்து விட்டாலும் கதை மூளியாகத் தோன்ற வேண்டும். அந்நிகழ்ச்சிகளை மாற்றியமைத்தாலும் கதையின் ஸ்வாரஸ்யம் வெகுவாகப் பாதிக்கப்பட வேண்டும். அப்படி அந்நிகழ்ச்சிகளையெல்லாம் ஒன்றுபடுமாறு பின்னியமைத்தலே சிறந்த சிறு கதைக்கு அழகு கொடுப்பதாகும்; அதோடுகூட வாசகர்களுடைய ஆவலும் இதனால் அதிகரிக்கும். அனாவசியமாக—கதையை நீளமானதாக்கச் செய்யவேண்டும் என்னும் விருப்பத்தோடு—நிகழ்ச்சிகளைப் புகுத்துதல் கதையின் அழகைக் கெடுக்கும் என்பதும் இதிலிருந்து பெறப்படுகிறது.

நிகழ்ச்சிகளையெல்லாம் அவை நிகழ்ந்தபடியே சொல்லவேண்டுமென்பதில்லை. அடிப்படையான கருத்து வாசகர்களின் மனதில் பசுமரத்தாணிபோல் பதிவதற்கு அந்நிகழ்ச்சிகளை எப்படியெப்படி முன்னும் பின்னுமாக மாற்றியமைக்கவேண்டுமோ அப்படியெல்லாம் மாற்றியமைக்கலாம். வாசகர்கள் கதையைப் படித்து முடித்ததும் அந்நிகழ்ச்சிகள் நடந்த முறையைத் தமக்குத் தாமே தெரிந்துகொள்வார்கள்.

சிறுகதை எழுத்தாளர்களில் சிறந்தவரான 'போ' (Poe)வின் கதைகளை எடுத்துக் கொள்ளுங்கள். அவருடைய கதை ஒவ்வொன்றிற்கும் ஒரு அடிப்படையான கருத்து இருக்கிறது. அக் கருத்தை வாசகர்களுடைய மனதில் பதிய வைப்பதே அவருடைய [illegible]ய நோக்கம். அவர் தம் [illegible]தையின் ஆரம்பத்திலேயே அந்த அடிப்படையான கருத்தை நயமாகச் சொல்லிக் காட்டுகிறார். பிறகு முடிவைக் குறிப்பனவான—ஆனால் முடிவை வெளிப்படையாகக் கூறாத—அம்சங்களை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கிக்கொண்டே போகிறார். சிறிதுநேரம் வரையில் இதே ரீதியில் கதை செல்லுகிறது. மெள்ள மெள்ளக் கதையின் உச்சநிலை வருகிறது. அதற்கு வாசகர்களைத் தயார் செய்வதற்கு வேண்டியனவற்றையெல்லாம் அவர் கொஞ்சங் கொஞ்சமாகச் செய்துகொள்ளுகிறார். அந்த உச்ச நிலைதான் கதையின் சிகரம்; கதையின் அடிப்படையான கருத்தைத் தலையில் ஆணி அடித்தாற்போல் கூறுவது அதுவே. அந்நிலை திடீரென வருகிறது; வாசகர்கள் எதிர்பாராதபடி அது அமைகிறது. பின்னர் ஒரு சில வாக்கியங்களில் அவர் விஷயத்தை வாசகர்களுக்கு விளக்கித் தெளிய வைக்கிறார்.

அதாவது, நிகழ்ச்சிகளை அவை நடந்தபடியே எழுதாமல் பின்புறத்திலிருந்து ஆரம்பித்து முதல் நிகழ்ச்சியில் கதையை முடிக்கிறார். ஆகையால் இப்படிக் கதை எழுதுவதற்கு அந்த உச்ச நிலையை முன்னால் நிர்ணயப்படுத்திக் கொண்டு, அதை அஸ்திவாரமாக வைத்து அதன்மேல் கதையாகிய கட்டடத்தைக் கட்ட வேண்டும். கதையில் கூறப் படும் நிகழ்ச்சிகள் மெள்ள மெள்ள உச்சநிலையை நோக்கி வாசகர்களை இழுத்துச் செல்லவேண்டும்.

ஆனால், இப்படிப்பட்ட கதைகளை எழுதுவதென்பது சாமான்யமான காரியமல்ல. ஒருவன் இப்படிப்பட்ட கதை ஒன்றே ஒன்று எழுதினால் கூடப் போதும். அவன் சிறந்த கதாசிரியன் என்பதில் சந்தேகமேயில்லை.

பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் சிறுகதைகளில் பெரும்பாலன குயுக்தியான கதைப் போக்கை யுடையனவா யிருப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம். இப்படிப்பட்ட குயுக்தியான கதைப் போக்கையுடைய சிறுகதை வெகு எளிதில் பிரசுரமாகிவிடும். மனிதர்களுடைய மனோபாவத்தைச் சித்திரிக்கும் கதைகளை ஒருவன் ஆரம்பத்திலேயே எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்புவானேயானால் கட்டாயம் அவனுடைய சிறுகதைகள் திருப்பியனுப்பப்படும். யாரும் முதன்முதலில் குயுக்திக் கதைகளையே எழுதுவது நல்லது.

மாதிரிக் கதை: ரெட்டிக்காரக் கூனன்; யார் முதல்; ரமணியின் தலைவலி; காதல் மணம்.



சோவியத் சிறுகதை

# ராயா என் சோதரி

' பிரோடோபோ போவா '

செஞ்சேனையின் தீரத் தாக்குதல், பாசிசக் காட்டாளர்களால் சமாளிக்க முடியவில்லை. பின் வாங்கி ஓடினர். ஆனால் போகும் வழிகளில் வெடி மருந்துச் சுரங்கங்கள் தோண்டிப் போயினர். செஞ்சேனையை ஒழிக்க வஞ்சனை செய்தனர். ஆனால் அவள்! ராயா. அந்தப் பள்ளிக்கூடம் போகும் பெண்—பத்தாம் வகுப்பு மாணவி. இதைப் பார்த்துவிட்டாள். பனிக்குவியலிலே ஒளிந்து கண்டுவிட்டாள். செஞ்சேனை நாஜிகளைத் துரத்திக்கொண்டு வந்தது. சுரங்கங்கள் புதைக்கப்பட்டுள்ள இடத்தை நெருங்கியது. ராயா பாய்ந்தோடி முன் வந்தாள். இரு கைகளையும் வீசி வராதீர்கள் என்று எச்சரிக்கை செய்தாள். பாசிஸ்டுகள் அவளைச் சுட்டனர். படுகாயம் பட்டது. ஒரு செஞ்சேனை வீரனின் தோளிலே சாய்ந்து அவள் உயிர் துறந்தாள். ஆனால் எச்சரிக்கை செய்து செஞ்சேனையைப் பாதுகாத்துவிட்டாள் அந்த தியாகி"

இது சோவியத் பத்திரிகையிலே வந்த ஒரு செய்தி. இதைப்போலவே தீரச் செயல்களின் வீரவர்ணனைகள், கவிதைகள், கதைகள் பல பத்திரிகைகளிலே வந்தன. பள்ளிக்கூடங்களிலே இவற்றை எல்லாம் திரட்டி வைத்திருந்தார்கள். பத்தாம் வகுப்பு. உபாத்தியாயர் மாணவர்களை ஒரு வியாசம் எழுதும்படி கூறினார். "நமது தேசாபிமான யுத்தத்தில் சோவியத் இளைஞரின் சேவை" என்பதே வியாசத்திற்காகக் குறிப்பிடப் பட்ட விஷயம்.

யூரா பத்தாம் வகுப்பிலே ஒரு மாணவன். அவன் வியாசம் எழுதத் தொடங்கினன். பெரிய எழுத்தில் "ராயா ஜய்ஞேவா" என்று தலைப்புப் போட்டான். தலைப்பைப் பார்த்த உபாத்தியாயர் அதிசயித்தார்.

"யூரா உனக்கு இந்தப் பெண்ணைத் தெரியுமா? அல்லது அவளைப் பற்றிப் படித்திருக்கிறாயா?"

"இல்லை" என்று தயக்கத்துடன் சொன்னான் மாணவன். உபாத்தியாயர் பையனைக் கூர்ந்து நோக்கினர். "சரி எழுது" என்று சொல்லி விட்டுப் போனார்,

மாலையில் மணியடித்தது. பையனால் வியாசத்தை முடிக்க முடியவில்லை. வீட்டில் போய் பாக்கியைப் பூர்த்தி செய்து வருவதாகப் போனான். அனுமதியும் கொடுக்கப்பட்டது.

ஒரு நாள் மாலை. அந்த உபாத்தியாயரைக் கண்டேன். அவர் யூராவின் வியாசத்தைப் படித்துக் காட்டினார். அது வெறும் சொற்களால், எழுத்தால் கட்டிய வியாசமல்ல. பிஞ்சிளம் இதயத்திலே கோபாவேசத்தாலும் எல்லையற்ற பாசத்தாலும் துளும்பும் உணர்ச்சியின் பிரதிபலிப்பு அது. பாலனின் இரத்தத்துடிப்பிலே பதிவான மானுஷிக இதிகாசம். உபாத்தியாயருக்கு நேர் முகமாக வரைந்த ஓவியம்.

ராயா ஜய்ஞேவா என்ற பெண்ணை உனக்குத் தெரியுமா? என்று கேட்டீர்கள். தெரியாது என்று சொன்னேன். அது உண்மை அல்ல, நானும் அவளும் நேற்றுத்தான் விட்டுப் பிரிந்தது போலத் தோன்றுகிறது. வெகு சீக்கிரம் இருவரும் மீண்டும் சந்திப்பது போலக் காண்கிறது.

"ராயா என் சகோதரி கால்யா தான்!"

'கால்யா! உனக்காக மூன்று மாதமாகக் காத்திருந்தேன். இன்னும் காத்திருக்கிறேன். வசந்த காலம் மீண்டும் வந்துவிட்டதாகக் கற்பனையில் எண்ணுகிறேன். இனிய காலை. நீ என் அறைக்குள் குதித்தோடி வருவாய். பழத்தோப்பை பார்த்து நிற்கும் ஜன்னல்களைத் தட்டி என்று திறப்பாய். வெண்கலச் சிரிப்புடன் என் தலை மயிரைக் கலைத்து விஷமம் செய்வாய். என் போர்வையை இழுத்தெறிவாய். வீடெல்லாம் உன் கன்னி மணிக்குரல் முழங்கும். "டே! தூங்கு மூஞ்சி! எழுந்திருடா... நான் பாரு தோட்டத்திலே மூன்று பாத்திகளிலே களை பிடுங்கிவிட்டேன். ஏழு படி பால் கறந்து வாங்கிவிட்டேன். நீ யானால் இன்னும் கும்பகர்ணன் கிட்டே போட்டி போடுறாய்" என்பாள்.

"கால்யா—என் சோதரி!

"அவளைப் பற்றிப் பத்திரிகைகள் எழுதவில்லை... ஆனால் ராயா—கால்யா தான்.

"எங்கள் அம்மா செத்துப் போய் நாட்கள் பல. எங்கள் குடும்பத்திலே மூன்றேபேர். அப்பா—கால்யா—நான். என் தகப்பன் கிராம சோவியத் தலைவர். நாஜிகள் எங்களைப் பிடித்தவுடன் மூவரும் கைதியானோம். எங்களை நிர்வாணமாக்கித் தூக்கு மேடைக்கு விரட்டினார்கள். அப்பா எங்கே தானியக் களஞ்சியம் இருக்கிறதென்பதைச் சொல்லவில்லையாம்...

"அவர் கழுத்திலே தூக்கிடும் சுருக்கு விழுந்தது.

"சொல்வாயா மாட்டாயா" என்று உறுமினர் அவர்கள்.

பதில் இல்லை.

"கால்யா என்னைத் திரும்பிப் பார்த்தாள். வீட்டிலே பேசி விளையாடிக் கொண்டிருக்

கும் போதுள்ள பார்வை. "யூரா பர்ருடா! அப்பா...... ஜவனே சாஸான் போல... ஒரு வீரர்...அவரது பாட்டு உனக்கு நினைவிருக்கிறதா?

"என் கதியின் முடிவின் மணி அடித்துவிட்டது.

நான் அதிசயத்துடன் பார்த்தேன். அவளுக்குப் பித்துப் பிடித்து விட்டதென்று எண்ணினேன். ஒரு பாசிஸ்டுக் கொடியன் அவள் தலையிலே ஓங்கி அடித்தான். இரத்தம்! செவ்விரத்தம் கொட்டியது. அவள் மூச்சு விடவில்லை. தகப்பனைத் தள்ளிவிட்டு அவள் கழுத்திலே சுருக்கு மாட்டப்பட்டது. சொல்லு என்று நாஜி சிப்பாய் கத்தினான். மௌனம். கொடுவாளெடுத்து அவள் மார்பிலே பாய்ச்சினான்...ஒரு கோர சப்தம்—பயங்கர எதிரொலி— என் கண்கள் சுழன்றன. ஒரே இருள் வெளிகவ்வியது.

"நான் உணர்ச்சி பெற்றவுடன் வீட்டிலிருக்கக் கண்டேன். கோரமான அமைதி கண்டு கலங்கினேன். என்னால் அசைய முடியவில்லை... அந்த நிலைமையை எழுதக் கை நடுங்கும். எண்ணம் ஓடவில்லை......திடீரென இலைகள் உராயும் சப்தம். கால்யாவின் குரல் 'யூரா யூரா! தீ! தீ!'

"பைத்தியக்காரன் போலத் துள்ளினேன். கால்யா படுக்கையில் கிடந்தாள். மரணத்துடன் மல்லாடிக் கிடந்தாள். அவள் தலைமாட்டில் எங்கள் தகப்பன் கற்சிலை போல நின்றிருந்தார். ஜனங்கள் சூழ்ந்து நின்றனர். ஒருவர்கூட மூச்சு விடவில்லை.

'யூரா'! இதுதான் கடைசித் தடவையாக என் சகோதரியின் ஆனந்த மணிக் குரல் ஒலித்தது. அவசரமாகத் தலையணை மேலிருந்து தலையை நிமிர்த்தினாள். என்னிடம் தன் கையைக் கொடுத்தாள்; உடனே விழுந்து பிணமானாள்.

"பின்னால் என் தகப்பன் சொன்னார். கால்யா ஏதேதோ பேசினாளாம். "அப்பா! உங்களுக்கு இது போராத காலமல்ல...அவர்களுக்கு, நாஜிப் பேய்களுக்கு இது நாசகாலம் —சாகும் காலம். எங்களுக்காகப் பழிக்குப் பழி வாங்குங்கள்! என்று வீறிட்டாளாம்.

"நான் செத்துப் போனேன் என்று அவள் நினைத்தாளாம். நமது கொரிலாப் படைகள் வந்ததும், நாஜிப் பேய்கள் ஓடிவிட்டதும், கிராமம் மீட்கப்பட்டதும் அவளுக்குத் தெரியாது.

"ராயாவை எனக்குத் தெரியாது என்றேன், அது பொய். அவள் என் சோதரி கால்யா தான். தேச விடுதலைக்காக —சோவியத் புத்தாட்சியைப் பாதுகாக்க உயிரையும் அர்ப்பணம் செய்யத் துடிக்கும்— ஆயிரம்—பல்லாயிரம் உக்ர கன்னிகளின்—சோவியத் வனிதாமணிகளின் பிரதிநிதி தான்.

"ராயா!" கோல்யாவைப் போலவே சந்தோஷமாக ஆடிப்பாடி வாழ்ந்த சுந்தரக் கன்னி நீ. பள்ளிக்கூடத்தை விடுத்து வருங்காலத்தைப் பற்றி எண்ணியிருந்தாய். எல்லையற்ற சந்தர்ப்பங்கள் பிரகாசமான வாழ்வு உன் கற்பனையில் தோன்றியது. உன் தாய்த் திருநாட்டை இதய பூர்வமாக நேசித்தாய். தாய் நாடும் உன்னிடம் பாசம் கொண்டது. தீராத விளையாட்டுப் பிள்ளை நீ சின்னப் பேர்க்கிரிகூட. பெரியவர்கள் 'சின்னக் குழந்தைகள்' என்று சொன்னால் 'அது உங்கள் காலம்' என்று ஆர்ப்பரிப்பாய்.

"இன்றோ! நம் நாட்டிலே ஒரு பயங்கரப் புயல் வீசிறது. நாம் வீரத் தந்தையர் வழி வந்தவர்களல்லவா? என. து சோதரிகள் குண்டுமாரிக் கிடையிலே—வெடிப் புகை மண்டலத்துக் கிடையே காயமுற்ற செஞ்சேனை வீரர்களைக் காக்க விரைந்தனர். நாட்டிற்காக உயிரையும் விடத் துணிந்தனர்.

"ராயா! சாகும் பொழுதல் உன் சிந்தனைகள் தான் என்னவோ! சின்னஞ் சிறு வயதிலேயே ஜீவியத்துக்கு முடிவு கட்டிவிட்டனை. கால்யாவைப் போலவே மாஸ்கோ நகரத்துக்கு உல்லாச யாத்திரை போனோமே அதை எண்ணினாயோ! அல்லது காகஸஸ் தீரத்திலே இளைஞர் முகாம் நடந்ததே! அதை நினைத்தாயோ! மங்கி மறையும் உன் பார்வையிலே கதிர் கொழுத்து ஊசலாடும் பொன் நிற வயல்களின் எல்லையற்ற பரப்பினை, பச்சைப் பட்டெனப் பொலியும் புல்வெளிகளை—அங்கு ஆடித்திரிந்த சிறுவர் கோஷ்டிகளைக் கண்டினாயோ!

"ராயா! என் சோதரி! மனது மரணச் சாயை படிந்த மலர் முகம்—செஞ்சேனை வீரனின் தியாகமுகம் நோக்கியதோ. உன் பேரால் அவன் வஞ்சம் தீர்ப்பான் என்று உன் நெஞ்சம் சஞ்சலம் நீங்கியதோ!

"சோதரி...நிச்சயம்.

"என் தந்தை கொரிலா படையில் சேர்ந்து விட்டார். என்னை அவர்கள் ஏற்கவில்லை. நான் கட்டுப் பாட்டாக இருப்பேன். பள்ளிக்கூடத்தை விடுத்துச் சில நாள் ஆனவுடன் செஞ்சேனையிலே சேருவேன்.

"விரோதியார்" கொள்ளைக்கார பிரபுக்கள், வட்டி வாங்கும் கூலக்குகள், துரோகிகள். நமது பரம்பரை அவர்களைப் பார்த்தே இல்லை. இதனால் தான் அத்தனை ஆவேசம் அவர்கள் மேல்.

"ஆனால் இன்று மனித உருவந்தாங்கிய பேய்க் கூட்டத்தைக் கண்டோம். நேருக்கு நேர் போராடினோம். எதிரிகளைப் பகைக்கும் கலை உணர்ந்தோம்.

"வகுப்பிலேயே இந்த வியாசத்தை முடிக்க எண்ணினேன் முடியவில்லை. மன்னிக்க. நீங்கள் என்னிடம் அன்பு காட்டி

னீர்கள். இனி நான் வர்ளாகிடவேன். பகை! கொதிக்கும் கோபம்! என்னை வீறிடச் செய்கிறது. வஞ்சம் தீர்க்கத் துடிக்கிறேன்.

"தாய் நாடே! நீ எங்களுக்குப் பிறப்பளித்தாய்! தாலாட்டி வளர்த்தாய்! தனமும் கனமும் தந்தாய்! பாலப் பருவமுதல் தியாகத் தொட்டிலிலாட்டி வளர்த்தாய்! நான் உன் புதல்வன். ருஷ்ய மக்களின் புதல்வன்—என்து இன்னுயிரன்பர்களான ஸாயா—கால்யா போன்ற சோதர சேர்தரிகளின் பேரால் சபதம் ஏற்கின்றேன்! வஞ்சம் தீர்ப்பேன்! கொடுமையாக, கருணை காட்டாமல் உடலில் உதிரச் சொட்டுள்ளவரை போராடுவேன்! விரோதி என் ஒரு கரத்தைத் துணித்தாலும் மற்றைக் கரத்துடன் பொருதுவேன். கால் முறிந்தால்—உருண்டுபோய் எதிரியின் குகையில் எறிபாம்புகளால் செண்டாடுவேன், கண்ணிழந்திடில் என் மனக் கண்களால் எதிரியைக் கண்டு மலைவேன். என் லட்சியம் சத்தியமே!"

கிழவரான உபாத்தியாயரால் இதற்குமேல் படிக்கக்கூடவில்லை. அவர் கண்களில் நீர் மணிகள் துடித்தன.


நமது இலங்கை

ஏஜண்டுகள்

★

பூபதி நிலையம்

224 லோயர்ஸ் பிராட்வே

கொழும்பு

---

ப. தம்பித்துரை

நியூஸ் ஏஜண்டு

கச்சேரி ஜங்ஷன்

யாழ்ப்பாணம்

---

எ. எம். பி. மீரா சாயபு

முஸ்லிம் ஹோட்டல்

கண்டி


# கோபம் ஏன்?

ஸி. வி. ராஜகோபாலாச்சாரி

ஜூலை மாதத்திய 'நவசக்தி' இதழில் ஆகஸ்ட் தீர்மானத்தை மாற்றவேண்டிய அவசியத்தைப்பற்றி எழுதினேன். அதைப் படித்த சில நண்பர்கள் என்பேரில் அளவில்லாக் கோபங் கொண்டார்கள். ஒருவர் "ஆங்கில அரசாட்சி உடனே இந்தியாவை விட்டு வெளியேற வேண்டுமென்பதை 'மாற்ற' வேண்டுமா? மகாத்மா காந்தி அடிகள் தலைமை வகித்துச் சாத்வீகப்போர் நடத்த வேண்டுமென்பதை 'மாற்ற' வேண்டுமா? மாறுதல் வேண்டுமாம்! மாறுதல்!! என்று பல கேள்விகள் போட்டுவிட்டு என் பதிலைக் கேட்காமலேயே கோபத்தோடு, எழுந்து போய் விட்டனர். சிலர் கடித மூலமாகவும் இந்த அபிப்பிராயத்தை தெரிவித்திருந்தனர். அவர்களுக்கும் அவரைப் போன்ற அபிப்பிராய முள்ள இதர 'நவசக்தி' வாசகர்களுக்கும் கீழ்கண்ட எனது பதிலை சமர்ப்பிக்கிறேன்.

உண்மையை அறியும் பொருட்டு வாதம் செய்யும்போது கோபங்கொண்டு கட்சிவாதம் செய்தால் உண்மை விளங்குமா? "இந்தியாவை விட்டு ஆங்கில அரசாட்சியை வெளிப்படுத்த சாத்வீகப் பொதுஜன இயக்கம் ஆரம்பிக்கப்படும்,' என்ற பாகந்தான் ஆகஸ்டு தீர்மானத்தில் முக்யமான பாகம். அந்த தீர்மானத்திலடங்கிய இந்த பாகத்தை அமுலுக்குக்கொண்டுவர காங்கிரஸாவது மஹாத்மா காந்தி அடிகளாவது ஒரு இயக்கமும் ஆரம்பிக்கவில்லை. சமீபத்தில் ஆரம்பிக்கப் போவதாகவும் காணப்படவில்லை என்று பட்டவர்த்தனமாக அறிந்த பிறகு அந்த தீர்மானத்தில் பாக்கி நிற்பது என்ன? "இந்தியா பரிபூரண சுயேச்சை அடைய வேண்டும்" என்ற கருத்தே பாக்கி நிற்கிறது. இந்த தேசிய கோரிக்கையை 'லாகூர் தீர்மானம்' கூறுகிறது. இந்த நிலையில், லாகூர் தீர்மானத்திற்கும், ஆகஸ்ட் தீர்மானத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன? அந்த வித்தியாசத்தை விஷயமறியாதவர்களுக்கு நன்கு புரியும்படி 'ஆகஸ்ட் ஸ்கூல்' பேர்வழிகள் ஏன் போதிக்கக்கூடாது? "பேஷாய் புரிந்து விட்டது" என்று கத்தினால் போதுமா? ஆகஸ்ட் ஸ்கூல் பேர்வழி யார்? என்று சர்க்கார் கேட்டதற்கு சிலர் மௌனம் சாதித்தும்' சிலர் நான் இல்லை என்

றும் சொல்லி விடுதலை அடைந்ததின் அர்த்தமென்ன? ராணுவ கண்ட்ராக்டர்கள், யுத்தக்கமிட்டி தலைவர்கள்' இன்னும் பெரிய பெரிய வக்கீல்மார்களும் ஆகஸ்ட் கொள்கையின் மகிமையைப் பாராட்டுவதின் விசேஷமென்ன? அதற்குச் சதமானம் பவதியிடுவதின் விரோதமென்ன? இந்த சந்தேகங்களை விளக்கும்படி கேட்டால் ஆகஸ்ட் ஸ்கூல் பேர்வழிகளில் பலருக்கு கோபம் ஏன் வருகிறது? இந்த ஆகஸ்ட் ஸ்கூல் பேர்வழிகள் கீழ்கண்ட கதையில் வரும் உபாத்தியாயரிடம் பாடம் படித்திருப்பார்களோ என்னவோ?

ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர் ஒரு நாள் "கோபம் கூடாது" "பொறுமை பெருமை தரும்" என்னும் பழமொழிகளை கரும்பலகையில் எழுதி பலவித மேற்கோள்களை எடுத்துக்காட்டி மேற்சொன்ன பழமொழிகளில் அடங்கியிருக்கும் கருத்துக்களை தெளிவுபடுத்தி பிள்ளைகளுக்குச் சுலபமாகப் புரியும்படி போதித்தார். பிறகு பிள்ளைகளைப் பார்த்து "கருத்து புரிந்ததா?" என்று கேட்டார். ஒரு பையன் தவிர மற்ற எல்லாப் பிள்ளைகளும் 'புரிந்தது ஸார்' "பேஷாய் புரிந்தது ஸார்" என்று கத்தினார்கள். கத்தாதிருந்த பையன் எழுந்திருந்து "எனக்குப் புரியவில்லை ஸார்" என்றான். "இந்த சின்ன விஷயம் புத்திசாலியான உனக்கா புரியவில்லை" என்று சொல்லி மறுபடியும் கருத்தை விளக்கினார். பிறகும் "புத்திக்கு எட்டவில்லை ஸார்" என்றான் பையன்.

"உனக்கு புத்திசாலி என்ற கர்வமா? அல்லது புத்தி குழம்பிவிட்டதா? அல்லது இரண்டுமா? இந்த சின்ன விஷயம் புரியவில்லை என்று சொல்கிறாய்! உனக்கு புரியும்படி சொல்ல முடியாது. போ! வெளியே" என்று பிரம்பை எடுத்து 'கோபங் கூடாது' புரிகிறதா? 'பொறுமை பெருமை தரும்' புரிகிறதா? என்று சொல்லிக்கொண்டே பையனை அடித்துத் துரத்தி விட்டார்.

"சொல்வது எளிது. நடப்பது கடினம்." என்று சொல்லிக்கொண்டு அடிபட்ட பையன் ஸ்கூலை விட்டு வெளியேறினான்."

வாசகர்களே! யோசித்துப் பாருங்கள்.




யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு, சென்னை
(234, ராஜா தெருவ. கோவை)


# எழுத்தாளர் எழுச்சி

"கந்தருவா"

கொஞ்ச காலமாகத் தமிழ் நாட்டு எழுத்தாளர்களிடையே மகிழ்ச்சி அளிக்கத்தக்க ஒரு எழுச்சி கிளர்ந்தெழுந்து பரவி வருகிறது. எழுத்தையே பிழைப்பாகக்கொண்ட தொழிலாளிகளின் உழைப்பைக் கொண்டு, பணத்தையே குறிப்பாகக் கொண்ட பிரசுரகர்த்த முதலாளிகள் செழித்தோங்கி வளர' எழுத்தாளர்கள் ஏழ்மையில் கருகித்துவளும் புன்னிலைமை மாற வேண்டும் என்னும் நல்லுணர்ச்சி வலுத்து வருகிறது. சகோதர எழுத்தாளர்கள் எல்லோரும் ஒற்றுமைப்பட்டு இவ்வுணர்ச்சியைப் பின்னும் வளர்த்துக்கொள்ள வேண்டும். தமிழ் மக்களும் எழுத்தாளர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும். இதனால் தமிழ் நாட்டிற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் பெரும் பயன் சித்திக்கும்.

தமிழகத்தில் ஏழை விவசாயியைப் போலத்தான் இளைத்த எழுத்தாளனும் இலக்கியப் பண்ணையில் தொழில் புரிந்து வருகிறான். நெற்றி வியர்வை நிலத்தில்விழ அரும்பாடுபட்டு உழைக்கும் குடியானவன் தான் அறுவடை செய்த தானியத்தைத் தானே விற்று முழுப் பயன் பெறும் வசதியற்றவனாக இருக்கிறான்.

'தரகர்கள்' கருணை காட்டாது போனால் அவன் பொருள்விலை போக் முடியாது. அதைப்போலவே எழுத்தாளனும் தன் உழைப்பின் பயனை பிரசுரகர்த்தர்களின் மூலம் தான் வாசகருலகிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். இந்த நிலைமை மாறவேண்டுமென்று விவசாயியைப் போலவே எழுத்தாளனும்விரும்பத்தான் செய்கிறான். ஆனால் அதற்கான மார்கம் என்னவென்று இருவரும் சிரத்தையுடன் சிந்தித்ததாகத் தெரியவில்லை. மனம் இருந்திருந்தால் மார்க்கமும் ஒன்று ஏற்பட்டிருக்க வேண்டுமல்லவா? விவசாயிகளுக்காயினும் பொருளாதார சாத்திர விற்பனர்கள் முதலியோர் 'கூட்டுறவு சங்கங்கள்' போன்ற சில உபாயங்களைக் காட்டியுள்ளனர். சில சமயம் அரசாங்கமும் அனுகூலமான உதவிபுரிய முன் வருகிறது. கேவலம், எழுத்தாளர்களைக் கவனிக்க யாரிருக்கிறார்கள்? அவர்கள் தான் பிறரை ஏன் எதிர்பார்க்க வேண்டும்? தங்கள் பிரச்சினையைத் தீர்க்கத் தக்கதொரு மார்க்கத்தைத்

நாங்களே ஏன் எண்ணிப் பார்க்கக்கூடாது? தன் கையை விட்ச் சிறந்த உதவி தனக்கு வேறுண்டோ? ஆம். இந்த நம்பிக்கை மட்டும் எழுத்தாளர்களிடையே உதித்து விட்டால், அவர்கள் சங்கடங்கள் பலவும் பகலவனைக்கண்ட பனியென விலகிவிடும்.

தமிழ் நாட்டில் எழுத்தாளர்களின் எண்ணிக்கைக்குக் குறைவில்லை. இப்பொழுது உலவிவரும் தினசரி, வாரப் பத்திரிகைகள், மாதம் ஒரு முறை' இருமுறை வெளியிடுகளே இதற்குப் போதுமான சாட்சி. இந்த எழுத்தாளர்கள் எல்லோரையும் அங்கத்தினர்களாகக் கொண்ட மாபெரும் எழுத்தாளர் ஸ்தாபனம் ஒன்றை நிருமாணிக்க வேண்டும். பெரிய எழுத்தாளர், சிறிய எழுத்தாளர், பழைய எழுத்தாளர், புதிய எழுத்தாளர், இளம் எழுத்தாளர், முது எழுத்தாளர், பட்டம் பெற்ற எழுத்தாளர், பட்டம் அற்ற எழுத்தாளர் என்ற வேற்றுமைகள் ஒழிய வேண்டும். எழுத்தாளர்களிடையே பொறாமைக் காய்ச்சலின்றி பரஸ்பரம் சகோதரபாவம் ததும்பி நிற்க வேண்டும். தங்கள் ஸ்தாபனத்தின் மூலம் எழுத்தாளர்கள் வாசகர்களுடன் நேரிடையான சம்பந்தம் வைத்துக் கொள்ளுதலும் சாத்தியம். பண நெருக்கடியான சமயங்களில் எழுத்தாளர்கள் சொற்ப வட்டிக்குக் கடனுகப் பெற்றுக் கொள்ள தங்கள் ஸ்தாபனத்தின் கண்காணிப்பில் க்ஷேம நிதி ஒன்றை சேமித்துவைத்துக்கொள்ளுதலும் நலம். கலை வளர்ச்சிக்கான விசேஷ பிரசுரங்களை வெளியிடும் பொறுப்பை மேற்கொள்ளுதலும் பயன் தரும். வருடாவருடம் வெளியாகும் இலக்கிய நூல்களில் வகைக்கொன்றாக சிறந்தனவற்றைத் தெரிந்தெடுத்து, அவற்றின் ஆசிரியர்களுக்குப் பரிசுகள் வழங்கி உற்சாகப் படுத்தலும் இயலும். இன்னும் வேண்டிய சேவைகளைச் சாதிக்கவும் முடியும்.

எழுத்தாளர்களுக்கு இவையெல்லாம் பிரமாதமல்ல. தம் கனவை நினவாக்கும் அரிய சக்தி அவர்களிடம உண்டு. அந்த மகத்தான சக்தி, அவர்கள் யாவரும் தூய சகோதர பாவத்துடன் என்று ஒன்று படுகின்றனரோ, அன்றே சித்தியாகும். நவயுக இலக்கிய நம்பி பாரதி,

"ஒன்று பட்டாலுண்டுவாழ்வே
—நம்முள்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்
கும் தாழ்வே"

என்று திட்டமாகக் கூறிவிட்டான. பாரதியின் கவிதா மோகத்தில் மயங்கிக் கிடக்கும் நம் நவயுக எழுத்தாளர்கள் இந்த மகாமந்திரத்தின் கருத்தை உணர்ந்து கொண்டமட்டிலே உய்வு கிட்டிவிடும்.

---

# கடைசி இதழ்

—— சு. ரா. ——

ஸ்ரீகாந்தனுடைய பெயர் பத்திரிகையுலகில் அடிபட்டது. எங்கு பார்த்தாலும் அவனுடைய கதைகளே. இடறி விழுந்த இடங்களிலெல்லாம் அவனுடைய கட்டுரைகளே! மிருக உலகிலும் அவன்பெயர் பிரசித்தியடைந்திருந்தது என்பதற்கு கர்த்தபனின் உதாரணம் ஒன்றே போதும். இவ்வளவிற்கும் அவனுக்கு வயது ஒன்றும் அவ்வளவு அதிகமில்லை. இருபத்தி ஆறு. நவயௌவன எழுத்தாளர்களில் அவனும் ஒருவனாகத் திகழ்ந்தான்.

உள்ளூரில் பத்திரிகை விற்கும் ராதாகிருஷ்ணன் ஸ்ரீகாந்தனுடைய பிராண சினேகிதன். ஸ்ரீகாந்தனுடைய கதைகள்பத்திரிகைகளில் பிரசுரமாவதில் அவனுக்கிருக்கும் பெருமையும், சந்தோஷமும்] வேறுயாருக்கும் இருக்காது.

ஆனால், பாவம்! அவனுக்குத் தமிழில் பேசவோ எழுதவோ தெரியாது. இது ஒரு விஷயத்தில் ஸ்ரீ காந்தனுக்கு சௌகரியமாக இருந்தது.

ஆனால் பெயர் பெற்ற பத்திரிகையான 'ஜனவினோத'னில் மட்டும் அவனுடைய கதைகள் பிரசுரிக்கப்படவில்லை. 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' 'முயற்சி திருவினையாக்கும்,' என்பன போன்ற முதுரைகளை மனதில் கொண்டு, அவன் ஜன விநோதனு'க்கு எழுதிய வண்ணமாகவே இருந்தான். அப்பத்திரிகை ஆசிரியரும் பொறுமையுடன் இவன் எழுதியவற்றை 'டபள்யூ பி. பி. [குப்பைக்கூடை] யில் போட்டு வந்தார்.

'ஜனவினோதன்' மிகவும் உயர்தரமான, மாதமிருமுறை வெளிவரும் பத்திரிகை. தன்னுடைய கதைகள் அதில் பிரசுரிக்கப்படாமலிருந்தும் ஸ்ரீகாந்தன் தன்னுடைய அபிப்ராயத்தில் அதற்கு உயர்ந்த ஸ்தானம் கொடுத்திருந்தான்.

என்றாவது ஒரு நாள் தன் கதைகள் அப் பத்திரிகையில் வெளிவராமல் போகாது என்ற திடமான நம்பிக்கை அவனுக்கு இருந்தது. யுத்தம் வந்தது. அவனுடைய நம்பிக்கை உண்மையாகும் காலமும் வந்தது.

ஸ்ரீகாந்தனின் சகோதரி சென்னையில் வாழ்க்கைப்பட்டிருந்தாள். அவனுடைய

அத்திம்பேர் சென்னைப்பள்ளிக்கூடம் ஒன்றில் உபாத்தியாயராக இருந்தார்.

யுத்தம் வந்து பலருக்குக் கஷ்டத்தை உண்டாக்கியது போல் ஸ்ரீகாந்தன் அத்திம்பேர் விஷயத்திலும் நேர்ந்தது.

சென்னைக்கு அபாயம் நெருங்கியது. விசாகையும், காக்கிநாடாவும் விமானத் தாக்குதலுக்கு உள்ளாயின. சென்னையில் அபாயச் சங்கு அலறியது. உபாத்தியாயர்கள் மூன்றுமாத சம்பளத்துடன் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர்.

சென்னையே காலியாகி விட்டது. முக்கியமான காரியாலயங்களைத் தவிர்த்து ஜன நடமாட்டமே யில்லை.

ஸ்ரீகாந்தன் சித்தூரில் இருந்தான். ஆகவே அவனுடைய அக்காவும் அத்திம்பேர் சங்கரய்யரும் சித்தூருக்கே வந்து விட்டனர்.

அவர்கள் வந்து ஒருவாரமாயிற்று.

பத்திரிகையில் ஒரு விளம்பரம் காணப்பட்டது.

"ஒரு பெரிய கம்பெனியின் கணக்குகளை நிர்வகிக்க ஒரு குமாஸ்தா தேவை. பி. ஏ. வாசித்தவராக இருத்தல் நலம். சம்பளம் ரூபாய் 150 யுத்த அலவன்ஸும் உண்டு. மனுதாரர்கள் நேரில் பார்க்க வேண்டும்."

சங்கரய்யர் ஒரு எம். ஏ. எல். டி. கம்பெனி சென்னையில் இருந்தது. விமானத் தாக்குதலுக்குப் பயந்தால் பிழைப்புக்கு என்ன செய்வது? ஆகவே மேற்படி வேலைக்குப் போக நிச்சயித்தார். எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு புறப்பட்டார்.

*　　*　　*

'ஜன விநோதன்' சித்தூருக்குக் குறிப்பிட்ட தேதிக்கு மூன்று, நான்கு நாட்கள் சென்றே வந்துகொண்டிருந்தன. ஸ்ரீகாந்தனுக்கு பத்திரிகை வருவதற்குள் உயிர் போய் திரும்பிவரும்.

சங்கரய்யர் அம்மாதம் 30ந் தேதி சென்னைக்குச் சென்றார். ஆகவே ஸ்ரீகாந்தன் அவரிடம் "நீங்கள் சென்றதும் முதற் காரியமாக எனக்கு 'ஜனவிநோதன்' நாளை இதழை அனுப்பி விட வேண்டும்" என்று சொல்லி வைத்தான். அவரும் அப்படியே செய்வதாகச் சொல்லிச் சென்றார்.

மே 1-ந் தேதி!

பற்பல கனவுகளைக் கண்டு விட்டு ஸ்ரீகாந்தன் எழுந்தான். பல் துலக்கி காப்பி சாப்பிட்டான். எப்பொழுது ஒன்பது மணியாகும் என்று காத்துக் கொண்டிருந்தான். தபாலாபீசுக்குக் கிளம்பினான்.

அங்கே ராதாகிருஷ்ணனும் இருந்தது இவனுக்கு மகிழ்ச்சியளித்தது. கொஞ்சம் அவனை ஏமாற்ற எண்ணினான். அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை.



அவனுடைய அத்திம்பேரிடமிருந்து ஒரு கடிதமும், 'ஜனவிநோதன்' இதழும் வந்திருந்தன. ஸ்ரீ காந்தனுக்குச் சந்தோஷமும் பெருமையும் தாங்கவில்லை.

"பார்த்தாயா, ராதா! என்னுடைய கதை ஜனவிநோதனில் வந்திருக்கிறது. இந்தத் தடவை எனக்குப் பத்திரிகை வேண்டியதில்லை" என்று சொல்லி அவனைப் பெருமிதத்துடன் பார்த்தான். ராதாகிருஷ்ணனும் சந்தோஷமடைந்தான்.

ஸ்ரீ காந்தன் பத்திரிகையை அங்கேயே பிரிக்கவில்லை. பிரித்தால் யாராவது கண்டு குட்டை உடைத்துவிட்டால் என்ன செய்வது?

வீடுநோக்கிச் சென்று கொண்டிருந்தபோது ஸ்ரீ காந்தனுக்கு ஒரு சந்தேகம் உதித்தது. அவன் அதற்கு முந்தின வாரந்தான் 'ஜனவிநோத'னுக்கு ஒரு கதை எழுதியிருந்தான். 'கடைசி இதழ்' என்ற தலைப்புடன்.

ஒருவேளை தான் ராதாகிருஷ்ணனுக்குப் பொய்யாகச் சொன்னது ஏன் உண்மையிலேயே நடந்திருக்கக் கூடாது? இந்த சந்தேக எண்ணமே அவன் மனதில் உதித்தது. உடனே பத்திரிகைக் கட்டைக் கவனித்தான். என்ன ஆச்சரியம்! அது 'ஜனவிநோதன்— சென்னை' என்ற விலாசத்திலிருந்து வந்திருந்தது.

அவசர அவசரமாக அதைப் பிரித்துப் பார்த்தான். 44-ம் பக்கத்தில் "கடைசி இதழ்" என்ற கதை வெளியாகியிருந்தது.

தன்னுடைய லட்சியம் நிறைவேறியதில் அளவு கடந்த மகிழ்ச்சியடைந்தான். அச் சந்தோஷத்தில் நடுத் தெருவில் மூர்ச்சையாகி விழுந்தான்.

*　　*

மூர்ச்சை தெளிந்த பொழுது தான் கட்டிலிலிருந்து விழுந்திருப்பதை உணர்ந்தான். சந்தேகமில்லாமல் அவன் கண்டது யாவும் கனவில் நடந்திருந்தது.

கண்ணைத் துடைத்துக் கொண்டு கடியாரத்தைப் பார்த்தான். மணி ஐந்தரையாகியிருந்தது. 'விடியற்காலையில் கண்ட கனவு அவசியம் பலிக்கும்' என்று நிச்சயித்துக் கொண்டே எழுந்தான்.

மே மாதம் முதல் தேதி! அன்றைய தபாலில் ஸ்ரீ காந்தனுக்கு ஒரு கடிதம் மட்டும் வந்திருந்தது. "................இன்று 'ஜனவிநோதன்' கிடைக்கவில்லை. நாளைக்குக் கிடைத்தால் வாங்கி அனுப்புகிறேன்.

—சங்கரன்

என்றெழுதி யிருந்தது.

ஸ்ரீ காந்தன் ஏமாற்றத்துடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தான். "நாளைக்காவது கனவு பலிக்காமல் போகுமா, பார்க்கலாம்" என்று நினைத்தான்.

வழியில் ஒரு தினசரியை வாங்கிக்கொண்டான். அதில் முதல் பக்கத்தில் இருந்த ஒரு செய்தி அவனுடைய கண்களை உறுத்திற்று. கொட்டை எழுத்தில் காணப்பட்ட அந்த விளம்பரம் அவனுடைய லட்சியத்தைத் தகர அடித்தது.

'ஜனவிநோதன்' பத்திரிகை யுத்த காரணங்களை முன்னிட்டு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்,

அவனுடைய இலட்சியச் சிதைவும் தற்காலிகமாய்த் தான் இருக்கும் என்று நம்பலாம்.

---



யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, சென்னை.
(234, ராஜா தெரு, கோவை)

# புகசெவ் புரட்சி

புஷ்கின் எழுதிய நவீனம்

த. நா. குமாரஸ்வாமி மொழி பெயர்த்தது

"வாஸ்தவந் தான். உன் ரத்தத்தைச் சிந்தி, இந்த அவமானத்திற்கு நீ பிராயச்சித்தம் செய்துதான் தீர வேண்டும். ஆனால் கொஞ்ச நாள் வரைக்கும் அவர்கள் நம்மேல் 'நிக்ா'வர்கத்தான் இருப்பார்கள். அதனால் நாம் இப்போது ரொம்ப சிநேகிதமாக இருப்பதுபோல் பாசாங்கு பண்ணவேண்டும். போய் வா" என்றாள் ஸாப்ரின்.

ஒன்றுமே நடக்காதது போல் அவரவர்கள் அவரவர் காரியத்தைக் கவனித்து வந்தோம். காப்டன் வீட்டுக்குத் திரும்பிவந்து நான் முன்போலவே மேரியா இவானவ்னா அருகில் வந்து அமர்ந்தேன். இவான் குஜமிச் வீட்டில் இல்லை. வாஸிலிஸா இகரவ்னா வீட்டு வேலையில் ஈடுபட்டிருந்தாள். மேரியா இவானவ்னா என்னைச் சற்றுக் கடிந்து கொள்வது போல் செய்து, "ஸாப்ரினோடு சண்டை போட்டு விட்டீர்களே என்று எல்லாருக்கும் கவலையாய் இருந்தது. நீங்கள் இரண்டு பேரும் சண்டை போடப்போயிருக்கிறீர்கள் என்று கேட்டதும் என் கைகாலெல்லாம் ஒரேயடியாக ஓய்ந்து விட்டது. மனுஷ்யர்களே ஒரு விந்தை! நாலுநாள் போனால் மறந்து போகக்கூடிய விஷயம்! இதற்காக ஒருவரை ஒருவர் கொல்லப் பார்ப்பானேன்! உயிரைத் தான் விடுவானேன்! புத்தி இப்படியா கெட்டுப் போக வேண்டும்! எத்தனை பேருக்கு இதனால் வருத்தம்!—ஆனால் எனக்கென்னவோ நீங்கள் முதலில் சண்டை போட்டிருக்க மாட்டீர்கள், அலெக்ஸி இவானிச் பேரில்தான் தப்பு என்று தோன்றுகிறது." என்றாள்.

"மேரியா! ஏன் அப்படித் தோன்றுகிறது, உனக்கு?"

"ஏனோ எனக்கே தெரியவில்லையே......அவன் எல்லாரையும் ஏளனம் பண்ணுகிறான். அவனைக் கண்டால் எனக்குப் பிடிக்கவேயில்லை; வெறுப்பாகக்கூட இருக்கிறது. ஆனால் என்னைக் கண்டால் அவனுக்குப் பிடிக்கவில்லை என்று சொல்ல முடியாது. அப்படிப்

பிடிக்கவில்லை என்று தெரிந்தால் எனக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். இதுதான் எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது.''

"பின்னே உனக்கு என்ன தோன்றுகிறது? மேரியா இவானவ்னா? அவனுக்கு உன் மேல் ஆசை என்கிறாயா?''

மேரியா பதில் சொல்ல முடியாமல் சற்றுத் திக்குமுக்காடினாள். அவள் முகம் சிவந்து விட்டது. அவள், "எனக்கு என்னவோ ..........அப்படித்தான் படுகிறது'' என்றாள்.

"ஏன் அப்படி?''

"ஏன்? என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளும்படி என்னைக் கேட்டிருந்தான்.''

"உன்னையா?—எப்போது?''

"போன வருஷம் நீங்கள் வருவதற்கு இரண்டு மாதம் முன்னால்?''

"நீ ஒப்புக்கொள்ளவில்லை—அதுதானே?''

"உங்களுக்கு எப்படித் தெரிந்தது? அலெக்ஸி இவானிச் என்னவோ கெட்டிக்காரன்தான்; பணக்காரன்கூட. கௌரவமான குடும்பத்தில் பிறந்த பையன். ஆனாலும் மாதாகோயிலில் எல்லோர் எதிரிலும் அவனை முத்தமிடுவதென்றால் ஊஹும்........முடியவே முடியாது........நான் ஒப்புக்கொள்ளவே முடியாது என்று சொல்லி விட்டேன்.''

அவள் இதைச்சொன்னதும் எனக்கு விஷயம் விளங்கி விட்டது. 'ஏன் அவன் அடிக்கடி அவளைத் திட்டி ஏளனம் பண்ணுகிறான்' என்று இப்போது புரிந்து விட்டது. சண்டைக்குக் காரணம் அவன் அவளை இழிவாய்ப்பேசியதுதானா அவனுடைய எண்ணம் இன்னும் தெளிவாயிற்று. விளையாட்டாக அவன் ஏளனம் செய்யவில்லை. அவள் பெயரைக் கெடுக்கவேண்டுமென்ற நோக்கத்துடனேயே அப்படிச் செய்தான் என்பது புரிந்து விட்டது. "இந்தப் போக்கிரிப் பயலைத் தண்டித்தே தீரவேண்டும்' என்று ஆத்திரம் பொங்கி வந்தது எனக்கு. தகுந்த சந்தர்ப்பத்துக்காகத்தான் காத்திருந்தேன்.

அதுவும் கிட்டியது மறுநாள் காலை 'கையறுநிலை' ஒன்று எழுதிக்கொண்டிருந்தேன். சந்தம் சரியாக அமையவில்லையே என்று பேனாவைக் கடித்துக்கொண்டே சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன். அப்போது ஸாப்ரின் வந்து என் அறைக் கதவைத் தட்டினான். பேனாவைப் போட்டுவிட்டுக் கத்தியை எடுத்துக்கொண்டு அவனோடு வெளியே புறப்பட்டேன்.

ஸாப்ரின், "இன்னும் நீடித்துக்கொண்டு போவானேன். இதுதான் சமயம்; நம்மை யாரும் கவனிக்கவில்லை. நதிக்கரையோரம் போகலாம், வா. அங்கே யாரும் வந்து தடை செய்யமாட்டார்கள்.'' என்றான.



இருவரும் மௌனமாக நடந்து சென்றோம். ஒரு செங்குத்தான பாதை வழியாக ஆற்றங்கரையை வந்தடைந்தோம். இரண்டு பேரும் கத்தியை உருவினோம். ஸாப்ரின் கத்திச் சண்டையில் என்னைவிடக் கெட்டிக்காரன். ஆனால் எனக்குத் தைரியமும் பலமும் அவனைவிட அதிகம். மசே பேப்ரே அதிலே சில நுட்பங்கள் எனக்குக் கற்றுக் கொடுத்திருந்தார். நானும் அவைகளை வைத்துக்கொண்டு என் சாமர்த்தியத்தைக் காட்டினேன். சத்துரு, இப்படித் தோற்காமல் சண்டை போடுவேன் என்று எதிர்பார்க்கவேயில்லை. இரண்டு பேரும் ஒருவரையொருவர் தாக்க முடியாமல் சண்டையிட்டுக் கொண்டிருந்தோம். கொஞ்ச நேரம். கடைசியில் சாப்ரின் சோர்ந்து விட்டான். ஆட்டங்காட்டிக்கொண்டே அவனை ஆற்றிலே தள்ளிக்கொண்டு வந்து விட்டேன். அப்போது என்னை யாரோ பெயரிட்டழைப்பது கேட்டது. திரும்பிப் பார்த்தேன்—ஸாவேலிச்! அவன் அந்தச் செங்குத்தான பாட்டையில் ஓடிவந்துகொண்டிருந்தான். அதே சமயம் என் வலப்பக்க மார்பில் கத்தி பாய்ந்தது. அப்படியே மூர்ச்சையாகி விழுந்தேன்.

நஞ்சன்கூடு பல்பொடி
I. D. L. G. மெடிகேடட்
பல் வியாதிகளைத்தடுக்கவும், குணப்படுத்தவும்
ஊக்கம், உற்சாகம் ஊட்ட
அஜீர்ண, பித்த சமனி
உஷ்ண சமனி
கூலாயில்
ஸ்நான தைலம்

# ஐந்தாம் அத்தியாயம்

## காதல்

"அழகின் சிறந்த நங்காய் நங்காய்! அறிவை இழந்தே இவ்வாயில்
மயலுற்(று) அலையா(து) இருந்திடுவாயே, வனப்பிற் சிறந்த இளநங்காய்!
அகத்தில் உறையும் பெரியோர் அனைவர் உளமும் மகிழ(து) இருந்திடவே,
மனைத்தின்போது அவரடி பணிந்து மகிழ்வுறும் வண்ணம் செய்திடுவாய்.
அறிவும் பொறுமையும் நிறைவும் கொண்டு அனைவரும் போற்ற விளங்கிடுவாய்."
"என்னைக் காட்டிலும் நன்றாய் இருப்பின் என்னை மறந்தே மறைந்திடுவாய்!
இன்றேல் என்னை உன்றன் மனத்தில் என்றும் இருந்திட முயன்றிடுவாய்!"

— உழவர் பன்ஞ

ஸ்மரணை வந்தபோது கொஞ்ச நிமிஷம் வரை, "எங்கே இருக்கிறோம்? எனக்கு என்ன நேர்ந்தது?" என்று ஒன்றும் புரியவில்லை. முன்னால் பார்த்திராத ஏதோ ஓர் அறையில் படுக்கையில் கிடந்தேன். உடம்பு மிகவும் பலஹீனமாக இருந்தது. ஸாவேலிச் கையில் ஒரு வர்த்தியுடன் நின்றிருந்தான். யாரோ மெதுவாக என் மார்பின் மேலும் தோளின்மேலும் இருந்த கட்டுகளை அவிழ்த்துக்கொண்டிருந்தார்கள். நிதானமாக எனக்கு நினைவு வந்தது. துவந்துவ யுத்தம் ஞாபகத்துக்கு வந்தது; காயம் பட்டுவிட்டது என்று அறிந்துகொண்டேன். அதேசமயம் கதவு திறக்கும் சப்தம் கேட்டது.

யாரோ மெல்ல 'எப்படி இருக்கிறது?' என்று வினவினார்கள். அந்தக்குரல் கேட்டதும் என் உடல் புளகமுற்றது.

ஸாவேலிச் பெருமூச்சு விட்டுப் பதில் சொன்னான்.

"அதே மாதிரிதான்; இன்றைக்கு ஐந்து நாளாகின்றன; இன்னும் பிரக்ஞை வரவில்லையே!"

நான் முகத்தைத் திருப்ப முயன்றேன். முடியவில்லை. மிகவும் சிரமப்பட்டு, "எங்கே இருக்கிறேன்? யார் அது கூட?" என்று கேட்டேன்.

மேரியா இவானவ்னா என் படுக்கையண்டை வந்து குனிந்து, "எப்படி இருக்கிறது" என்று கேட்டாள்.

மிகவும் மெதுவாக, "நல்ல வேளை! நீ மேரியா இவானவ்னா தானே? சொல்லு" என்றேன். அதற்குமேல் பேச முடியவில்லை. கம்மென்று இருந்தேன். ஸாவேலிச் சந்தோஷம் பொங்க "ஸ்மரணை வந்துவிட்டது. ஆண்டவன் தயவுதான் என் கண்ணே! பீட்டர் ஆண்ட்ரிச்!—இந்த அஞ்சு நாளாக எனக்கு வாயிலே பல்லிலே ஈரமில்லை. எப்படித் திகில் பட்டுக்கொண்டு இருந்தேன், தெரியுமா?" என்று கூவினான்.

அப்போது மேரியா இவானவ்னா குறுக்கிட்டு "அதிகமாகப் பேசாதே ஸாவேலிச், இன்னும் அவருக்கு உடம்பு பலஹீனமாக இருக்கிறது." என்று சொல்லிக் கதவைமூடிக்கொண்டு வெளியே சென்றாள்.

என் மனத்தில் பெருங் குழப்பம் மூண்டது. 'அப்படியானால் நாம் இப்போது காப்டன் வீட்டில் தான் இருக்கிறோமா? மேரியா இவானவ்னா இங்கே வந்திருந்தாளே! ஸாவேலிச்சை விசாரிக்கலாமா?' என்று எண்ணினேன். அவன் காதை மூடிக்கொண்டு தலையை அசைத்தான். சாப்பிட்டுப் போய்க் கண்ணை மூடிக்கொண்டேன். விரைவிலேயே கண்ணயர்ந்து விட்டேன்.

எழுந்ததும் ஸாவேலிச்சை கூப்பிட்டேன். அவனுக்குப் பதில் மேரியா இவானவ்னா அங்கே வந்தாள். தேவகானத்தைப் பழிக்கும் இன்குரலில் என்னை விசாரித்தாள். என் உடலும் உள்ளமும் ஆனந்தத்தால் பூரித்தன. அவள் கரங்களைப்பற்றித் திரும்பத் திரும்ப முத்தமிட்டேன். ஆனந்தக் கண்ணீர் பட்டு நனைந்தன அம்மலர்க் கரங்கள். மாஸா கையை இழுத்துக் கொள்ளவில்லை......சட்டென்று அவள் மெல்லிதழ்கள் என் நெற்றியில் படிந்தன. அவள் ஆவலுடன் ஈந்த முதல் முத்தத்தை அதில் நுகர்ந்தேன். மார்பில் மின்னல் விளையாடி மறைந்தது.

நான் அவளை நோக்கி "மேரியா இவானவ்னா, எனக்கு இன்பம் ஊட்ட உன்னால் மட்டுமே ஆகும்; என் கோரிக்கையை ஈடேற்று வாயா?" என்றேன்.

அவள் தன்னை சமாளித்துக்கொண்டு, "பகவான் அருள் இருக்கட்டும்; உடம்பை அலட்டிக்கொள்ளாதீர்கள்!" என்று சொல்லித் தன் கையை இழுத்துக்கொண்டு, "இன்னும் உடம்பு சரியாகவில்லையே! காயம் ஆறவில்லையே! கட்டு அவிழ்ந்துவிடப் போகிறது. ஜாக்கிரதை!" என்றாள்.

என் உள்ளத்தில் இன்பம் நிலவியது. அம்மொழிகளைக் கேட்டதும், பின்பு அவள் வெளியே சென்றாள். அவளை நாம் அடைய முடியும்! அந்தப் பாக்கியம் கிட்டும்! இந்த இன்பமே எனக்கு உயிரும் உணர்ச்சியும் ஊட்டியது. என் உடலும் உள்ளமும் அதில் லயித்திருந்தன.

அது முதல் உடம்பு குணமாகத் தொடங்கியது; கோட்டையில் வைத்தியர் எவரும் இல்லை. பட்டாளத்தைச் சேர்ந்த நாவிதன்தான் எனக்குச் சிகிச்சை செய்துவந்தான். என்னுடைய நல்லகாலம், சிரமப்படவேண்டியிருக்கவில்லை. இளவயசு ரத்தத்திமிர். தானாகவே விரைவில் உடம்பு குணமாகி எழுந்தேன். காப்டன் குடும்பத்தார் எல்லோருமே என்னை அக்க

ரையாகக் கவனித்து வந்தார்கள். மேரியா இவானவ்னா சதா என் அருகிலேயே இருந்து வந்தாள். மறுபடியும் சந்தர்ப்பம் வந்தபோது, என் மனசில் இருப்பதை வெளியிட்டேன். மேரியா இவானவ்னா நான் சொன்னதையெல்லாம் கேட்டாள். வீண் பிகு ஒன்றும் பண்ணிக்கொள்ளாமல் தானும் என்னை நேசிப்பதாகக் கூறினாள். "என் தாயாருக்கும் தகப்பனாருக்கும் நான் சுகமாக இருந்தால் போதும். அதுவே திருப்தி. ஆனால் உங்கள் அப்பா அம்மா ஏதாவது ஆக்ஷேபிப்பார்களோ என்னவோ" என்றாள். நான் சிந்தையில் மூழ்கினேன். அம்மாவுக்கு என்மேல் எப்போதும் பிரியம். அதனால் அவளைப் பற்றி இப்போது அக்கறை இல்லை. ஆனால் அப்பா போக்கு ஏற்கனவே தெரிந்தது தானே! அவருக்கு இந்தக் காதலின் மர்மம் எப்படி விளங்கும். இந்த விஷயத்தில் அவரைத் திருப்தி செய்வது என்பது ஆகாத காரியம். இதை மேரியா இவானவ்னாவிடமும் சொன்னேன். ஆனாலும் விஷயத்தை நன்றாக விளக்கி அப்பாவுக்கு ஒரு கடிதம் எழுதி அவர் அனுமதியையும் ஆசியையும் கோரலாம் என்று எண்ணினேன். கடிதத்தை வரைந்து மேரியா இவானவ்னாவுக்குக் காட்டினேன். உள்ளத்தை உருக்கும்படி அவ்வளவு சமத்காரமாக இருந்தது அவளுக்கு. அதனால் பலன் ஏற்படும் என்பதில் அவளுக்கு எள்ளளவும் சந்தேகமே இல்லை. அவளோ ஒன்றும் அறியாதவள். என்மேல் இருந்த காதலில் இதைச் சகஜமாக எண்ணி விட்டாள்.

உடம்பு சற்றுச் சொஸ்தமானதும் ஷாப்ரினுடன் சமாதானமாய்ப் போய் விட்டேன். இவான் குஜமிச் எங்களுக்குள் நடந்த துவந்துவ யுத்தத்தைப் பற்றிக் கண்டித்துவிட்டு, 'பீட்டர் ஆண்ட்ரிச்! உன்னைக் கைது செய்திருக்க வேண்டும் நான்; இப்போது நீ பட்ட பாடே போதும் என்று பார்க்கிறேன். ஆலெக்ஸி இவானிச்சை உக்கிரான அறையில் அடைத்து வைத்திருக்கிறோம். வாஸிலிஸா இகரவ்னா அவன் கத்தியைப் பூட்டி வைத்துவிட்டாள். சற்று ஆய்ந்தோய்ந்து பார்த்ததும் தானாகவே மன்னிப்புக் கேட்டுக்கொள்வான் பையன்" என்றார்.

அப்போது எனக்கு இருந்த இன்பத்தில் என் மனசில் விரோதத்துக்கு இடமே இல்லை. நான் ஷாப்ரினுக்காகப் பரிந்து பேசி அவனை மன்னித்துவிடும்படி கோரினேன். காப்டனுக்கு ஏற்கனவே இளகிய மனசு. அவர் தம்முடைய மனைவியின் சம்மதத்தைக் கேட்டுக் கொண்டு விட்டுவிடுவதாகச் சொன்னார். ஷாப்ரின் என்னைக் காண வந்தான். நடந்ததைக் குறித்து தான் உள்ளூற வருந்துவதாகத் தெரிவித்தான். தன் பேரில்தான் முழுப்பிசகும் என்று ஒப்புக்கொண்டான். 'போனதையெல்லாம் மறந்து விடு, தம்பி' என்று என்னைக் கேட்டுக்கொண்டான்.

விரோதத்தை மேன்மேலும் வளர்ப்பது என் சுபாவமல்ல. நானும் எங்களுக்குள் நேர்ந்த சச்சரவையும் எனக்குக் காயம் பட்ட விஷயத்தையும் அறவே மறந்து மனப்பூர்வமாக அவனை மன்னித்து விட்டேன். மாஸர்வை அவன் முன்னே பழித்ததற்குக் காரணம் இப்போது புரிந்து விட்டது; தன்னை அவள் மதிக்கவில்லையே என்ற ரோஷத்தோடு காதல் கைகூடாத்தால் எந்த விதத்திலாவது அதற்குப்பழி தீர்த்துக்கொள்ள வேண்டும், என்ற குரோதமும் சேர்ந்தால் கேட்பானேன்? அதனால்தான் பாவம் துரதிர்ஷ்டசாலி என்று என் இகலனை அவ்வளவு எளிதில் மன்னித்து விட்டேன், சில தினங்களுக்குள்ளாகவே உடம்பு குணமாகி என் விடுதிக்குத் திரும்பினேன். கடைசியாக எழுதிய கடிதத்திற்குப் பதில் எப்போது வருமோ என்று மனோவியாகூலத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். அப்பா அனுமதி அளிப்பார் என்ற நம்பிக்கை என்னவோ இல்லை. இருந்தாலும் மனசில் ஏனோ பயம் துளிக்கூட இல்லை. காப்டனிடமும், அவர் மனைவியிடமும், இதுவரை என் எண்ணத்தை வெளியிடவில்லை. ஆனால் அதைப்பற்றிப் பிரஸ்தாபித்தபோது அவர்கள் ஆச்சரியப்படவேயில்லை, அதோடு, மேரியா இவானவ்னாவோ நானோ அவர்களிடமே ஒன்றையும் மறைக்காமல் பழகி வந்தோம். ஆகவே அவர்கள் விவாகத்துக்கு சம்மதிப்பார்களென்று நிச்சித்தையாக இருந்தேன்.

கடைசியில் ஒரு நாள் காலை ஸாவேலிச் கையில் கடிதத்துடன் வந்தான். அதை வாங்கும்போதே என் கை நடுங்கியது. விலாஸம் அப்பாவின் கையாலேயே எழுதியிருந்தது. விஷயம் ரொம்ப பிரமாதத்துக்கு முற்றிவிட்டது என்று அறிந்து கொண்டேன். ஏனென்றால், அம்மாதான் எனக்கு அடிக்கடி கடிதம் எழுதி வந்தாள். அப்பா கடைசியில் இரண்டொருவரி மட்டுமே வரைவார். உறையைப் பிரிப்பதற்குமுன் விலாஸத்தைப் படிப்பதில் கொஞ்சநேரம் கழிந்தது.

"அன்புள்ள மகன் பீட்டர்

ஆண்ட்ரிச் க்ரீனவ்

பெல்கர்ஸ்கிக் கோட்டை

[illegible]ராண்டிர்க் கையெழுத்தைப் பார்த்து எப்படி எழுதியிருப்பார் என்று ஊகிக்க முயன்றேன். கடைசியில் துணிந்து அதைப்பிரித்தேன். முன்னே சில வரிகளைப் பார்த்ததுமே என் எண்ணம் எல்லாம் மண்ணாய்விட்டது என்று அறிந்து கொண்டேன். கடிதத்தின் சாராம்சம் இதுதான்.

அன்புள்ள மகன் பீட்டருக்கு,

இந்த மாதம் 15-ம் தேதி நீ எழுதிய கடிதம் கிடைத்தது. அதில் நீ மிரணவின் பெண் மேரியா இவானவ்னாவை

மணம் புரிந்துகொள்ள அனுமதியும் ஆசீர்வாதமும் அளிக்க வேண்டுமென்று கேட்டிருந்தாய் அல்லவா? நான் அனுமதியும் அளிக்கப் போவதில்லை, ஆசீர்வாதமும் செய்யப்போவதில்லை. துஷ்டப் பையனுக்கேற்ற தண்டனையை விதிக்கவேண்டுமென்றுதான் ஆத்திரம் வருகிறது. உன்னுடைய அந்தஸ்த்தைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. தேசத்தைக் காப்பாற்றக் கையில் பிடிக்கவேண்டிய வாளை நீ தொடக்கூட லாயக்கற்றவன் என்று அறிந்துகொண்டேன். உன்னைப் போல் கெடுகெட்ட பயல்களோடு சண்டை போடவேண்டுமென்று அதை ராஜாங்கம் கொடுக்கவில்லை. உன்னைப் பெல்கிர்ஸ்கிக் கோட்டையிலிருந்து வேறெங்காவது தொலைவில் மாற்றிவிடும்படி ஆண்டரி கார்லோவிச்சுக்கு எழுதியிருக்கிறேன். அப்போதுதான் உன் திமிர் நீங்கும், உங்களுக்குள் நடந்த அந்த துவந்துவ யுத்தத்தையும் உனக்கு அடிபட்ட விஷயத்தையும் கேட்டது முதல் உன் தாயார் ரொம்பக் கவலையாக இருக்கிறாள்; இப்பொழுது படுத்த படுக்கையாகக் கிடக்கிறாள். கடவுள்தான் உனக்கு நல்லபுத்தி கொடுக்க வேண்டும், அவர் அப்படி அருள் புரிவார் என்ற நம்பிக்கை என்னவோ எனக்கு இல்லாவிட்டாலும் இதுவே என் பிரார்த்தனை,

உன் தந்தை.

கடிதத்தைப் படித்ததும் மனசில் ஒரே யடியாகப் பல எண்ணங்கள் அலைமோதின. "அப்பா இவ்வளவு தயாதாக்ஷிண்யமின்றி நடந்துகொண்டாரே என்று எனக்கு உள்ளூர வருத்தம். மெரியா இவானவ்னாவைப்பற்றி அவர் அவமதிப்பாக எழுதியிருப்பது எனக்கு அநியாயம் அநாவசியம் என்றே பட்டது. பெல்கிர்ஸ்கிக் கோட்டையிலிருந்து மாற்றலாவதை எண்ணக்கூட எனக்குப் பயமாக இருந்தது. ஆனால் எல்லாவற்றையும்விட அம்மாவுக்கு உடம்பு சரியாக இல்லை என்று கேட்டதுந் தான் எனக்கு அதிக வருத்தமாய்ப் போய் விட்டது. ஸாவேலிச்சின் மேல் கோபம் கோபமாக வந்தது. அவன் தான் என் தாய்தந்தையர்க்கு எல்லா விஷயத்தையும் எழுதியிருக்க வேண்டுமென்பதில் எனக்கு ஸந்தேகமே இல்லை. பரபரப்புடன் அந்தச் சிறிய அறையில் உலாவிக்கொண்டே இருந்தேன். அவனெதிரில் போய், "உன்னால்தான் எனக்குக் காயம்பட்டது தெரியுமா? ஒருசமயம் 'யமலோகத்துக்கும்' இதற்குமாக இருந்து பறித்துக்கொண்டு இருந்தேனே இன்னுமா உனக்குத் திருப்தியாகவில்லை. அம்மாவையும் கொன்றுவிடுவாய் போல் இருக்கிறதே! என்று எரிந்து விழுந்தேன் அவன் மேல்.

# சானகி

**ராஜாராவ்.**

"சாதியாவது ஏதடா? சலந்திரண்ட நீரலோ பூதவாசல் ஒன்றலோ பூதம் ஐந்தும் ஒன்றலோ காதில் வாளி காரை கம்பி பாடகம் பொன் ஒன்றலோ?"

சிவவாக்கியர்

அப்போதுதான் நான் ஊரிலிருந்து வந்தேன். பதினாறு மைல் புழுதி ரோட்டில் சைகில் சவாரி. உடம்பு எப்படியிருக்கும்? ரொம்ப அசதியாயிருந்தது. என் சகோதரி கொடுத்த காப்பியை பருகிக்கொண்டே படுத்தேன். அவள் என் அருகில் உட்கார்ந்து ஆயிரம் கேள்விகளை வீசினாள். தூக்கம் கண்ணை 'அமட்டி'யது. அரை குறையாக அவளுக்கு பதில் சொல்லிக்கொண்டே இன்னொரு 'கப்' காப்பி கொண்டு வரச் சொன்னேன். அவள் சென்றாள். 'ஹாய்'யாகப் புரண்டு படுத்தேன். குறட்டை வந்து விட்டது.

நல்ல தூக்கம். 'கிரீச்' என்ற சப்தம். யாரோ எனது அறையின் கதவைத் திறப்பது போலிருந்தது. நான் தலையை திருப்பினேன். கதவு அரை குறையாகத் திறந்திருந்தது. அப்பால் யாரோ நிற்பது தெரிந்தது. உள்ளே வர சங்கோஜம்.

"சரிதான்! யாரோ பக்கத்து வீட்டு ஆசாமி போலிருக்கு"

என்று சொல்லிக்கொண்டே நான் மறுபடியும் குறட்டை விடத் தொடங்கினேன்.

மறுபடியும் 'கிரீச்' என்ற சப்தம். கதவு சிறிது திறந்து மறுபடியும் மூடிக்கொண்டது "சரிதான் யாரோ பக்கத்து வீட்டுக்காரர்" என்று மறுபடியும் நினைத்தேன்.

தெருவிலே கட்டை வண்டிகள் 'கடக் கடக்' என்று செல்லும் சப்தம் கேட்டது. கூரை மேலே சில காக்காய்கள் கரைந்தன. கூரையின் இடுக்குவழியாக சூரிய கிரணங்கள் திருட்டுத்தனமாக எட்டிப் பார்த்தன.

"ராமு! எழுந்திரு! தூங்கிப் போய்விட்டியா?" என்று கூறிக்கொண்டே காப்பியுடன் வந்தாள் எனது சகோதரி.

ராஜாராவ், மைசூரில் பிறந்தவர். பிரான்ஸில் பத்துவருஷம் வசித்தவர். புதுமை எழுத்தாளர். அவர் ஆங்கிலத்தில் எழுதிய இக்கதை புதுமை இலக்கியத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு.

"இல்லியே! விழித்துக் கொண்டுதானே இருக்கேன்" என்று கதவுப் பக்கம் தலையைத் திருப்பினேன்.

கதவு திறந்து மூடிக் கொண்டது. "சீதா! கதவருகில் யார் பாரு" என்றேன்.

அவள் போய்க் கதவைத் திறந்து வாசலில் எட்டிப் பார்த்தாள்.

"ஏண்டி! குரங்கே! ஏண்டி உள்ளே வரப்படாதோ! உள்ளே யார் இருக்கான்னு நினைச்சுண்டிருக்கே! என் தம்பி!" என்றாள்.

"நெசமாவா! அம்மா! நான் உள்ளே வரலாம்னுதான் நெனச்சேன். ராமப்பா அசந்து தூங்கிக்கிட்டிருந்துச்சு. சரி. இப்படி வெளியிலேயே நிக்கலாம்னு நின்னேன்" என்று ஒரு பயந்த குரல் கேட்டது.

"வா! வா" என்று அதிகார தோரணையில் கூறினாள் எனது சகோதரி.

மெதுவாகத் தயங்கித் தயங்கி வந்தாள் அவள். "ஏ! சானகி! என்னடி வெக்கம்! வா உள்ளே!" என்றாள் எனது சகோதரி.

கோவிலுக்குள்ளே செல்வது போல மிகுந்த பயபக்தியுடன் நுழைந்து அரிசி மூட்டைக்குப் பக்கத்தில் மறைவாக உட்கார்ந்தாள் சானகி.

எனது சகோதரி என் அருகில் உட்கார்ந்தாள்." ராமு! சானகி நம்ம வேலைக்காரி!" என்றாள் எனது சகோதரி.

"அப்படியா! என்று சொல்லிக்கொண்டே சானகி இருந்த பக்கம் தலையைத் திருப்பினேன். சானகி முகத்தை மூடிக்கொண்டாள்.

அவளுக்கு வயது நாற்பதுக்கு மேலிருக்கும். முக வாய்க்கட்டையில் சுருக்கம் கண்டுவிட்டது. தலைமயிர் நரைத்துவிட்டது. வாழ்க்கையின் துயரமும் பிறவும் அவள் முகம் காட்டியது.

"இப்படிவா சானகி" என்றேன் நான்.

"இல்லே! பரவாயில்லை! ராமப்பா" என்று மெதுவாகச் சொன்னாள் அவள்.

"கூடாது! இப்படிவா!" என்றேன் நான்.

அவள் சிறிது நகர்ந்தாள்.

"கிட்ட வாயேண்டி குரங்கே!" என்று ஆசிர்வாதம் செய்தாள் என் சகோதரி.

சானகி சிறிது கிட்ட நெருங்கினாள். கலியாணப் பெண் போலே தலையைக் கீழே குனிந்துகொண்டு உட்கார்ந்தாள்.

"என் தம்பியைப் பாரடி! ராஜாமாதிரி இருக்கான்" என்றாள் என் சகோதரி.

"தெய்வமாட்ட இருக்காரு" என்றாள் சானகி.

நான் சிரித்துக்கொண்டே காப்பியைக் குடித்தேன்,

"ஊரே இவரைப் பத்தித்தானே பேசுது" என்றாள் சானகி.

"உன்க்கு எப்படியடி தெரியும்?" என்று கொக்கரித்தாள் என் சகோதரி.

"எப்படியா? ராமப்பா எப்ப வருதோ எப்ப வருதோன்னு இன்ன பகல் முழுவதும் நான் மார்க்கட் பக்கம்தானே நின்னுக்கிட்டிருந்தேன், நீங்கதான் சொல்லியிருக்கீங்களே! அவர் ராசாமாதிரி இருப்பாரு! பிசிக்கிள் வண்டிலே வருவாருன்னு! அப்பறம் தெரியாதா? அங்க நின்னவங்கவங்களெல்லாம் இவர் யாரு! இவர் யாருன்னு என்னண்டு கேட்டாங்க. தெரியாதா! நம்ம இனிசிபேட்டரய்யா மச்சான்" என்று சொன்னேன்.

"அப்பா! எம்மா அளவா இருக்காரு"! என்று சொன்னான் பொட்டிக் கடை குண்டப்பன்.

"ராசாமாதிரி இருக்காரே! என்றாள் தேவடியா சவுடி."

"ராமு! ஊரே உன்னைப் பற்றித்தான் பேசறதாம். ஜாக்கிரதை" என்றாள் என் சகோதரி.

"ஏன்" என்றேன்.

"தெரியாதா? இந்த ஊரிலே ஏவல் வைக்கிறாளாம்" என்றாள்.

நான் சிரித்தேன் "சிரிக்காதே ராமப்பா! இந்தக் கண்ணாலே நான் கண்டிருக்கேன். ராமப்பா! நீ புத்திசாலி. விளக்கு வெச்சு வெளியே போகாதே. மாடுகளெல்லாம் வீட்டுக்கு வந்தப் பறம் வாய்க்காங்கரைக்கிப் போவாதே! அங்கே பேய் பிசாசு இருக்கு" என்றாள்.

என் சகோதரி பயந்து நடுங்கினாள்.

"வாயை மூடடி! கழுதை" என்று கத்தினாள்.

"அம்மா! கோவிச்சுக்காதே!" என்று கெஞ்சினாள் சானகி.

சிறிது நேரம். "அம்மா! ஒரே ஒரு விஷயம் சொல்லட்டுமா?"

"சொல்லு."

"ராமப்பா! அக்காளுக்கு ஒன் பேர்லே ரொம்ப ஆசை. அவங்க கொளந்தெ மாதிரி உன் பேரிலே பிரியம். எப்ப பத்தாலும் உன்னைப் பத்தியே பேசிக்கிட்டிருக்கும்."

"நீ எத்தனை வருஷமா இங்கிருக்கே" என்று கேட்டேன் நான்.

"எவ்வளவு காலமா? பொங்கலோட பொங்கல்."

"இவளை எப்படிக் கண்டு பிடித்தாய்" என்று என் சகோதரியைக் கேட்டேன்.

"ஏன் ராமப்பா? இந்த ஊரிலே எங்கே வேணுமானாலும் கேட்டுப்பாரு. இனிசுபேட்டர் வீட்டுக்கு வேலை செய்ய என்னைப்போல ஒத்தருக்கும் தெரியாது. சானகியா! பசுப்போலே!' என்று தான் எல்லாரும் சொல்லுவாங்க. இனிசிபேட்டர் போல பெரிய மனுசங்க வீட்டுக்கு என்னாட்டமா யாருக்கு வேலை செய்யத் தெரியும்?" அவள் மார்பிலே தட்டிக் கொண்டாள்.

"அப்படியானா! இங்க உள்ள வேலைக்காரங்களிலே நீ தான்

ரொம்ப விசுவாசம் போல இருக்கு'' என்று ஒரு மாதிரியாகச் சொன்னேன் நான்.

"பின்னே! இல்லிங்களா!'' என்று பல்லை இளித்துக் கொண்டே முழங்காலைக் கட்டிக்கொண்டாள் சானகி.

"சரி அப்போ! சானகி! ஒரு நாள் நான் இந்த ஊருக்கு வரேன் என்று வைத்துக் கொள் நான். ரெவினியூ இன்ஸ்பெக்டரில்லை. பத்து பதினைந்து வருஷங்கழித்து வருகிறேன். உன்னை வேலைக்குக் கூப்பிடுகிறேன் என்று வைத்துக்கொள். நீ வேலைக்கு வருவாயோ'' என்றேன் நான்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. சிரித்துக்கொண்டே என் சகோதரியைப் பார்த்தாள்.

"கேக்கறத்துக்கு பதில்'' என்றாள் என் சகோதரி.

ஏதோ புதையல் கண்டவள் போல "ராமப்பா'' என்றாள் அவள்.

"ஏன்...?'' என்றேன்.

"நீ ஒன்றும் சாமானியமா வரமாட்டே! நம்ப ஐயா போலே இனிசுபேட்டராத்தான் வருவே. இம்மாம் படிப்புப் படிச்சுருக்கே! இம்மா அள[illegible]ருக்கே!' நீ இனிசுபேட்டர் ஆகாமோ இருப்பியா? அப்படி வரப்போ நான் வந்து நல்லாத் தான் வேலை செய்வேன்.'' என்றாள் சானகி.

"இல்லே! நான் இனிஸ்பெக்டர் ஆகல்லே! அப்போ'' என்றேன்.

"இல்லேல்லே! நீ இனிசுபேட்டர்தான் ஆவே ராமப்பா! சும்மா சொல்லாதே!'' என்றாள் சானகி.

'ரொம்ப சரி, உன்னை வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டியாவது, நான் இன்ஸ்பெக்டர் ஆகிறேன்'' என்று கூறினேன்.

சானகி எழுந்திருந்து ஓடினாள். அவளை பயமுறுத்தியது எது? ஒன்றுமில்லை. எனது அத்திம்பேர் வந்தார். அவ்வளவுதான்.

வாரத்திலே இரண்டு அல்லது மூன்று நாளைக்கு எனது அத்திம்பேர் சுற்றுப் பிரயாணம் போய்விடுவார். அப்போது சானகிதான் என் அக்காவுக்குத் துணைபடுத்துக் கொள்வாள். அன்று வழக்கம்போல சானகி படுத்துக் கொள்ள வந்தாள்.

கையிலே ஒரு சிறு இலை கொண்டு வந்தாள் அதைப் போட்டுவிட்டு, அவளுக்காக வைக்கப் பட்டிருந்த சோற்றை எடுத்துப் போட்டுக் கொண்டாள்.

இதுவிஷயமாக நான் என் சகோதரியுடன் அடிக்கடி தகராறு பண்ணியிருக்கிறேன்.

"அவள் தாழ்ந்த ஜாதி. நம்மோடுகூட உட்கார்ந்து சாப்பிடக் கூடாது'' என்றாள் அவள்.

"ஏன் கூடாது? அவாளும் நம்மைப்போல இல்லையா? அன்று என்னவோ நீ பிரமாதமாக அவளிடம் அன்பு காட்டுவதாகச் சொன்னியே!'' என்றேன்.

சானகி இருட்டிலே சோற்று உருண்டையை உருட்டி உருட்டி உள்ளே தள்ளிக் கொண்டிருந்தாள்.

"சானகி'' என்றேன்.

"ராமப்பா'' என்றாள்.

"சாப்பிடும்போது ஒரு விளக்கை ஏற்றிவைத்துக் கொள்ளக் கூடாதா''?

"என்ன பிரயோஜனம்'' என்று சொல்லிக்கொண்டே சோற்று உருண்டையை விழுங்கினாள்.

"எதைச் சாப்பிடுகிறாய் என்று கண்ணுக்குத் தெரியாதே!'' என்று சொன்னேன்.

"நான் விளக்கு வெளிச்சத்தைத் தேடறதே இல்லை. சாப்பாட்டைப் பாக்க வேண்டிய தேவை என்ன?'' என்றாள்.

"பின்னே! பாக்கவேண்டாமா?''

"வேண்டியதில்லை ராமப்பா! சோறு இருக்கிற இடம் தெரியுது. மிளகா இருக்கும் இடமும் தெரியுது! போதுமே! விளக்கு ஏன்?''

"ஆமாம் சானகி! வீட்டிலே நீ இப்படித்தான் சாப்பிடறியா?''.

"ஆமா! ராமப்பா'' என்[illegible] துக்கக் குரலில் கூறினாள்.

"ஏன் அப்படி?''

"ஏமெ எண்ணெ விலை ஜாஸ்தி, அதுவும் வேண்டிய அளவு கிடைக்குதில்லே!''

"இருந்தா என்ன? கிடைச்ச மட்டும் கட்டாயம் வாங்கணும்.''

"இல்லை! ராமப்பா! புட்டி மூன்றணா விலை!''

"இவ்வளவு தானே!''



"என்ன ராமப்பா அப்படிச் சொன்னே! மூணு சம்பாதிக்க எனக்கு ரெண்டு நாளாகுமே!"

"இரண்டு நாள்!" என்று ஆச்சரியத்துடன் வாயைப் பிளந்தேன்.

"ஆமா ராமப்பா! மாசம் மூணு ரூபா சம்பளம் எனக்கு" என்று பரம திருப்தியுடன் கூறினாள்.

எங்கேயோ ஒரு மூலையில் ஆந்தை அலறியது. வெகு தொலைவிலே காதுக் கெட்டாத தூரத்தில் உலகம் அமைதியாகக் கண்ணீர்விட்டது.

சிறிது நேரம். "இந்த மூன்று ரூபாய் சம்பளத்திலே இந்தப் பஞ்ச காலத்தில் நீ என்ன பண்ணுவே சானகி" என்றேன்.

"ஒன்னும் பண்ணமாட்டேன். அம்மாகிட்டே விட்டு வச்சுருப்பேன். ஒரு சேலைக்கான பணம் சேர்ந்ததும் சேலை வாங்குவேன்."

"மீதியை!"

"ஏன், என் அண்ணத்தை குழந்தைக்கு ஏதாவது வாங்குவேன்"

"உன், அண்ணன் ஏழையா?"

"இல்லை. ஆனா அந்தக் குழந்தை பேரிலே எனக்கு ஆசை."

என் சகோதரி தூங்கிவிட்டாள். சானகி ஊர் வம்பு அளந்தாள். ஊரில் பலர் வீட்டுக் கதைகளைச் சொன்னாள்,

"ஆமாம் சானகி! யார் யாரைப் பற்றின கதையோ எல்லாம் சொல்கிறயே! உன் கதை என்னா சொல்லேன்." என்று கேட்டேன்.

முதலில் அவள் சொல்ல ஆரம்பித்தாள்.

பக்கத்திலே உள்ள ஒரு கிராமத்தில்தான் அவள் பிறந்தாள். அவள் தகப்பன் நிலத்தை உழுது ஜீவனம் செய்தான்; சானகிக்கு நாலு சகோதரிகள்; இரண்டு சகோதரர்கள். அந்த இரண்டு சகோதரர்களில் மூத்தவன் இறந்தான். இளையவனுண் பீமனே இருந்தான். களக்காட்டில் சானகிக்குக் கலியாணம்.

சானகியின் புருசன். ரொம்ப நல்லவன்- ஒரு நாள்கூட அவன் அவளை அடித்தது இல்லை. அவன் அவளிடத்திலே அவ்வளவு பிரியமாயிருந்தான். ஆனால் ஒரு நாள் நல்லபாம்பு கடித்துச் செத்துப் போனான். என்ன மந்திரம் பண்ணியும் பலிக்கவில்லை. சாகிற காலத்தில்கூட "சானகி" என்று சொல்லிக் கொண்டே பிராணனை விட்டான்.

சானகியின் மச்சான் எல்லாம் உருப்படாப் பயல்கள். மூத்த மச்சான் குடிகாரன். இரண்டாவதவன் தான் சானகி புருசன். -மூன்றாவது பயல் காலி. ஒரு நாள் போலீஸ்காரன் வந்து மூத்த மச்சானைப் பிடித்துப் போனான். குடும்பத்துக்குப் பஞ்சம் வந்தது.

"சாணி முண்டை! உன்னாலே தானடி எங்களுக்குத் தரித்திரம்" என்று எல்லாரும் சானகியைத் திட்டினார்கள். சானகி ஓடி வந்துவிட்டாள்.

இதற்குமேலே சானகியே சொல்வாள் கேளுங்கள்;—

"நான் எங்க அண்ணத்தை வீட்டுக்கு ஓடியாந்துட்டேன். என்ன இருந்தாலும் தங்கை தானே. ஆனா ராமப்பா! நீ உங்க அக்கா பேரிலே பிரியமாயிருக்கிறமாதிரி அவன் எங்கிட்ட பிரியமாயிருக்க மாட்டான்."

"ஏண்டி கள்ளி! அது உனக்குப் பொறுக் கல்லியா?" என்று இடையே இரைந்தாள் என் சகோதரி.

"இல்லேம்மா! இல்லேம்மா!, என்றாள் அவள்.

"சரி! மேலே கதையைச் சொல்லு" என்றேன்.

"எங்க அண்ணன் வீட்டுக்குப் போனேன். அவன் பெண்டாட்டி என்னைக் கண்டாள். உடனே வந்ததே கோவம்! தெருவிலே நின்ன புள்ளையே 'வெடுக்குனு இழுத்துக்கிட்டு உள்ளே போனா!"

"ஏ! இங்க வந்தே" என்று எங்க அண்ணத்தே கேட்டுது.

"எனக்கு இருக்க வீடில்லியே!" என்று சொன்னேன்.

"அடி முண்டே! உன் கரிக்காலை வைச்சுண்டு வீடு கேக்கிறியா! துரதிர்ஷ்டம் பிடித்த பீடை! என்று வைதான்.

நான் அழுதேன்.

"அழு! அழு! நன்னா அழு! ஒரு பிடி சோறுகூடப் போட மாட்டேன்" என்றான்,

"எனக்குச் சோறு வேண்டாம். அண்ணே! மாட்டுக் குடிசையாயிருந்தாலும் போதும் இருக்க இடங்கொடு" என்று கேட்டேன்.

அண்ணனுக்குக் கோபம் போய்விட்டது. "சண்டை போடாதே!" என்றான்.

"இல்லை" என்றேன்.

"சரி! அந்த முன் வீட்டிலே இரு" என்ருன்.

பத்து இருபது வருஷமாச்சு ராமப்பா அந்த வீட்டிலேதான் இருக்கேன். தினம் பொழுது விடிஞ்சா "கழுதை முண்டே!" என்ற ஆசீர்வாதம் தவிர வேறு வார்த்தை என் அண்ணன் பொண்டாட்டி வாயிலே வராது. நானும் காலத்தைக் கழிக்கிறேன்.

"நீயேன் வேறு இடத்துக்குப் போகப்படாது?"

"இல்லே ராமப்பா! என் அண்ணன் குழந்தை சிறுசு இருக்கே அது எங்கிட்ட ரொம்ப ஆசையா இருக்கு. அதுக்காகத்தான் அங்கே இருக்கேன்.

* * *

இரண்டு வருஷங்கள் கழிந்தன. நாங்கள் அந்த ஊரை விட்டுப் புறப்பட்டோம். எங்கள் வண்டியின் பின்னே சானகி கண்ணீருடன் வந்தாள். ஒருவாரமாகவே அவள் அழுகிருள்.

"அம்மா! அம்மா! மறந்துடாதீங்க" என்ருள் சானகி. குரல் தழதழத்தது. கண்ணில் நீர் உருண்டது.

"மாட்டேன்!" என்ருள் என் சகோதரி. அவளும் கண்ணீர் விட்டாள்.

"அவள் மறந்தாலும் நான் மறக்கமாட்டேன் சானகி" என்றேன் நான். நானும் அழுதிருப்பேன். சிறிது நாகரிகமடைந்தவன் அல்லவா!

சானகி விம்மி விம்மி அழுதாள். வண்டி வேகமாக நடந்தது. நடுவிலே ஓர் ஆறு. ஆற்றைக் கடக்க வண்டி இறங்கியது. சானகி கரையில் நின்ருள் கண்ணீருடன். எங்கள் வண்டி அக்கரை சேர்ந்துவிட்டதும் எங்களையே பார்த்துக்கொண்டு சானகி கண்ணீருடன் அக்கரையில் நிற்பது தெரிந்தது. அவள் விம்மி விம்மி அழுங் குரல் என் காதில் ஒலித்தது.






Printed and Published by V. Radhamani at the Navasakti Press 29, ...
Mylapore, Madras. Editor : Sakthidas Subramaniam.